NATIONAL SCIENCE FOUNDATION



වාර්ෂික වාර්තාව 2021

ஆண்டறிக்கை 2021

Annual Report 2021

ජාතික විද්‍යා පදනම

தேசிய விஞ்ஞான மன்றம்

National Science Foundation

தேசிய ஆராய்ச்சி மன்றமானது, அதன் பணிப்பானையினை கடைப்பிடித்து, "நாட்டை கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு" பற்றிய தேசியக் கொள்கைச் சட்டகம" மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகள் (ளுனுபுள) என்பனவற்றுடன் ஒருங்கிணைந்து, அதனது தலைவர் மற்றும் முகாமைத்துவ சபையின் வழிகாட்டுதலின் கீழ் வழி நடத்தப்படும் அதனது ஈடுபாட்டு மிகு பதவியணியினரின் ஆற்றல் மற்றும் உந்துதலுடன் 2021 ஆம் ஆண்டு முழுவதும் தொடர்ந்து முன்னேறி தனது உச்ச பட்ச விளைவளவுகளினை வழங்குகிறது. இந்த ஆண்டுக்கான ஆண்டறிக்கையானது, குறிப்பிட்ட ஆண்டிற்கான செயல் திட்டத்தில் (பக்கங்கள் 28-31). குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் பூரணபடுத்தப்பட்டதன் அடிப்படையில் பதிவுகளினை கொண்டுள்ளது . நிறுவனத்தின் செயல்திறன், எதிர்கால வாய்ப்புகள் மற்றும் தடைகள் பற்றிய தீர்மானத்தினை உருவாக்க ஆர்வமுள்ள தரப்பினருக்கு உதவக்கூடிய வகையில் அவற்றுடன் தொடர்புடைய தகவல்களாவன இந்த அறிக்கையில் 53 வரைகலை விளக்கக்காட்சிகள், 13 அட்டவணைகள், 88 படங்கள், 02 வரைபடம் மற்றும் 07 இணைப்புகளுடன் தரப்பட்டுள்ளன. முழு ஆண்டுக்கான அறிக்கையும் கணக்காய்வு அறிக்கை மற்றும் கணக்காய்வு அறிக்கை தொடர்பில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் கருத்துகளுடன் 160 பக்கங்களைக் கொண்டுள்ளது. வருடாந்த அறிக்கைகள் தயாரித்தல் தொடர்பில் பொது வியாபார முயற்சி திணைக்களத்தின் வழிகாட்டுதல்களின் வடிவமைப்பைப் பின்பற்றி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய விஞ்ஞான மன்றம்
47/5இ மேயிட்லன்ட் பிளேஸ்,
கொழும்பு - 07,
இலங்கை.

தொ.பேசி : +94 112694170
+94 112696771
தொ.நகலி : +94 112694754

மின்னஞ்சல் : dg@nsf.gov.lk

இணையம : www.nsf.gov.lk

: https://www.facebook.com/nsflk/

: https://twitter.com/NSFSriLanka

: https://www.youtube.com/user/NSFSL



உள்ளடக்கம்

தேசிய விஞ்ஞான மன்றத்தின் முகப்புத் தோற்றம் 01

- எங்களைப் பற்றி 03
- சட்டத்தினால் கட்டளையிடப்பட்ட செயற்பாடுகள் 03
- நோக்கு 04
- பணி 04
- இலக்கு 04
- குறிக்கோள்கள் 04
- ஆளுமை சட்டகம் 05

» அமைப்பாண்மை கட்டமைப்பு 07
» முகாமைத்துவ சபையின் விபரங்கள் சுருக்கமாக 08
» பணியாளர் சக்தி 11
» கடந்த 10 ஆண்டுகளுக்கான நிதிச் சிறப்பம்சங்கள் 12
» தேசிய விஞ்ஞான மன்றத்தின் வெளி வள குழாம் 15

தவிசாளர் மீளாய்வு 17

பணிப்பாளர் நாயகத்தின் அறிக்கை 19

- சுருக்கம் ரூ சிறப்பம்சங்கள் 20
- பிரதான செயலாற்றல் சுட்டிகளுடன் செயல்திட்டம் (KPI) 28
- விளைவு/பெறுபேறு அடிப்படையிலான செயல்திறன் மதிப்பாய்வு 32

» விஞ்ஞான தொழில்நுட்ப செயற்றிறன் நிர்மாணம் 32
» விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப தகவல்களினை பிரபலப்படுத்துதல் 51
» விஞ்ஞான தொழில் நுட்ப புத்தாக சுட்டிகளுக்கும் மற்றும் தரவுகளுக்கும் ஒரு அடிப்படையினை வழங்கள 65
» விஞ்ஞானத்தினை பிரபலப்படுத்துதல 69
» துணை செயல்பாடுகள் மற்றும் நிலைத்தன்மை 75
» எதிர்கால திட்டமிடல் அறிக்கை 80

கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்று 83

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 121

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் பின்னூட்டல்கள் 129

இணைப்புக்கள் 135

இணைப்பு 1- முதன்மை நிலை சார் பதவிநிலை உத்தியோகத்தர் 2021 டிசம்பரில் உள்ளவாறாக 136

இணைப்பு 2- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மானியம் வழங்கல் 2021 140

இணைப்பு 3- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மானியம் வழங்கல் 143

இணைப்பு 4- ஆராய்ச்சி புலமைப்பரிசில்கள் நிறைவு 146

இணைப்பு 5- ஆராய்ச்சி பட்டங்கள் விருதுகளின் மேற்பார்வைக்கான ஆதரவுத் திட்டம் (SUSRED) 2021 148

இணைப்பு 6- வெளியீட்டு கட்டணங்களுக்கான ஆதரவு திட்டம் (SSPF) 151

இணைப்பு 7- பயிற்சி மற்றும் செயற்றிறன் நிர்மாணம் 152



தேசிய விஞ்ஞான மன்றத்தின் முகப்புத் தோற்றம்

எங்களைப் பற்றி

தேசிய விஞ்ஞான மன்றமானது திறன்கள் விருத்தி , தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் கீழ் செயல்படுகிறது. தேசத்திற்கான அதன் அர்ப்பணிப்பு மிகு சேவையானது 53 ஆண்டுகளாக நீடித்து வருகின்றது. இந்த அமைப்பானது, ஆரம்பத்தில் 1968 ஆம் ஆண்டில் தேசிய விஞ்ஞான சபை எனும் பெயரில் (NSC) நிறுவப்பட்டது (1968 ஆம் ஆண்டின் சட்டம் எண். 09). தேசிய விஞ்ஞான சபையானது 1982 ஆம் ஆண்டில் தேசிய வளங்கள், சக்தி மற்றும் விஞ்ஞான அதிகார சபையாக (NARESA) மறுசீரமைக்கப்பட்டது (1981 ஆம் ஆண்டின் சட்டம் எண். 78). 16 வருட சேவைக்குப் பிறகு, தேசிய வளங்கள், சக்தி மற்றும் விஞ்ஞான அதிகார சபையானது (NARESA) 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் எண் சட்டத்தின் மூலம் 1998 இல் தேசிய விஞ்ஞான மன்றமாக (NSF) மறுசீரமைக்கப்பட்டது

சட்டத்தினால் கட்டளையிடப்பட்ட செயற்பாடுகள்

1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி சட்டத்தின் ஒதுக்கீடுகளுக்கு அமைவுற தேசிய விஞ்ஞான மன்றமானது கீழ் குறிப்பிட்ட செயற்பாடுகளினை செய்வதற்கு கட்டாயமாகப்பட்டுள்ளது.

(அ) பல்கலைக்கழகங்களால் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களால் மற்றும் விஞ்ஞானிகளால் பின்வரும் நோக்குகளின் அடிப்படையில், அடிப்படை மற்றும் பிரயோக விஞ்ஞான ஆராய்ச்சியானது தொடங்கப்படுவதற்கு, எளிதாக்குவதற்கு மற்றும் ஆதரிப்பதற்கு

(i) சமூக ஆராய்ச்சி மற்றும் விஞ்ஞான மற்றும் விஞ்ஞான கல்வி திட்டங்கள் உட்பட விஞ்ஞான ரீதியிலான ஆராய்ச்சி திறனை வலுப்படுத்துதல்
(ii) இலங்கையில் இயற்கை வளங்களினை விருத்தி செய்தல்
(iii) இலங்கை வாழ் மக்களின் நலன் ஓம்புகை
(iv) விஞ்ஞான மற்றும் தொழில் நுட்பத்தில் ஆராய்ச்சி ஆளணியினரினை பயிற்றுவித்தல்

(ஆ) இலங்கை மற்றும் அயல் நாடுகளினை சார்ந்த விஞ்ஞானிகளிடையே அறிவியல் தகவல் பரிமாற்றத்தை ஊக்குவித்தல்

(இ) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களில் விஞ்ஞான படிப்பு அல்லது விஞ்ஞான பணிகளுக்கு உதவித்தொகை மற்றும் புலமை பரிசுகளினை வழங்குதல்

(ஈ) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பணியாளர்களின் நடப்பு நிலையின் பதிவேட்டை பேணுதல் மற்றும் இந்த விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பணியாளர்களினது சேவை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் அளவு தொடர்பிலும் மற்றும் நடப்பு மற்றும் எதிர்காலத்தில் அவர்களது தேவைப்பாடு தொடர்பிலும் தரவுகளினை பிற வழிகளில் சேகரித்தல், போதிய விளக்கத்தினை பெறல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் மற்றும் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஏனைய துறைகளில் கொள்கை முறைவடிவமாக்கம் செய்வதற்குரிய தகவல் மூலத்தினை வழங்குதல்

(உ) விஞ்ஞானத்தினை மக்களிடையே பிரபலப்படுத்துவதற்கான திட்டங்களுக்கு நிதியளிப்பதன் மூலம் மக்களிடையே விஞ்ஞானத்தினை பிரபலப்படுத்துத.

நோக்கு

இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக செழுமைக்காக விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்தை மேம்படுத்துவதில் நாட்டின் முதன்மையான உந்து சக்தியாக இருத்தல்

பணி

இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக செழுமைக்காக விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத்தை,

- ஆராய்ச்சி, மேம்பாடு, புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றத்தை தொடங்குதல், எளிதாக்குதல் மற்றும் ஆதரித்தல்
- அறிவை உருவாக்குதல், பரப்புதல், திறன் மேம்பாடு, கூட்டாண்மை, அறிவியலை பிரபலப்படுத்துதல் மற்றும் STEM கல்வியை ஊக்குவித்தல், செயல்படுத்துதல் மற்றும் நிதியளித்தல் மற்றும்
- கொள்கை ஆராய்ச்சிகளினை நடத்துதல் மற்றும் கொள்கை மேம்பாட்டிற்கு ஆதரவளித்தல்

திறமையான மற்றும் திருப்தியான பணியாளர்களை உறுதிசெய்யும் அதே வேளையில் நிலையான வளர்ச்சி இலக்குகளுக்கு உரிய கவனம் செலுத்துதல். போன்ற செயற்பாடுகளின் மூலம் ஊக்குவித்தல்:

இலக்கு

தேசிய கொள்கை சட்டகத்தில் (NPF). வழங்கப்பட்டுள்ள முன்னுரிமைகளின் அடிப்படையில் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் தேசத்தின் விரைவான வளர்ச்சிக்கு செயற்றிறன் மற்றும் பயனுறுதி மிக்க முறையில் பங்களித்தல

குறிக்கோள்கள்

1. பொது-தனியார் நிறுவனம்-தொழில் கூட்டாண்மைகளை உருவாக்குவதன் மூலம் ஒரு அறிவுப் பொருளாதாரத்தை உருவாக்க ஆராய்ச்சி, விருத்தி மற்றும் புது கண்டுபிடிப்புக்களினை நடத்துதல்.

2. நமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்தின் அனைத்துத் துறைகளுக்கும் தேவையான திறன் மேம்பாடு, உள்கட்டமைப்பு மேம்பாடு, தொழில்நுட்ப பரிமாற்றம், அறிவை உருவாக்குதல் என்பனவற்றுக்கு ஆதரவு வழங்கள்.

3. விஞ்ஞான தொழில்நுட்ப சுட்டிகளினை அடிப்படையாக கொண்டு கொள்கை வகுப்பாளர்கள் தீர்மானங்களினை எடுப்பதனை ஊக்குவிக்கும் வகையில் அக் குறிகாட்டிகளை உருவாக்குவதற்கு உதவும் வகையில் கொள்கை ஆய்வுகள் மற்றும் அளவளாய்வுகள், தரவு சேகரிப்பு மற்றும் சான்றுகள் அடிப்படையிலான அறிக்கையிடல் ஆகியவற்றை நடத்துதல்.


4. விஞ்ஞானவியல் ரீதியிலான தொடர்புகள் மூலம் சமூகத்தின் பொதுமக்கள் மற்றும் பிற துறைகளுடன் தொடர்புகளினை பேணல் மற்றும் விஞ்ஞானவியலில் கல்வியறிவினை வழங்குவதுடன் விஞ்ஞானத்தில் பொதுமக்களின் ஈடுபாட்டினை அதிகரித்தல்.

5. செயல்திறன்-உந்துதல் மற்றும் சிறந்த முடிவுகளினை தரக்கூடிய ஒரு சாதகமான பணிச்சூழலில் திறமையான பணியாளர்களை உருவாக்கல்.



ஆளுமை சட்டகம்

அமைப்பாண்மை கட்டமைப்பு (OS) தேசிய விஞ்ஞான மன்றம்



AO - கணக்கியல் அலுவலர்கள்
CS - பிரத்தியேக செயலாளர்
HRDO - மனிதவள அபிவிருத்தி அலுவலர்
IA - உள்ளக கணக்காய்வாளர்
IAO - ஐஉள்ளக கணக்காய்வு அலுவலர்
IAD - சர்வதேச விவகாரப் பிரிவு
IO - தகவல் அலுவலர்
ITM - தகவல் தொழில்நுட்ப முகாமையாளர்

JIO - துகணிஷ்ட தகவல் அலுவலர்
JPD - சஞ்சிகை வெளியீட்டுப் பிரிவு
LA - நூலக உதவியாளர்
MA - முகாமைத்துவ உதவியாளர்
NA - வலையமைப்பு நிர்வாகி
NSLRC - தேசிய விஞ்ஞான நூலக மற்றும் வள நிலையம்
P & TO - பெருகை மற்றும் போக்குவரத்து அலுவலர்
PIO - முதன்மை தகவல் அலுவலர்

PL - முதன்மை மட்டம்
PM - அச்சிடல் முகாமையாளர்
PO - அச்சிடல் அலுவலர்
PSO - முதன்மை விஞ்ஞான அலுவலர்
RD - ஆராய்ச்சிப் பிரிவு
SA/ A - சிரேஷ்ட கணக்காளர்/ கணக்காளர்
SAO - சிரேஷ்ட நிர்வாக அலுவலர்
SIO - சிரேஷ்ட தகவல் அலுவலர்

SO - விஞ்ஞான அலுவலர்
SCOD - விஞ்ஞான தொடர்பாடல் மற்றும் எல்லை கடந்த பிரிவு
SSO - சிரேஷ்ட விஞ்ஞான அலுவலர்
STPRD - ிஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கை ஆராய்ச்சிப் பிரிவுவ
TDID - தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் புத்தாக்கப் பிரிவு
* - தனிப்பட்டவை

முகாமைத்துவ சபையின் விபரங்கள் சுருக்கமாக

ஒரு தலைவர், ஒரு பணிப்பாளர் நாயகம் மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு (UGC), இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கம் (SLAAS), இலங்கை எந்திரவியலாளர்கள் நிறுவகம் (IESL), தேசிய கல்வி நிறுவகம் (NIE) மற்றும் நிதி அமைச்சு ஆகிய நிறுவனங்களினை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு உறுப்பினருடன் , திறன்கள் அபிவிருத்தி.தொழில் கல்விஇ ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் கௌரவ அமைச்சரினால் நியமனம் செய்யப்பட்ட வேறு நான்கு உறுப்பினர்கள் ஆகியோரினை உள்ளடக்கிய ஒரு முகாமைத்துவ சபையினால் தேசிய விஞ்ஞான மன்றம் நிர்வகிக்கப்படுகின்றது.



ஓய்வுபெற்ற பேராசிரியர் ரஞ்சித் சேனாரத்ன (2020 ஜனவரி 17 - இன்றுவரை)
தலைவர்
தேசிய விஞ்ஞானமன்றம்

திருவதி தமயந்தினி மு விஜேசிங்க (w.e.f. 22nd February to 03rd August, 2021)
மேலதிக பணிப்பாளர் நாயகம்
மேலதிக செயலாளர்
திறன்கள் அபிவிருத்தி,தொழில் கல்வி,ஆராய்ச்சி மற்றும் புத்தாக இராஜாங்க அமைச்சு



திரு ரவீந்திர பத்மப்ரியா 2021 ஆகஸ்ட். 10 - 2022 மார்ச் 10)பதில் பணிப்பாளர் நாயகம்
மேலதிக செயலாளர்
திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக இராஜாங்க அமைச்சு



Dr சுனில் ஜயந்த நவரத்ன (2020 ஜனவரி 02 - இன்றுவரை)
பணிப்பாளர் நாயகம்
தேசிய விஞ்ஞான மன்றம்



எந்திரி. (பேராசிரியர்) S B S அபயகூன் (2020 ஜனவரி 29 -இன்றுவரை
சிரேஷ்ட பேராசிரியர்
சிவில் எந்திரவியல் திணைக்களம்
எந்திரவியல் பீடம்
பேராதெனிய பல்கலைக்கழகம



பேராசிரியர் ஆனந்த ஜயவர்த்தன (2020 யூலை 03 - இன்றுவரை)
சிரேஷ்ட பேராசிரியர்
சிவில் எந்திரவியல் திணைக்களம்
மொறட்டுவ பல்கலைக்கழகம்



Dr. N N J நவரத்ன (2020 ஜனவரி 29 - இன்றுவரை)
சிரேஷ்ட விரிவுரையாளர்
மனித வள முகாமைத்துவ திணைக்களம்
முகாமைத்துவ மற்றும் நிதியியல் பீடம்
கொழும்பு பல்கலைக்கழகமீசழக. N N J Nawarathne (w.e.f. 29th January, 2020 to date)



பேராசிரியர் ஆ ஆ பத்மலால் (2020 ஜனவரி 29 - இன்றுவரை)
பீடாதிபதி
பட்டப்படிப்பு கற்கை பீடம்
சிறீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்



பேராசிரி. து மு னு ளு ஜயனெட்டி (2021மே மாதம் 12 - 2021 இ டிசம்பர் 31)
பீடாதிபதி
தொழில்நுட்பவியல் பீடம்
கொழும்பு பல்கலைக்கழகம்



Dr லக்ஷ்மன் வெடிகார (2020 ஜனவரி 29 - இன்று வரை)
சிரேஷ்ட விரிவுரையாளர்
சமூக விஞ்ஞான கற்கை திணைக்களம்
கல்வி பீடம்
கொழும்பு பல்கலைக்கழகம்



Dr பிரேமசிறி மபலகம (2020 ஜனவரி 29 - இன்று வரை)
நோயியல் நிபுணர்
பொது வைத்தியசாலை
மாத்தறை




திருவதி சு து அப்டீன்(2021 மார்ச் 31 - 2022 மார்ச 01)
பணிப்பாளர்
பொது வியாபார முயற்சிகள் திணைக்களம்
நிதி அமைச்சு

பணியாளர் சக்தி

தேசிய விஞ்ஞான மன்றமானது அங்கீகரிக்கப்பட்ட 144 பணியாளர்களுடன் செயல்படுகிறது. தேசிய விஞ்ஞான மன்றுத்தின் ஊழியர்களின் பணியின் முழுமையான மதிப்பாய்வு அட்டவணை 01 இல் கொடுக்கப்பட்டுள்ளது மற்றும் படம் 01 இல் வரைபடமாக வழங்கப்பட்டுள்ளது.

உரு 01 : வகையின் அடிப்படையில் பணியாளர்களின் பணி

வகை	வருடம்					
	2020.12.31 இல் உள்ளவாறாக			2021.12.31 இல் உள்ளவாறாக		
	அனுமதிக்கப்பட்டது	நடப்பு	வெற்றிடம்	அனுமதிக்கப்பட்டது	நடப்பு	வெற்றிடம்
HM	10	7	3	10	8	2
AR 2	6	6	-	6	5	1
AR 1	26	21	5	26	19	7
MM	11	11	-	11	9	2
JM	10	5	5	10	4	6
MA	56	48	8	56	47	9
PL	25	19	6	25	18	7
Total	**144**	**124**	**20**	**144**	**110**	**34**



உரு 01 : 2021ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நிலைப் பிரிவும் பணியாளர்களின் பணி நிலையும்

31 டிசம்பர் 2021 நிலவரப்படி ளேகு இன் முதன்மைப் பணியாளர்களின் விவரங்கள் *இணைப்பு 01* இல் கொடுக்கப்பட்டுள்ளன.


கடந்த 10 ஆண்டுகளுக்கான நிதிச் சிறப்பம்சங்கள்

தேசிய விஞ்ஞான மன்றமானது, விஞ்ஞானம் ,தொழில்நுட்பம் மற்றும் புத்தாகத்தில் விருத்தியினை ஏற்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டிய பகுதிகளில் சிறந்த முதலீட்டினை மேற்கொள்வதற்காக, அனைத்து நிதிச் செயல்திறனின் பதிவுகளையும் பேணுகிறது, இது , உங்கள் வாடிக்கையாளரை அறிந்து கொள்வதற்கான (KYC) விதிமுறைகளுக்கு இணங்குதல் வேண்டும் என்பதனை நினைவூட்டுவதாக அமைகிறது. இந்த பகுப்பாய்வுகள் மற்றும் பக்கங்கள் 74 மற்றும் 75 இல் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் என்பன தேசிய விஞ்ஞான மன்றத்தின் தற்போதைய மற்றும் எதிர்கால நிதி ஆரோக்கிய நிலை பற்றிய தகவல்களினை வழங்குகிறது


கடந்த 10 ஆண்டுகளுக்கான முதலீடுகள் அட்டவணை 02 இலும் மற்றும் படம் 02, 03 ரூ 04 இலும் சித்தரிக்கப்பட்டுள்ளது.

உரு 02 : கடந்த பத்து ஆண்டுகளுக்கான நிதி மதிப்பாய்வு


வருடம்	நிதியியல் விபரங்கள் (ரூபாய் மில்லியன்)		
	ஒதுக்கீடு	கிடைக்கப்பட்ட நிதியம்	செலவினம்
2011	300	110.7	154.95
2012	283	157.4	168.3
2013	250	135	140
2014	260	223	211
2015	290	235	246
2016	250	232	237
2017	260	243	259.97
2018	300	283	308
2019	342.32	307.19	277.51
2020	59	59	82.07



உரு 02 : ஒதுக்கீடுகளுக்கு எதிராக நிதியியல் நிலை %



உரு 03: பிரதான நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் செலவினம்



உரு 04: முக்கிய திட்டங்களிற்கு செய்யப்பட்ட செலவு மொத்த ஒதுக்கீட்டில் மு மாக

- விஞ்ஞானம் மற்றும் ஆராய்ச்சி திறனை வலுப்படுத்துதல்
- விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப கொள்கை ஆராய்ச்சிகளினை நடத்துதல்
- மற்றும் தொழில் நுட்ப தகவல்களுக்காக தேசிய நுழைவு வாயிலை உருவாக்கல்
- விஞ்ஞானத்தினை பிரபலப்படுத்தல்
- திறன் மேம்பாடு சர்வதேச ஒத்துழைப்பு
- வள மேம்பாடு கணணி நிர்வாகம்

தேசிய விஞ்ஞான மன்றத்தின் வெளி வள குழாம்

தேசிய விஞ்ஞான மன்றத்தினால் ஊக்குவிக்கப்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சி முயற்சிகளை மறுசீரமைக்க வேண்டிய அவசரத் தேவையின் காரணமாக நிறுவகமானது ஆராய்ச்சி பிரிவு (RA) மற்றும் தொழில் நுட்பவியல் அபிவிருத்தி மற்றும் புத்தாக பிரிவு (TDIA) ஆகிய இரு பிரிவுகளினை 2021 ஆம் ஆண்டில் நிறுவியது இந்த முயற்சியானது தேசிய ரீதியில் முன்னுரிமை வழங்கப்படும் சுருனு தேவைகளை அடையாளம் காண உதவும ்என்பதுடன் இதன் மூலம், தொழில்துறை மற்றும் தயாரிப்பு மேம்பாட்டு கட்டமைப்பில் இருக்கும் இடைவெளிகளினை சீர் கட்ட உதவும், என்பதுடன் இதன் மூலம் கிடைக்கப்பெறும் இறுதிப்பெறுபேறு, மானியங்கள் வழங்குவதன் மூலம் செய்யப்பட்ட முதலீடுகளின் பொருளாதார வருமானத்தை உறுதி செய்வதே ஆகும். . நாட்டில் கிடைக்கக்கூடிய சிறந்த விஞ்ஞான வளங்களாவன, அரசாங்கத்தின் கொள்கையான 'நாட்டினை கட்டி எழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு 'இல் குறிப்பிடப்பட்டுள்ள கொள்கைகளினை செயல்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும். . குறிப்பிட்டு சொல்லத்தக்க இந்த மாற்றமானது, உள்ளூர் ஆராய்ச்சியில் புதிய போக்குகளை வளர்க்கும் என்று நம்பப்படுகிறது. குறிப்பாக ஒரு புது பாணியினை சார்ந்த கலாச்சாரம், மாற்றத்துடன் கூடிய ஆராய்ச்சிகள் தொழில் வளர்ச்சியுடன் செலவு குறைந்த மற்றும் திறமையான தயாரிப்பு மேம்பாடு மற்றும் பொது-தனியார் கூட்டாண்மைகளை ஊக்குவிக்கும் வகையில் பல்துறை அணுகுமுறைகளை வலியுறுத்துகிறது.

இந்த செயல்பாட்டில் உதவ, பின்வரும் குழுக்கள், பதிப்பாசிரியர் குழுக்கள் மற்றும் பணிக்குழுக்கள் நிறுவப்பட்டன

1. விவசாயத்துறையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பற்றிய வழிகாட்டுதல் குழு
2. எந்திரவியல் மற்றும் சிறிய இடைநிலை வியாபார முயற்சிகளில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பற்றிய வழிகாட்டுதல் குழு
3. மீன் மற்றும் நீர் வளத்துறையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பற்றிய வழிகாட்டுதல் குழு
4. செலவு-திறனுள்ள ஆற்றல் ஆதாரங்கள் மற்றும் சேமிப்பகத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான வழிகாட்டுதல் குழு
5. தகவல் தொழில்நுட்பம் மற்றும் சேவைகளின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு குறித்த வழிகாட்டுதல் குழு
6. சுகாதார நலன் தொடர்பான கண்டுபிடிப்புகளில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான வழிகாட்டல் குழு
7. நீர் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான வழிகாட்டல் குழு
8. சுற்றுச்சூழலின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான வழிகாட்டுதல் குழு
9. சமூக கண்டுபிடிப்புகளின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான வழிகாட்டல் குழு
10. சமூக கண்டுபிடிப்புகளின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான வழிகாட்டல் குழு
11. துளுகு பதிப்பாசிரியர் குழு (தேசிய விஞ்ஞான மன்ற இதழ்)
12. ளுடுதுளுளு பதிப்பாசிரியர் குழு (இலங்கை சமூக விஞ்ஞான சஞ்சிகை)
13. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் கொள்கைக்கான பணிக்குழு விஞ்ஞானத்தினை பிரபலப்படுத்துதலுக்கான பணிக்குழு
14. சந்தையில் நுழையும் மூலிகைப் பொருட்களின் தரக் கட்டுப்பாடு மற்றும் தர உத்தரவாதம் குறித்த பணிக்குழு
15. உணவுப் பாதுகாப்பு மற்றும் உணவின் சாத்தியமான உடல்நல அபாயங்கள் குறித்த பணிக்குழு
16. தர உறுதிப்பாட்டிற்கான பணிக்குழு (ஞயு)
17. பங்குதாரர்களுடன் தேசிய கண்டுபிடிப்பு சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்கான பணிக்குழு
18. ஒரு கருவி தரவுத்தளத்தை தொகுக்கும் பணிக்குழு
19. பல்கலைக்கழக வணிக இணைப்புக் கலங்களுடன் இணைந்து செயல்படும் குழு
20. திறன் மேம்பாட்டிற்கான பணிக்குழு
21. மனிதன் மற்றும் உயிர்க்கோளத்திற்கான தேசிய குழு



தலைவரின் மீளாய்வு

சமூகப் பொருளாதார அபிவிருத்திக்காக விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம் என்பவற்றை ஊக்குவிப்பதற்கு பொறுப்பாணை அளிக்கப்பட்ட முதன்மை தேசிய நிறுவனமான தேசிய விஞ்ஞான மன்றத்தின் 2021ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கைக்கு இச்செய்தியினை வழங்குவதில் அளவற்ற மகிழ்ச்சியடைகின்றேன். ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்கள் மற்றும் கல்விமான்களின் இயலளவு விருத்தி மற்றும் தகைமையினை மேம்படுத்துதல், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மீதான பொதுமக்கள் விழிப்புணர்வினை ஊக்குவித்தல் அத்துடன் பொதுமக்களின் விஞ்ஞான ரீதியான அறிவினை மேம்படுத்தல் என்பன உள்ளடங்கலாக பரந்த வீச்சில் முதலீடு மற்றும் தலையீடு என்பனவூடாக 1968 இல் தாபிக்கப்பட்ட இந்நிறுவனம் தேசிய அபிவிருத்திக்கு குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றியுள்ளது.

உலகானது தளம்பல் நிலையில் காணப்படுவதுடன், பொருளாதார, தொழில்நுட்பச் சுழல், சமூக மற்றும் அரசியல் தோற்றஅமைப்புக்கள் இயக்கவாற்றல் மிக்கதாக காணப்படுவதுடன், துரிதமாக மாறுதலடைந்து, சந்தைகள் அதிகரித்தளவில் போட்டி மிக்கதாகவும், நவீன மயப்பட்டதாகவும், உலகமயமாக்கப்பட்டதாகவும் தோற்றம்பெற்று வருகின்றன. இவற்றுக்கு மத்தியில் கொவிட் - 19 உலகளாவிய நோய் தொற்று மற்றும் ஏனைய எதிர்மறையான தாக்கங்கள் என்பன மூலம் ஒட்டுமொத்த உலகமும் ஆட்ங்கண்டுள்ளது. இவ்விக்கட்டான அத்துடன் மிக முக்கிய கால கட்டத்தில் இலங்கையில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான தொட்டிலாக இருந்து வருகின்ற தேசிய விஞ்ஞான மன்றம் அவற்றின் தாக்கங்களை தணிப்பதிலும் ஆற்றல்வாய்ந்த மற்றும் தாக்குப்பிடிக்கத்தக்க பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதிலும் இன்றியமையாத பங்கினைக் கொண்டுள்ளது.

இத்தருணத்தில் தேசிய விஞ்ஞான மன்றமானது மாற்றத்திற்கு செயல்திறன்வாய்ந்த விதத்தில் ஈடுகொடுக்கும் வகையில் அதன் துறை, நிதியளித்தல் முன்னுரிமைகள் என்பவற்றை மீளாய்வுசெய்து திருத்தியமைக்கும் செயன்முறையினை முன்னெடுப்பதுடன் நூதனமான முன்முயற்சிகளில் அடியெடுத்துவைக்கின்றது. தேசிய அபிவிருத்திக்காக இலங்கையின் விஞ்ஞான மற்றும் தொழில்சார் நிபுணர்களைப் பயன்படுத்துதல் மற்றும் சொத்து உருவாக்கத்திற்காக உபாயரீதியான அரசாங்க தனியார் பங்குடைமைகளை வளர்த்தல் போன்றவற்றுக்காக டிஜிடல் தளம் ஒன்றினை உருவாக்குதிலும், தடுப்புமருந்து உற்பத்திக்காக இயலளவு விருத்தியினை நோக்காகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடங்குவதும், சில பெறுமதிவாய்ந்த இடைத் தலையீடுகளாக காணப்படுகின்றன.

உலகளாவிய நோய்த்தொற்றைக் கொண்ட பின்னணியில் அவசர மற்றும் முக்கியத்துவமிக்க போட்டிமிக்க கேள்விகளின் காரணமாக நிதியங்கள் கிடைப்பது கடினமாக காணப்படுகின்றது. எவ்வாறாயினும், நிதியியல் மூலவளங்கள் மட்டுப்படுத்தப்பட்டதாகவிருந்த போதிலும் டிஜிடல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள், முன்னெடுக்கப்படுகின்ற சிறந்த தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு என்பன முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் போதிய வாய்ப்புகளை வழங்கின.

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் என்பது பொருளாதார அபிவிருத்தியின் முதனிலை செலுத்தியாக விளங்குகின்றது. ஆகையினால் தேசிய விஞ்ஞான மன்றம், பொதுநலனுக்காக விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பத்தினையும் முன்னேற்றுவதற்கு அதன் முயற்சிகளை மீளவும் இரட்டிப்படையச்செய்யும். இதனூடாக இலங்கையினை அபிவிருத்தியடைந்த தேசமொன்றாக மாறுதலடையச் செய்வதில் அதனை உபாயரீதியாக பங்காளராகவும் ஆற்றல் வாய்ந்த சக்தியாகவும் இடம்பெறச்செய்யும்.

பேராசிரியர் ரஞ்சித் சேனாரத்ன
தலைவர்
தேசிய விஞ்ஞான மன்றம்



பணிப்பாளர் நாயகத்தின் அறிக்கை

முன்னைய ஆண்டுகளைப் போன்று, 2021 ஆம் ஆண்டும் 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட ஐந்து பொறுப்பாணைகளின் கீழ் செயலாற்றப்பட்ட பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை கொண்டு நிரம்பியதாக காணப்பட்டது. தெளிவான தொலைநோக்குடனும் அததுடன் நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளுடனும் தேசிய முன்னுரிமை சட்டகத்தின் முன்னுரிமைகளுடனும் அணிசேர்கின்ற அதன் செயற்பணியினை தேசிய விஞ்ஞான மன்றம் அதன் மூலதன ஒதுக்கீட்டின் 99.93மூ இனை பயன்படுத்தி முன்னெடுத்துச் சென்றது. இம்மீளாய்வானது முக்கிய சாதனைகளுடன் இணைந்த நடவடிக்கை திட்டத்திற்கு எதிரான முன்னேற்றத்தினை எடுத்துக்காட்டுகின்ற தொகுப்பினை உள்ளடக்குவதுடன் அதனைத் தொடர்ந்து தேசிய விஞ்ஞான மன்றத்தின் பொறுப்பாணைகளுக்கமைவாக செயலாற்றப்பட்ட பணி பற்றிய விரிவான விவரத்தை உள்ளடக்குகின்றது.

முன்னைய ஆண்டின் பணியின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட முக்கிய செயலாற்றுகை குறிகாட்டிகளை அடைவதில் அதிகரிக்கின்ற வெளியீடுகளையும் பெறுபேறுகளையும் வழங்குவது எமது நோக்காகும். எமது எதிர்காலப் பயணமானது வலுப்படுத்தப்பட்ட கூட்டிணைப்பு நடவடிக்கைகளினூடாக அதிக ஆராய்ச்சி, இயலளவு விருத்தி என்பவற்றை வசதிப்படுத்தி மேம்பட்ட முறையியல்கள் மற்றும் செயன்முறைகளினூடாக நாட்டில் முக்கிய ஆர்வலர்கள் மற்றும் மக்கள் மத்தியில் வெளியீடுகளை பிரபல்யப்படுத்துவதன் வாயிலாக தேசிய விஞ்ஞான மன்றத்தின் செயலாற்றுகையினை அதிகரிப்பதாக அமைந்திருக்கும். இந்நோக்குடன் ஏற்கனவே காணப்படுகின்ற திட்டங்களையும், நிகழ்ச்சித்திட்டங்களையும் அவற்றின் செயல்திறன்வாய்ந்த தன்மைக்காக தொடர்ச்சியாக மீளாய்வுசெய்தல் மிகுந்த தாக்கத்திற்கான தொடர்ச்சியான நகர்வொன்றாக அமைந்திருக்கும்.

பணியினைக் கொண்டுநடாத்துவது முழுவதும் வழங்கப்பட்ட அவர்களின் வழிகாட்டலுக்காகவும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் தலைவருக்கும் முகாமைத்துவ சபைக்கும், வளங்கள் பற்றாக்குறைகளுக்கு மத்தியில் தேவைகளை நிறைவேற்றுவதில் ஊக்கத்துடன் பணியாற்றுகின்ற அவர்களின் அர்ப்பணிப்புக்கும், கடமைப்பொறுப்புக்கும் நிறுவனத்தின் பாரிய வலிமையாக விளங்குகின்ற தேசிய விஞ்ஞான மன்றத்தின் அணிக்கும் எனது மனமார்ந்த பாராட்டினைத் தெரிவிக்கின்றேன்.


கலாநிதி சேபாலிகா சுதசிங்ஹ
பணிப்பாளர் நாயகம்

சுருக்கம் ரூ சிறப்பம்சங்கள்

பின்வருபவை ஆம் ஆண்டில் தேசிய விஞ்ஞானம் மன்றத்தின் செயல்திறனை எடுத்துக்காட்டுகின்றன.


- 2021 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட செயல்பாடுகளில் பூரணப்படுத்தியவை *உரு 05* ரூ *06* இல் சித்தரிக்கப்பட்டுள்ளது. *அட்டவணை 03* ஆனது தேசிய முன்னுரிமை சட்டகத்துடன் இணைந்த வகையில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் செயல்பாடுகளை காட்டுகிறது. தேசிய விஞ்ஞான மன்றமானது விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள செயல்பாடுகளை முன்னெடுப்பதற்கு கிட்டத்தட்ட ரூபாய் 67.897 மில்லியனை செலவிட்டுள்ளது.

தேசிய விஞ்ஞான மன்றத்தின் செயல்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட ஆண்டின் நிதி முன்னேற்றம் வரைபடமாக உள்ளது.



உரு 05: தேசிய முன்னுரிமை சட்டகத்திற்கு அமைவுற 2021 ஆம் ஆண்டில் பௌதீகவியல் : செயல்திறன்


* வருட காலப்பகுதியின் மீளாய்வின் போது செயல் திட்டத்தில் இருந்து செயல்பாடு நீக்கப்பட்டது



உரு 06: தேசிய விஞ்ஞான மன்றத்தின் செயல்பாடுகளுக்கு அமைவுற 2021பௌதீகவியல் செயல்திறன்


03 : தேசிய முன்னுரிமை சட்டகத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு அமைவற்றதாய் தேசிய விஞ்ஞான மன்றத்தின் பணிப்பாளைகள் முறைவடிவமாக்கம் செய்யப்படல்.

தே.வி.ம.செயற்பாடுகள்	தேசிய முன்னுரிமை சட்டகம்
ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி	முன்னுரிமை 1, முன்னுரிமை 2, முன்னுரிமை 4, முன்னுரிமை 5, முன்னுரிமை8, முன்னுரிமை 9
விஞ்ஞானம் தொழில்நுட்ப தகவல் பரப்பல்	முன்னுரிமை 1 , முன்னுரிமை 6, முன்னுரிமை 7
விஞ்ஞான தொழில் நுட்ப செயற்றிறன் நிர்மாணம்	முன்னுரிமை 3
விஞ்ஞான தொழில் நுட்ப கொள்கை ஆராய்ச்சி	முன்னுரிமை 1
விஞ்ஞான பிரபலப்படுத்துதல்	முன்னுரிமை 1, முன்னுரிமை 6, முன்னுரிமை 7
சிறந்த ஆளுமை மற்றும் உற்பத்தித்திறன் மேம்பாடு	முன்னுரிமை 10




உரு 07: நிதியியல் செயல்திறன் 2021

தேசிய விஞ்ஞான மன்றமானது உரு 08இல் தரப்பட்டவாறு மானியங்கள் மற்றும் சேவைகளினை வழங்குவதன் மூலம் ஒரு சிறிய வருவாயினை உழைத்தது.




உரு 08: நிறுவகம் மற்றும் சமூகத்திற்கு சேவைகள் வழங்குவதன் மூலம் உழைக்கப்பட்ட வருமானம்


- நடைமுறையில் உள்ள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்களில் இருந்தான மானியங்களின் பெறுபேறுகளின் பகுப்பாய்வானது உரு 09 மற்றும் 10 இல் சித்தரிக்கப்பட்டுள்ளது. பல்வேறு துறைகளில் முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் பற்றிய விபரங்கள் உரு 11 இல் காட்டப்பட்டுள்ளன.



உரு 09: நடைமுறையில் உள்ள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்கள் : விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்ப அபிவிருத்தியின் பங்களிப்பினை பகுப்பாய்வு செய்தல்




உரு 10: நடைமுறை மானியங்களில் இருந்து எதிர்பார்க்கப்படும் உற்பத்திகள்



உரு 11: நிறுவனங்களிடைய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கருத்திட்டத்தினை பகிர்தல

- தேசிய விஞ்ஞான மன்றத்தினால் சகல செயற்பாடுகள் கீழும் முன்னெடுக்கப்பட்ட நிகழ்வுகள் உரு 12 இல் காட்டப்பட்டுள்ளது.



உரு12: 2021ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட நிகழவுகள்

- தேசிய அபிவிருத்திக்காக உலகளாவிய ரீதியில் உள்ள திறமைக் குழுவின் ஆதரவினை பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்த தொழில் வல்லுநர்களின் விபரங்களினை கொண்ட டிஜிட்டல் தளத்தை (னுநீ) நிறுவுவதற்கான செயல்முறை



இந்த முயற்சியின் மற்ற நோக்கங்கள்:

1. உயர்கல்வி மற்றும் திறனை வளர்ப்பதற்கு அதிக வாய்ப்புகளை வழங்குதல்,
2. கல்வி ஒத்துழைப்பு மற்றும் ஆராய்ச்சி ரீதியில் ஒத்துழைப்பை மேம்படுத்துதல்
3. படைப்பாற்றல் மற்றும் புத்தாக்க கலாச்சாரத்தை உருவாக்குங்கள்,
4. கூட்டு வெளியீடுகளை ஊக்குவித்தல் மற்றும் இலங்கைப் பல்கலைக்கழகங்களின் தரவரிசையை அதிகரித்தல், மற்றும்
5. மின்-தொழில்நுட்ப பரிமாற்றத்தை எளிதாக்குதல்,

டிஜிட்டல் தளமானது விருத்தியடைந்த பொருளாதாரங்களினை கொண்ட நாடுகளில், அதாவது வட அமெரிக்கா, ஐரோப்பா, ஓசியானியா மற்றும் ஆசியா போன்ற நாடுகளுக்கு புலம் பெயர்ந்து வசிக்கும் 800 க்கும் மேற்பட்ட சிறந்த அறிவு மிக்கோரின் விபரங்களினை கொண்டுள்ளது. புலம் பெயர்ந்தோர் தளமானது வாழ்க்கை விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம் /மனிதநேயம், தகவல்/தரவு விஞ்ஞானம், முகாமைத்துவம், பொறியியல், சுற்றுச்சூழல் விஞ்ஞானம் முதல் நானோ தொழில்நுட்பம், AI/ IoT/ VR/AR/MR மற்றும் ரோபாட்டிக்ஸ் போன்ற வளர்ந்து வரும் இடைநிலை விஞ்ஞானம் பற்றிய கருத்துக்களினை கொண்டுள்ளது. இலங்கை மென்பொருள் மற்றும் சேவைகள் நிறுவனமானது, (SLASSCOM) இத்தரவுத்தளத்தினை வடிவமைத்து நிர்மாணிப்பதற்கு தனது ஆதரவினை வழங்கியது.

தரவுத்தளத்தின் விருத்தி பூரணமடைந்துள்ளது 2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் தளமானது மேலும் சிறப்பாக சீரமைக்கப்படும்.

- 2020 ஆம் ஆண்டில் 'கொவிட் 19 : தாக்கம், தணிப்பு, வாய்ப்புகள் மற்றும் நல்லிணக்க நிர்மாணம்' என்ற தலைப்பிலான 2 நாள் தேசிய மாநாட்டுடன் தொடர்புடைய அனைத்து ஆயத்தப் பணிகளையும் முடித்ததினை தொடர்ந்து, மாநாடானது 2021 ஜனவரி மாதம் 27 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச, மாநாட்டு மண்டபத்தில் பௌதீக மற்றும் நிகழ்நிலை ஆகிய இரு முறைகளிலும் வெற்றிகரமாக நடைபெற்றது. இதன் போது,மூன்று தொழில்நுட்ப அமர்வுகளாவன. இலங்கையினை தாய் நாடாக கொண்டவர்களும் சர்வதேச மட்டத்தில் புகழ் பெற்ற விஞ்ஞானிகளுமான ஆசியாவைச் சேர்ந்த பேராசிரியர் மலிக் பீரிஸ், ஐரோப்பாவைச் சேர்ந்த பேராசிரியர் சாந்தி மென்டிஸ், வட அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியர் டிலந்த பெர்னாண்டோ, ஓசியானியாவைச் சேர்ந்த பேராசிரியர் ரெய்னா மெக்கின்டைர், ஆபிரிக்காவைச் சேர்ந்த கலாநிதி மகேஷ் நிர்மலன் ஆகியோர்களினால் நடத்தப்பட்டதுடன் இந்த மாநாட்டின் போது வெளிநாட்டு வளவாளர் கலாநிதி ஸ்டீவன் ஒப்மான் அவர்கள் கோவிட்- இனை எதிர்த்துப் போராடுவதில் தங்கள் அறிவையும் அனுபவத்தையும் பகிர்ந்து கொண்டார்.



- தேசிய விஞ்ஞான மன்றமானது (NSF) 2021 ஜூலை மாதம் 30 ஆம் திகதியன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கொவிட் 19 : தாக்கம், தணிப்பு, வாய்ப்புகள் மற்றும் நல்லிணக்க நிர்மாணம்'என்ற தலைப்பில் மிகச் சிறப்பான ஒரு பிரசுரத்தை கல்வி அமைச்சர் மேன்மை தங்கிய பேராசிரியர் ஜி எல் பீரிஸ் அவர்களின் அனுசரணையில் அறிமுகப்படுத்தியது. பல் துறைகள் பற்றிய விபரங்களினை கொண்ட இப்புத்தகமானது தேசிய விஞ்ஞான மன்றத்தின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் சேனாரத்ன மற்றும் பேராசிரியர் டிலந்தி அமரதுங்க ஆகியோரால் தொகுக்கப்பட்டது,




ஜெனிவா, சுவிட்சர்லாந்தில் உள்ள உலக சுகாதார அமைப்பாண்மையின் முன்னாள் மூத்த ஆலோசகர் மற்றும் ஐக்கிய இராஜ்யத்தின் ஹடர்ஸ்ட்.'.பீல்ட் பல்கலைக்கழக பேராசிரியர் பேராசிரியர் சாந்தி மென்டிஸ், அத்துடன் கான்பெரா, ஆஸ்திரேலியவில் உள்ள, ஆஸ்திரேலியா தேசிய பல்கலைக்கழக பேராசிரியர் பிரேம-சந்திர அத்துகோரல ஆகியோர்களினால் கிட்டத்தட்ட 800 பக்கங்களில் 65 பக்கங்கள் தொகுக்கப்பட்டுள்ளது

கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமம் CC BY-NC-ND (Atribution-Non Commercial-No Derivs) என்பதன் கீழ் இந்த புத்தகம் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் வெளியிடப்பட்டது.

- இலங்கை பொது நிதிக் கணக்காளர்களின் சங்கத்தினால் (APFASL) ஏற்பாடு செய்யப்பட்ட சிறந்த வருடாந்த அறிக்கை மற்றும் கணக்கு விருதுகள் என்பதற்கான 'வெண்கல விருது' 2019 ஆம் ஆண்டில் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் வெற்றிகொள்ளப்பட்டது.




- மன்றமானது 2021ஆண்டின் தொடக்கத்தில் 117 பணியாளர்களுடன் செயல்பட்டது அதன்பின் 2021 டிசம்பர் 31 இல் இந்த எண்ணிக்கை 110 ஆக குறைந்தது.



உரு 13: 2017 - 2021 காலப்பகுதியில் அலுவலர்களின் நிலைப்பாடு

தேசிய விஞ்ஞான மன்றத்தின் செயற்பாடுகளினை நிலையான அபிவிருத்தி இலக்குகளுடனும் (SDGs) மற்றும் தேசிய கொள்கை சட்டகத்துடனும் (NPF) ஒருங்கிணைந்ததாய் முறைவடிவமாக்கம் செய்தல் 'நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு'

முந்தைய ஆண்டுகளைப் போலவே, படைப்பாற்றல் மற்றும் விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப கலாச்சாரத்தை பல்வேறு விஞ்ஞானவியல் துறைகளில் ஊக்குவிப்பதன் ஊடாக பொது மக்கள் விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்தினை தம் நாளாந்த வாழ்வில் பயன்படுத்த செய்வதற்கும் அத்துடன் தீவிர வறுமையை ஒழிப்பதில் பங்களிக்கும் நோக்குடனும் செயல் திட்டத்தில் நிலையான அபிவிருத்தி இலக்குகளின் மீதான கவனமானது அதிகப்படுத்தப்பட்டுள்ளது.தேசிய முன்னுரிமை சட்டகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பத்து கொள்கைகளும் வரைபடம் 01 இல் சித்தரிக்கப்பட்டுள்ள அதே நோக்கங்களுடன் குறிக்கப்பட்டன.



வரைபடம் 01 தேசிய விஞ்ஞான மன்றத்தின் செயற்பாடுகளினை நிலையான அபிவிருத்தி இலக்குகளுடனும் (SDGs) மற்றும் தேசிய கொள்கை சட்டகத்துடனும் (NPF) ஒருங்கிணைந்ததாய் முறைவடிவமாக்கம் செய்தல்.

முன்னுரிமை பரப்பெல்லை (தேசிய கொள்கை சட்டத்துடன் தொடர்புடையது)	கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித் திட்டங்கள்	[illegible]	பெறுபேறு	விளைவளவு	பிரதான செயலாற்றல் சுட்டிகள் (KPI)
	தே.வி.ம.பணிப்பாளை அ) ஆராய்ச்சி அபிவிருத்தியை மேம்படுத்துதல்				
	அபிவிருத்திக்கான திட்டங்களைத் தொடங்குதல் புதமை அடிப்படையிலான தொழில்முனைவு (பள்ளி-இளைஞர்-சமூகத்திலிருந்து)	67.8969	புத்தாக்கம், வர்த்தகமயப்படுத்துகை மற்றும் தொழில் முனைவோரை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டம் - 10	* புத்தாக்கத்தை அடிப்படையாகக் கொண்ட விணை முயலுமையினால் சமுதாயம் செயற்படல்	*அரச தனியார் பங்குடமை தாபிக்கப்படல்
	தேசிய பகுப்பாய்வு மற்றும் சோதனை மையம் /வசதியினை நிறுவுதல்		*விரிவான தரவுத் தளம் - 01 *பூர்த்தியாக்கப்பட்ட அளவை அறிக்கை *தேசிய பகுப்பாய்வு மற்றும் சோதனை வசதிகளைத் தாபிப்பதற்கு ஒரு பிரேரணையை விருத்தி செய்க	* குறைந்த செலவினம் மற்றும் விரைவான சோதனை வசதி பெறக் கூடியதாக இருத்தல்	*தரவுத் தளங்களின் விருத்தி *அளவை அறிக்கை *விருத்தி செய்யப்பட்ட பிரேரணைகளின் எண்ணிக்கை
	புத்தாக்கங்கள் புது முயற்சிகள் மற்றும் வணிகமயமாக்கல் செயல்பாடுகள்		* வர்த்தகமயப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கையும் விடுவிக்கப்பட்ட நிதியத்தின் அளவும் *நிகழ்வுகளினூடாக பயனடைந் புத்தாக்குனர்கள்	* தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பு செய்தல் * புத்தாக்குனர்களுக்கு அவர்களது உற்பத்திகளை மேம்படுத்த வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்	*பூரத்திசெய்யப்பட்ட தொழில்நுட்பவியல் அபிவிருத்திகளின் எண்ணிக்கைகள் *வர்த்தகமயப்படுத்துகைக்காக நிதியீடு செய்யப்பட்ட கருத்திட்டங்கள் *UBCS உடன் ஒழுங்கமைப்பு செய்யப்பட்ட நிகழ்வுகளின் எண்ணிக்கை
	தொழில்முனைவோருக்கு பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு		*புத்தாக்குனர்களுக்கு நடாத்தப்பட்ட அறிவுப் பகிர்வு அமர்வுகளின் எண்ணிக்கை *பயிற்றுவிக்கப்பட்ட புத்தாக்குனர்களின் எண்ணிக்கை	* புத்தாக்குனர்களுக்கான திறன் அபிவிருத்தி	*அறிவுப் பகிர்வு அமர்வுகளாவன புத்தாக்குனர்களுக்காக முன்னெடுக்கப்பட்டது. * பயிற்றுவிக்கப்பட்ட புத்தாக்குனர்களின் எண்ணிக்கை
	தேசியத்துடன் ஏற்றுமதியாளர்கள் வர்த்தக சங்கத்துடன் (NCE) கூட்டுத்திட்டம்		*ஏற்றுமதி துறையைச் சார்ந்த வியாபார முயற்சிகளாவன அக மற்றும் வெளியூர் பல்கலைக்கழகங்களுடன் தொடர்புகளைப் பேனல் (02)	ஏற்றுமதி சந்தைக்கு ஏற்ற வகையில் பெறுமதி சேர்க்கப்பட்ட அல்லது புதிய உற்பத்திகளை விருத்தி செய்தல்	*தாபிக்கப்பட்ட தொடர்புகளின் எண்ணிக்கை *விருத்திசெய்யப்பட்ட புதிய உற்பத்திகளுக்கு ஆதரவு வழங்கப்பட்டன.
	காப்புரிமை செயல்முறை அமைப்பினை எளிமைப்படுத்த தன்னியக்க முறை (NIPO உடன்)		*காப்புறிமை செயன்முறை தொடர்பில் ஆதரவளிக்கப்பட்ட புத்தாக்குனர்களின் எண்ணிக்கை *அக பதவியணி உறுப்பினர்களின் செயற்திறன் விருத்தி	*காப்புரிமை வரைவு செய்தல் மற்றும் அது தொடர்பிலான தகவல் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல்.	* தகவல்கள் தேடப்பட்ட காப்புரிமைகளின் எண்ணிக்கை *வழங்கப்பட்ட உசாத்துணைகளின் எண்ணிக்கை *வழங்கப்பட்ட ஆய்வறிக்கைகளின் எண்ணிக்கை *முன்னெடுக்கப்பட்ட பயிற்சி அமர்வுகளின் எண்ணிக்கை
	மன்றத்தினால் நிதியளிக்கப்பட்ட வெற்றிகரமான திட்டத்திற்கு ஒரு தொடக்கத்தை நிறுவுவதற்கு துணையாக இருத்தல்		*தேசிய விஞ்ஞான மன்ற மானியத்தின் பெறுபேறின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட புது முயற்சி	*நிதி உருவாக்கத்திற்காக விஞ்ஞான தொழில்நுட்ப துறையின் பங்களிப்பு *நிலையான தொழில்நுட்பத்தின் மூலம் வளமாக்கப்பட்ட அக சந்தை *பயிற்சிகளினூடாக அக தொழில்முனைவோர் உருவாகுவதற்கு வாய்ப்புக்களை ஏற்படுத்துதல்.	*தொடங்கப்பட்ட புது முயற்சிகளின் எண்ணிக்கை *பயிற்றுவிக்கப்பட்ட ஆளணியினரின் எண்ணிக்கை *உருவாக்கப்பட்ட அக தொழில் முயலுனர்களின் எண்ணிக்கை
	இலங்கை கிராமப்புற தொழில் முனைவோரின் ஆராய்ச்சி தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அதரவு அளித்தல்		*சிறிய இடைநிலை வியாபார முயற்சிகளுக்கு தேவைப்படுகின்ற ஆராய்ச்சிகளை அடையாளம் காணுதல்	* சம்மந்தப்பட்ட தரப்பினரின் ஒத்துழைப்பினூடாக பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குதல்.	*பத்திக் உங்பத்தியாளர்கள் மற்றும் அவற்றின் நுகர்வோர்களுக்காக வினா கொத்தொன்றினை விருத்தி செய்தல் *இதன் முதல் கட்ட நடவடிக்கையாக மேல் மாகாணத்தை சார்ந்த பத்திக் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்களிடமிருந்து தகவல்களை சேகரிக்கப்படல் *பத்திக் துறையின் தர சான்றிதழ் நிமித்தம் அதற்குரிய சாராமாறிகளினை இனங்காணல்.
	தனியார் துறையினருடன் பங்குடைமை		* தே.வி.ம. மானியத்தின் பெறுபேறுகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட விளைவுகளுக்கான சந்தை வாய்ப்புக்கள்	* நிதி உருவாக்கத்திற்கு விஞ்ஞான தொழில்நுட்பத்துறையின் பங்களிப்பு * அக சந்தைகளில் பெறுமானம் சேர்க்கப்பட்ட உறபத்திகளை சந்தைப்படுத்தல்.	*தேசிய விஞ்ஞான மன்றத்தின் மானியப் பெறுபேறுகளுக்கு உள்ள அக சந்தை வாய்ப்புக்களின் எண்ணிக்கை. *தொழில்நுட்ப மாற்றீடுகளின் எண்ணிக்கை

முன்னுரிமை பரப்பெல்லை (தேசிய கொள்கை சட்டத்துடன் தொடர்புடையது)	கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித் திட்டங்கள்	ஒதுக்கீடு 2021 (ரூ.மில்லியன்)	பெறுபேறு	விளைவளவு	பிரதான செயலாற்றல் சுட்டிகள் (KPI)
	விஞ்ஞான ஆராய்ச்சி செயற்திறனை வலுப்படுத்துவதற்கு தொடர்ப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்		*பிரகரிக்கப்பட்ட சஞ்ஞிகைகளின் எண்ணிக்கை - 15 *தொடர்பாடல்களின் எண்ணிக்கை - 30	*வலுப்படுத்தப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திறன், இயற்கை வளங்களுக்கு பெறுமதி அதிகரிப்பு மற்றும் குறைக்கப்பட்ட இழப்புகள், வலுப்படுத்தப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திறன்,	*அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்த கருத்திட்டங்களின் எண்ணிக்கை
முன்னுரிமை 1 (பக்கம் 50முன்னுரிமை2(பக்கம்50)முன்னுரிமை3(பக்கம்50)முன்னுரிமை5(பக்கம்50)	தொழில்நுட்பவியல் அபிவிருத்தி மானியங்கள் மற்றும் கொவிட் 19 மானியங்கள் பூரணப்படுத்தப்பட்ட தொழில்நுட்பவியல் மானியங்களைப் பின்தொடர்தல்.				
	விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் சிறப்புத் தன்மையை அங்கீகரித்தல்		*உரிய காலத்தில் வெற்றிகரமாக பூரணப்படுத்தப்பட்ட தேசிய விஞ்ஞான மன்ற ஆராய்ச்சி மானியங்கள் மற்றும் பட்டப் பின் படிப்பு பட்டங்கள் - 10	*இளம் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளுக்கு ஊக்கமளித்தல்	*சமூக பொருளாதார அபிவிருத்திக்கான பங்களிப்பு
	துர நிர்ணயம்		* முன்மொழிவு செய்யப்பட்ட தர நிர்ணய அமுலாக்கத்தைத் திட்டமிடல் * அமுலாக்கம் செய்யப்பட்ட தர நிர்ணயம் தொடர்பில் அறிக்கை செய்தல்	* தேசிய விஞ்ஞான மன்றத்தினால் நிதியளிக்கப்பட்ட திட்டங்களின் தர உத்தரவாதம்.	*தர நிர்ணயத்துடன் வர்த்தகமயப்படுத்துவதற்கு இனங்காணப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை *உருதிசெய்யப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை
	ஆயர்வேத மருத்துவத்திற்கு பெருமானம் சேர்த்தல்		*இனங்காணப்பட்ட ஆராய்ச்சி அபிவிருத்தி தேவைப்பாடுகளின் எண்ணிக்கை	* ஆயுர்வேத பொருட்கள் மூலிகையின் செயல்திறனை ஆய்வு செய்வதற்கான நெறிமுறை	*ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தேவைப்பாடுகள் தேவை என இனங்காணப்பட்டவை
	உணவுப் பாதுகாப்பும் பெருமானம் சேர்ப்பும்		*உணவு உற்கொள்ளும் முறையில் இருக்கின்ற அணர்த்தங்கள் தொடர்பில் அறிக்கை செய்தல்.	* உணவு பாதுகாப்பு கொள்கைக்கான வழிகாட்டுதல்கள் உணவுத் துறையில் பரிந்துரைகள்.	*பாதகமான சுகாதார விளைவுகள் ஏற்படக் கூடிய உணவு வகைகளாக இனங்காணப்பட்டவை *பாதகமான சுகாதார விளைவுகள் ஏற்படுத்தாதவை என இனங்காணப்பட்ட உணவு வகைகள்
	விவசாயத் துறைக்கு பெருமானம் சேர்த்தல்		*பெறுமானம் அதிகரிப்பு தொடர்பில் கவனத்தில் கொள்ளப்பட்ட பரப்பெள்ளைகள்	* விவசாயத் துறைக்கு பெறுமதி சேர்த்தல்	*விவசாயத்தின் பெருமான அதிகரிப்பு செய்யப்பட வேண்டும் என எதிர்ப்பார்க்கப்படும் பரப்பெள்ளைகள்
	முன்னுரிமை பரப்பெள்ளைகளுக்கு அமைவுற்ற வகையில் முறையாக முறைவடிவாக்கம் செய்யப்பட்ட கருத்திட்ட பிரேரணைகளைப் பெற்றுக் கொள்ளல்.		*ஆராய்ச்சி அபிவிருத்தியினால் ஒழுங்கான முறையில் முறை வடிவமாக்கம் செய்யப்பட்ட பிரேரணைகள் *முன்னுரிமை அடிப்படையில் நிதியீடு செய்யப்பட்ட கருத்திட்டங்கள்	நடைமுறை சிக்கல்களினை தீர்வு செய்வதன் ஊடாக தேசிய பொருளாதாரத்திற்கு பங்களித்தல்	கருத்திட்ட நோக்கங்களின் படி பெற்றுக் கொள்ளப்பட்ட பெறுபேறுகள் ஏற்பட்ட பிரச்சினைகளின் எண்ணிக்கை
			*தொழில்நுட்ப அபிவிருத்தியினால் முறையாக முறைவடிவமாக்கம் செய்யப்பட்ட பிரேரணைகள் *முன்னுரிமை அடிப்படையில் நிதியீடு செய்யப்பட்ட கருத்திட்டங்கள்		கருத்திட்ட நோக்கங்களின் படி பெற்றுக் கொள்ளப்பட்ட பெறுபேறுகள் ஏற்பட்ட பிரச்சினைகளின் எண்ணிக்கை
	செயற்திறன் நிர்மாணம் தொடர்பில் நிகழ்ச்சித் திட்டங்களைத் தொடருதல்.		*உருவாக்கப்பட்ட பட்டப்பின் படிப்புப் பட்டங்களும் அறிவு விருத்தியும் - 10 *ஆராய்ச்சி கருத்திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டன - 05	* திறன் மேம்பாடு, பொருளாதார வளர்ச்சிக்காக அறிவு மற்றும் திறன்களை வளர்த்தல், தொழில்துறை சிக்கல்களைத் தீர்த்தல் , பலவற்றை உருவாக்குதல் பல்துறை பங்குதாரர் கூட்டாண்மைகளை உருவாக்கல்.	*பூரணப்படுத்தப்பட்ட ஆராய்ச்சி புழமைப்பரிசில்கள் - 05
	கருவி மானிய திட்டத்தை தொடர்தல்		*நிறைவுசெய்யப்பட்ட மானியங்கள் - 05	* ஆராய்ச்சி வசதிகள் மேம்படுத்தப்படல்	*சிறந்த ஆய்வுகூட கருவிகளைக் கொண்ட ஆய்வு கூடங்கள்
	சிறிய இடைநிலை வியாபார முயற்சிகளின் தேவைகளுக்கு உரிய ஆதரவினை வழங்குதல்		*பயனடைந்த சிறிய இடைநிலை வியாபாரங்களின் எண்ணிக்கை *தொடர்பிரப்பிகளை உருவாக்குதல்	* தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பு.	* இனங்காணப்பட்ட தொழில்நுட்ப தேவைப்பாடுகள் * பயனடைந்த சிறிய இடைநிலை விடை முயற்சிகள்
	வயம்ப பல்கலைக்கழத்தின் கைத்தொழிற்துறை சேவை நிலையத்துடன் பங்குடமை கருத்திட்டம்		*புதிய கருத்திட்டங்கள் - 03	* சந்தையில் புதிய தயாரிப்புகள் * வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்	* தாபிக்கப்பட்ட தொடர்பிணைப்புக்கள்
	NSF mandate b) S&T information dissemination				
	வருமானத்தை பிரப்பிப்பதற்கு தேசிய இலக்குமயப்படுத்தப்பட்ட கருத்திட்டத்தை பயன்படுத்துதல்.		*புதிய கருத்திட்டங்கள் - 03	* அதிகரித்த தெரிவுறிலை மற்றும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட அணுகல் வளங்கள் * பயனர்களின் எண்ணிக்கை அதிகரித்தல் * மின் களஞ்சியத்தை செயல்படுத்தல் * வருமானம் உருவாக்கும் உத்திகள்	*பிரப்பிக்கப்பட்ட வருமானத்தின் நாணய மதிப்பு *E repo


முன்னுரிமை பரப்பெல்லை (தேசிய கொள்கை சட்டத்துடன் தொடர்புடையது	**கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித் திட்டங்கள்**	**முதலீடு 2021 (ரூ.மில்லியன்)**	**பெறுபேறு**	**விளைவளவு**	**பிரதான செயலாற்றல் சுட்டிகள் (KPI)**
	விஞ்ஞான சந்திப்புக்கள் மற்றும் நிகழ்வுகளுக்கான ஆதரவுத் திட்டம் (SSSME)		நிகழ்வுகளின் ஆதரவு - 01	*விஞ்ஞான தொழில்நுட்ப விளைவுகள் தொடர்புடைய சகல பங்காளர்களுக்கும் பரவலாக்கப்பட்டது. *இலங்கை விஞ்ஞானிகளுக்கு சர்வதேச ரீதியில் அங்கீகாரம் *நிகழ்வுகளுக்கு சர்வதேச ரீதியிலான கூட்டினைவுகள்	ஆதரவு வழங்கப்பட்ட நிகழ்வுகளின் எண்ணிக்கை
	வெளியீடுகளுக்கான கட்டணங்களுக்கான ஆதரவுத் திட்டம் (SSPF)		ஆக்கங்களின் ஆதரவு : 06		ஆதரவு வழங்கப்பட்ட ஆக்கங்களின் எண்ணிக்கை ஆதரவு வழங்கப்பட்ட அக எழுத்தாளர்களின் எண்ணிக்கை
	தேசிய விஞ்ஞான மன்றத்தின் சஞ்சிகை		*ஆகக் குறைந்தது 250 கையெழுத்துப் பிரதிகளை செயன்முறையாக்கம் செய்தல் *உரிய நேரத்தில் நான்கு இதழ்களை பிரசுரித்தல் *ஒரு வருடத்திற்குள் ஆகக் குறைந்தது 40 ஆக்கங்களைப் பிரசுரித்தல்	*ஆராய்ச்சு கண்டுபிடிப்புக்களை சர்வதேச ரீதியில் அறியச் செய்தல்	*பிரசுரிக்கப்பட்ட இதழ்கள்
	இலங்கை சமூக விஞ்ஞான சஞ்சிகை		*ஆகக் குறைந்தது 200 கையெழுத்துப் பிரதிகளை செயன்முறையாக்கம் செய்தல் *உரிய நேரத்தில் இரண்டு இதழ்களை வெளியிடல் *ஒரு வருடத்திற்குள் ஆகக் குறைந்தது 12 ஆக்கங்களை பிரசுரித்தல்	* ஆராய்ச்சு கண்டுபிடிப்புக்களை சர்வதேச ரீதியில் அறியச் செய்தல்	* பிரசுரிக்கப்பட்ட இதழ்கள்
	இலங்கை சஞ்சிகைகளுக்கான ஆதரவுத் திட்டம்		*05 இதழ்களுக்கு ஆலோசனை வழங்கப்படல்	*சர்வதேச தரவுத் தளத்தில் இடம்பெறச் செய்யும் வகையில் இதழ்களை தரமாக்கம் செய்தலும் விண்ணப்பித்தலும் *இலங்கை இதழ்களின் தரத்தை மேம்படுத்துதல்	* ESCI இற்குள் 2025 ஆம் ஆண்டிற்குள் நுழையற்கு ஆகக் குறைந்தது 05 இதழ்களுக்கு ஆதரவு வழங்குதல்
	நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கை சஞ்சிகை (SLJOL)		*ஏற்றம் செய்யப்பட்ட சஞ்சிகை ஆக்கங்கள் - 820 *புதிய இதழ்கள் -130	*இலங்கை இதழ்களை நோக்குபவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தல்	*விஞ்ஞான தொழில்நுட்ப இதழ்களின் தரத்தினை மேம்படுத்துதல்
	விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆளனி தளத்தினூடாக விஞ்ஞானியல் நிபுணர்களையும் மற்றும் பெறக் கூடியதாகவிருக்கும் வளங்களையும் பற்றிய தகவல்களை வழங்குதல் (STMIS)		* STMIS இற்குள் உள்ளடக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை விஸ்தரிக்கப்பட்டது - 60 * STMIS இன் தொடர்பினை அமைச்சினதும் மற்றும் அமைச்சின் கீழ் அடங்கும் நிறுவனங்களினதும் வலைத்தளத்தில் உள்ளடக்கல் * STMIS பதிவாளர்களுக்கு புதிய சேவை ஒன்றை அறிமுகப்படுத்துதல்	*கொள்கை தொடர்பிலான தீர்மானங்களை உருவாக்குவதில் விஞ்ஞான தொழில்நுட்ப தகவல்களின் பாவனையை அதிகரிக்கச் செய்தல் *நோக்குகை மற்றும் பாவனையை அதிகரிக்கச் செய்தல்	*உரிய இடத்திலிருந்து விஞ்ஞான தொழில்நுட்ப தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் *பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை *உள்ளடக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை *வழங்கப்பட்ட தரங்களின் எண்ணிக்கை * STMIS இனை பார்வையிட்டவர்களின் எண்ணிக்கை *இணையத்தளத்திற்கான உதவிக் குறிப்புக்கள்
	NSF mandate c) S&T capacity Building				
	புலம்பெயர்ந்த நிபுணத்துவக் குழாமின் ஆதரவினைப் பெறுவதற்கு டிஜிட்டல் தளத்தை தாபித்தல்		*பரஸ்பர அனுகூலங்களுக்கான பங்குடைமை - 05	*புத்தாக்க சூழல் முறைமையினை மேம்படுத்துகை *சமூக பொருளாதார விருத்திக்கு புலம்பெயர்ந்தவர்களை பங்களிப்புச் செய்யச் செய்தல்	*ஆராய்ச்சி அமிலிருத்தியின் தரத்தை மேம்படுத்துவதற்கு புலம்பெயர்ந்தவர்களுடன் கூட்டிணைவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட தரவுத் தளம் *டிஜிட்டல் தரவுத் தளத்தில் பதிவு செய்யப்பட்ட புலம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை *தாபிக்கப்பட்ட புதிய கூட்டிணைவுகள் *அறிவுப் பறிமாற்ற நிகழ்ச்சித் திட்டத்தினூடாக பயனடைந்த ஆராய்ச்சியாளர்களின் எண்ணிக்கை *இறுதிப் பயன்பாட்டு ஆராய்ச்சி கருத்திட்டங்களின் எண்ணிக்கை
	விஞ்ஞான தொழில்நுட்ப புத்தாக்க விருத்திக்கு புலம்பெயர்ந்தவர்களின் செயல்திறமையினைப் பெற்றுக் கொள்ளல்		* ஆராய்ச்சியாளர்களின் செயல்திறன் நிர்மாணம் - 10	*இலங்கையினை புத்தாக்க மையமாக உருவாக்குவதற்கு ஏற்ற வகையில் விஞ்ஞான தொழில்நுட்ப புத்தாக்கம் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தியினூடாக சமூக பொருளாதார விருத்திக்கு பங்களிப்பு செய்தல்	*பயிற்றுவிக்கப்பட்ட ஆராய்ச்சகளின் எண்ணிக்கை *அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஆராய்ச்சி அபிவிருத்தி கூட்டினைவுகளின் எண்ணிக்கை *அறிவுசார்ந்த பிரசுரிப்புக்களின் எண்ணிக்கையை மேம்படுத்துதல் *இறுதி நிலை ஆராய்ச்சிகளை முன்னெடுப்பதற்கு ஆராய்ச்சிகளின் செயல்திறனை மேம்படுத்தல்
	அக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு சர்வதேச மட்டத்திலான நிதியினைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்களை ஆய்வு செய்தல்		* ஆகக் குறைந்தது 02 பாரியங்களைப் பெற்றுக் கொள்வதற்காக 10 பிரேரணைகளின் சமர்ப்பிப்புக்களுக்கு ஆதரவு வழங்குதல்	*அரசிற்கு குறைவான பலுவை வழங்கும் வகையில் ஆராய்ச்சி அபிவிருத்தி விளைவுகளை மேம்படுத்தல்	*சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சி பிரேரணைகளின் எண்ணிக்கை *பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு நிதியங்களின் அளவு

முன்னுரிமை பரப்பெல்லை (தேசிய கொள்கை சட்டத்துடன் தொடர்புடையது)	கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித் திட்டங்கள்	முன்னேற்றம் 2021 (டிசம்பர் வரை)	பெறுபேறு	விளைவளவு	பிரதான செயலாற்றல் சுட்டிகள் (KPI)
	UNESCO MAB நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆராய்சிகளுக்கு ஆதரவு வழங்குதல்		*02 பங்குடமைகளைத் தாபித்தல் *இரு பேணல் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஆதரவு வழங்குதல்	*சூழல் நிலைபெரு தகைமை * MAB நிகழ்ச்சித் திட்டத்தை சரியான நிலையில் வைத்தல் *உயிர்க்கோளவியல் ஒதுக்கீடுகளின் சிறந்த முகாமைத்துவம்	*இனங்காணப்பட்ட ஆராய்ச்சி இடைவெளிகளின் எண்ணிக்கை *ஆதரவு வழங்கப்பட்ட ஆராய்ச்சி கற்கைகளின் எண்ணிக்கை
	தேசிய விஞ்ஞான மன்றம் தேசிய ரீதியிலான மையப் புள்ளி என்ற வகையில் சர்வதேச விஞ்ஞான தொழில்நுட்ப புத்தாக்க அமைப்பாண்மையுடன் உள்ள தொடர்பினை வலுப்படுத்துதல்		*05 புதிய தொடர்புகளை தாபித்தல்	*புத்தாக்க சூழல் முறைமையை அதிகரித்தல்	*இணை நிகழ்ச்சித்திட்டங்களினூடாக பயனடைந்த ஆராய்ச்சியாளர்களின் எண்ணிக்கை
	பங்குடமை நிகழ்ச்சித் திட்டம்		*உலகளாவிய மட்டத்திலிருந்து புதிய அறிவுகளை பெற்றுக் கொள்வதற்கான நிகழ்நிலை அடிப்படையிலான சந்திப்புக்கள்	*உலகளாவிய நடைமுறைகள் பற்றிய அறிவும் அதன் போக்கு பற்றிய விழிப்புணர்வும் கொண்ட ஆராய்ச்சி சமூகம்	*பயனடைந்த ஆராய்ச்சியாளர்களின் எண்ணிக்கை
	தேசிய விஞ்ஞான மன்ற பணிப்பாளை(ர) விஞ்ஞான தொழில்நுட்ப கொள்கை ஆராய்ச்சி				
	தேசிய ஆராய்ச்சி அபிவிருத்தி கணக்கெடுப்பு -2020		*2018 ஆம் ஆண்டிற்கான ஆராய்ச்சி அபிவிருத்தி அளவை பற்றிய புள்ளி விபரவியல் கையேடுகளை சமர்ப்பித்தல் - 01 *2020 ஆம் ஆண்டிற்கான ஆராய்ச்சி அபிவிருத்தி அளவைக்கேப்டின் 40% பூர்த்தியாகியிட்டது - 01	*நாட்டின் ஆராய்ச்சி அபிவிருத்தி செயற்திறன் தொடர்பில் கொள்கை உருவாக்குனர்களுக்கு தகவல்களையும் தரவுகளையும் வழங்குவதாகவிருத்தல்	*2018 ஆம் ஆண்டிற்கான தேசிய ஆராய்ச்சி அபிவிருத்தி அளவையின் தரம் மேம்படுத்தப்பட்டது *2020 ஆம் ஆண்டிற்கான தேசிய ஆராய்ச்சி அபிவிருத்தி அளவை புள்ளிவிபரவியலின் 40% பூரணப்படுத்தப்பட்டது.
	தேசிய விஞ்ஞான மன்ற பணிப்பாளை உ) விஞ்ஞான பிரிவுகப்படுத்துதல்				
	விஞ்ஞான அறிவை மேம்படுத்தவும் விஞ்ஞான கற்கைக்கு ஆதரவு வழங்குவதற்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஏற்ற வகையில் சமூக அடிப்படையில் தொடர்புகளை வலுப்படுத்துதல்		*தாபிக்கப்பட்ட வலையமைப்புகளின் எண்ணிக்கை - 02	*சமூகத்தின் வேறுபட்ட மட்டங்களில் இருப்போர்களின் விஞ்ஞான அறிவினை மேம்படுத்துமுகமாக விஞ்ஞானம் பரவலாகும் வகையில் வலையமைப்புக்களை மேம்படுத்துதல்.	*வெற்றிகரமாக தொடர்பினைப்புக்கள் தாபிக்கப்பட்டன
	முக்கிய ஆராய்ச்சி திகளர்கள் மற்றும் தொழில்நுட்பங்களை சம்பந்தப்பட்ட பங்காளர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு மாற்றீடு செய்தல்		*இனங்காணப்பட்ட ஆராய்ச்சிகளைப் பற்றிய தேவைப்பாடுகள் - 05 *எல்லைகடந்த நிகழ்ச்சித் திட்டங்கள் - 03 *சமூகத்துடன் தொடர்பெடுப்பு - 02	*கிராமிய மட்டத்தில் குடிசை கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கு ஏற்ற வகையில் தொழில்நுட்ப அறிவினை வழங்குதல்	*முன்னெடுக்கப்பட்ட எல்லை கடந்த நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை
			*ஊடக சந்திப்புக்களும் கூட்டங்களும் - 02	*விஞ்ஞான தொழில்நுட்ப விளைவுகளை அபிவிருத்திக்கு பயன்படுத்துதல்	*செய்கை முறைக்கு உள்ளடக்கப்பட்ட ஆராய்ச்சி விளைவுகளின் எண்ணிக்கை
	சுகாதார சிக்கல்கள் மற்றும் ஏனைய முக்கியமான விடயங்கள் தொடர்பில் புதிய மற்றும் தொழில்நுட்பங்கள் பற்றிய அறிவை வேறுபட்ட ஊடகங்களினூடாக பொதுமக்களுக்கு அறியச் செய்தல்		*இதழ்கள் / புத்தகங்களின் எண்ணிக்கை *வலைத்தள அடிப்படையிலான கலந்துரையாடலின் எண்ணிக்கை - 04	*அறிவு மேம்படுத்துகை	*பிரசுரிக்கப்பட்ட விதுரவ புத்தகங்களின் எண்ணிக்கை மற்றும் முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் -
	விஞ்ஞானப்படுத்துகையை பிரபல்யப்படுத்துகை தொடர்பில் உலக விஞ்ஞான தின நிகழ்ச்சித் திட்டங்களும் தேசிய விஞ்ஞான மன்ற விருது வைவங்களும்.		*நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை - 1 *விருதுகளின் எண்ணிக்கை -145	* விஞ்ஞானத்தில் மாணவர்களின் ஈடுபாட்டினை ஊக்குவித்தல்	*நிகழ்வுகள் வெற்றிகரமாக பூரணப்படுத்தப்பட்டன
	"COVID-19: From Adversity to Serendipity" பற்றிய மாநாடு		*வெற்றிகரமாக நடாத்தப்பட்ட மாநாடுகளின் எண்ணிக்கை 01 அத்துடன் புத்தகத் தொடர்பு	*தொற்றுநோய் பரவாது தடுத்தல் அதனால் ஏற்படக்கூடிய சுகாதார விளைவுகள் அதனைக் கட்டுப்படுத்தல் தொடர்பில் அறிவினை மேம்படுத்துதல்	*அறிவு சார்ந்த பிரசுரிப்புக்கள்
	பாடசாலை சமூகத்தில் ஆராய்ச்சி மற்றும் புத்தக கலாச்சாரத்தை உருவாக்குதலும் விஞ்ஞான கற்கைக்கு ஆதரவு வழங்குதலும்		*புதிய ஆராய்ச்சி கருதுகோல்கள் - 80	*விஞ்ஞான அறிவினை மேம்படுத்துதல் *பாடசாலை சமூகத்தினருடைய ஆராய்ச்சி கலாச்சாரத்தை புகுத்துதல் *இயற்கையை நேசிக்கும் எதிர்கால சந்ததியினரை உருவாக்குதல்	*பங்குபெற்ற பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை *பங்குபற்றிய பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை *மேலதிக விருத்திக்கு சாத்தியமுடைய கருத்திட்டங்களின் எண்ணிக்கை
	சிறந்த ஆளுமை மற்றும் உற்பத்தித் திறன் மேம்படுத்துகை				
	கிறந்த ஆளுமையுடன் தொடர்தல்		*சிறந்த கல்வியும் சிறந்த பயிற்சியுமுடைய பதவியணியினர்களின் எண்ணிக்கை 20	* பணியினை சிறப்பாக ஆற்றக் கூடிய வகையில் பதவியணியினர் ஊக்குவிக்கப்படல்	*விருத்தி செய்யப்பட்ட மனித மூலதனங்களின் எண்ணிக்கை

விளைவு/பெறுபேறு அடிப்படையிலான செயல்திறன் மதிப்பாய்வு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திறன் மேம்பாடு

விஞ்ஞான தொழில்நுட்ப செயற்றிறன் நிர்மாணம்

2021 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இலங்கையில் உள்ள விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களில் உள்ள நிதி, பௌதீக மற்றும் மனிதவள வளங்களை நிரப்புவதற்கு தேசிய விஞ்ஞான மன்றம் தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது. சமூக அறிவியல் உட்பட விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் அனைத்து துறைகளிலும் மானியங்கள் வழங்கப்படுகின்றன. உரு 14 ஆனது, 2021 இல் வழங்கப்பட்ட புதிய மானியங்களின் விவரங்களைக் காட்டுவதுடன், இணைப்பு 02 ஆனது அது தொடர்பிலான விவரங்களை வழங்குகிறது. அட்டவணை 04 ஆனது 2021 ஆம் ஆண்டில் கண்காணிக்கப்படும் அனைத்து ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்களின் நிலையைச் சுருக்கமாகக் கூறுகிறது.




உரு 14: 2021ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட புதிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்கள்

அட்டவணை 04: ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்களின் நிலைப்பாடு சுருக்கமாக


துறை /கள்மூ	வருட காலப்பகுதியில் நடைமுறையில் உள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை			வருட காலப்பகுதியில் பூரணப்படுத்திய கருத்திட்டங்களின் எண்ணிக்கை			2022ஆம் ஆண்டிற்கு எடுத்து செல்லப்பட்ட மொத்த கருத்திட்டங்களின் எண்ணிக்கை		
	அடிப்படை	பிரயோகம்	உற்பத்தி அபிவிருத்தி	அடிப்படை	பிரயோகம்	உற்பத்தி அபிவிருத்தி	அடிப்படை	பிரயோகம்	உற்பத்தி அபிவிருத்தி
விவசாயம்	1	12	10	-	2	1	1	10	9
உயிர் தொழில்நுட்பம்	2	3	-	1	1	-	1	2	-
அடிப்படை விஞ்ஞானம	4	10	-	-	1	-	4	9	-
எந்திரவியல் கட்டிடக்கலை தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம	1	10	6	-	-	2	1	10	4
சூழல் உயிர் பல்வகைமை	5	4	1	3	1	-	2	3	1
சுகாதார விஞ்ஞானம்	7	21	1	3	2	-	4	19	1
சமூக விஞ்ஞானம்	1	-	-	-	-	-	1	-	-
காலநிலை மாற்றம் இயற்கை அனர்த்தம்	-	5	-	-	-	-	-	5	-
மொத்தம்	21	65	18	7	7	3	14	58	15
திரள் மொத்தம்	104			17			87		

பதினெட்டு (18) நிறுவனங்களைச் சேர்ந்த முதன்மை ஆய்வாளர்கள் மற்றும் இணை ஆய்வாளர்கள் (PIகள் மற்றும் Co-Is) உட்பட 258 க்கு சமமான ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்களால் பயனடைந்தனர்.




உரு 15: நடப்பில் உள்ள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்களின் மூலம் பயன் பெற்ற நிறுவனங்கள்

2021 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 4 காப்புரிமைகள், முன் வைக்கப்பட்ட 2 காப்புரிமை விண்ணப்பங்கள், 26 வெளிநாட்டு வெளியீடுகள், 07 உள்ளூர் வெளியீடுகள் மற்றும் 95 தகவல் தொடர்புகள் (படம் 16) என மொத்தமாக 128 வெளியீடுகள் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்களிலிருந்து பெற்ற பெறுபேறாகும், காப்புரிமைகள் பொறியியல், கட்டிடக்கலைமற்றும் தகவல் .தொடர்பாடல் மற்றும் தொழில் நுட்பம், உயிர்த் தொழில் நுட்பம், மற்றும் சுகாதார விஞ்ஞான துறைகளினை சார்ந்தவை ஆகும்.



உரு 16: ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திட்டங்களில் இருந்தான வெளியீடுகள் மற்றும் காப்புரிமைகள்

திறன் மேம்பாட்டின் கீழ், தேசிய விஞ்ஞான மன்றமானது 24 மாணவர்களுக்கு முதுகலை பட்டப்படிப்புகளைப் பின்பற்ற உதவித்தொகை மானியங்களை வழங்கியது. அவர்களில், 16 மாணவர்கள் 2021 இல் முதுகலை பட்டப்படிப்பை முடித்தனர்.



உரு 17: வேறுப்பட்ட விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப துறைகளில் கற்றுத் தேர்ந்த ீனு, ஆீடை பட்டதாரிகளின் எண்ணிக்கை

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகள் வெற்றியீட்டிய சந்தர்ப்பங்கள்

சந்தை வாய்ப்புக்களினை ஆய்வு செய்தல்

தேசிய விஞ்ஞானம் மன்றத்தின் மானிய தயாரிப்புகளின் பொருளாதார ஆதாயத்திற்கான சந்தை வாய்ப்புகளை ஆராய்வதற்காக தேசிய விஞ்ஞான மன்றமானது, புழழன ஆயசமநவ, ளுசை டுயமெய உடன் கூட்டிணைந்தது. புழழன ஆயசமநவ, மற்றும் தேசிய விஞ்ஞான மன்ற மானிய பெறுநர்கள் ஆகியோர்களுக்கிடையே கலந்துரையாடல்கள் இடம் பெற்றன. அதி வேகமாக வளரக்கூடிய (ளையெயளைஎந) நீர்வாழ் தாவரமான நீர் பதுமராகத்திலிருந்து 'ளுயசர ழுசபயஎைஉ' தயாரிப்புகள், மாம்பழ வினாக்கிரி உட்பட பழ கழிவுகளிலிருந்து பல்வேறு உணவுப் பொருட்கள் மற்றும் மூலிகையினால் உருவாக்கப்பட்ட' ளரளெஉசநநெ' ஆகியவை கவனம் செலுத்தப்பட்ட மானிய தயாரிப்புகளாகும்.




மானியம் பெறுனர், திரு என். தர்மசிரி தனது உற்பத்தியினை புழழன ஆயசமநவ குழுவிற்கு முன்னளிப்பு செய்கிறார



Good Market குழுவினர; *"Saru Organic"*உற்பத்தியின் உற்பத்தி செயன்முரையினை பரிசீலிக்கின்றனர்

புழழன ஆயசமநவ குழுவானது ”ளுயசர ழுசபயனை” என்ற உற்பத்தி தொடர்பில் சோதனை மற்றும் பரிசீலனை செய்வதற்கு நாத்தாண்டியாவில் உள்ள அதன் கருத் திட்டப் பகுதிக்கு வருகைசெய்து பரிசீலனை செய்த பின்னரே ஆய்வு தயாரிப்பானது சந்தைக்கு வந்தது. இந்த உற்பத்திக்கு ீபுளு சான்றிதழானது புழழன ஆயசமநவ இனால் வழங்கப்பட்டதுடன் இத்தயாரிப்பானது புழழன ஆயசமநவ இன் வலை தளத்தில் பதியப்பட்டது. அதன்படி, இந்த மானிய தயாரிப்பானது தற்போது புழழன ஆயசமநவ இன் உலக மட்டத்து தளத்தில் (புடழடியட ிடயவ கழசஅ) பதிவு செய்யப்பட்டுள்ளது.



அக மற்றும் வெளிநாட்டு காப்புரிமைகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இரு மானிய அடிப்படையிலான உற்பத்திகள்



TG/2016/Tech-D/01


ஆனது உள்ளூர் காப்புரிமையில் பெறுபேற்றினைத் விளைவித்தது. அமெரிக்க டாலர் 10,912,464 டீ2 ஆனது, ‘ளுலளவநஅ யனெ அநவாழன கழச அழவைழசனெபெ எயளஉரடயச ளலளவநஅ ாநயடவா’.

என்ற தலைப்பிலான புத்தாக்கம் தொடர்பில் ஆகும்.



TG/2014/Tech-D/01

ஆனது 20167 உள்ளூர் காப்புரிமையில் ‘ஆநவாழன கழச வாந டிழைடழபஉயட ளைெநஉவ ாநளவ அயயெபநஅநவெ ழக டீசயளளஉயஉநயந கயஅடைல உசழிள யனெ யசவகைகஉயைட னநைவ கழசஅரடயவழைளெ கழச அயளள சநயசனெபெ னையஅழனெ டிடயஉம அழவா’. என்ற தலைப்பிலான புத்தாக்கம் தொடர்பில் ஆகும்.



TG/2017/Tech-D/02

கீழ் குறிப்பிடப்பட்ட தலைப்பிலான புத்தகமானது, அக படகு உற்பத்தியாளர் சமூகத்தினர் அறிவினை பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதற்காக வெளியிடப்பட்டது புத்தகத்தில் ஒன்பது அத்தியாயங்கள் ஆங்கில மொழியிலும் ஏழு அத்தியாயங்கள் சிங்கள மொழியிலும் அமைந்துள்ளது.

தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஆதரவானது உள்ளூர் பானம் சந்தையை உற்சாகப்படுத்துகிறது

உள்நாட்டில் உருவாக்கப்பட்ட, 100மூ இயற்கையான, போசணை மிக்க பானமானது இப்போது விளையாட்டு வீரர்கள், இளைஞர்கள், பள்ளிக் குழந்தைகள் மற்றும் முதியோர்களின் தாகத்தைப் போக்குகிறது. நான்கு வெவ்வேறு இயற்கை சுவைகளுடன் கூடிய மோர் புரதம் நிறைந்த இப் பானமானது இஞ்சி, மாம்பழம்,' ளழரசளழ' மற்றும் பாஷன் பழம் ஆகிய சுவைகளில் நவீன அங்காடிகளில் காணக்கூடியதாக உள்ளது. மிகவும் 'இயற்கையான பானம்' என்ற தனித்துவமே இப்பானங்கள் அதிகளவு விற்கப்படுவதற்கு எதுவாக அமைகிறது.

இந்த உற்பத்தி விருத்திக்கான நிதிப் பங்காளி என்ற வகையில் தேசிய விஞ்ஞான மன்றம் இருப்பதனால், பாற் கட்டி தொழிற்துறையின் துணைப் பொருளைப் பயன்படுத்தி, புதிய தயாரிப்பு ஒன்றினை விருத்தி செய்வதற்கான வழியினை ஆய்வு செய்தது.இந்த ஆய்வின் பெறுபேறு அதிக புரதத்தினை கொண்ட ஆற்றல் மிகு பானமான மோர் ஆகும்.துணைப் பொருளுக்கு பெறுமானம் சேர்ப்பதன் மூலம் உருவாகும் இந்த புதிய தயாரிப்பானது, புதிய சந்தை மற்றும் புதிய வேலை வாய்ப்புக்களுக்கு பாதை வகுப்பதோடு அக மட்டத்தில் செயற்படும் சிறிய இடைநிலை வியாபார முயற்சிகளின் தரத்தினை மேலும் மேம்படுத்தும். இத் தயாரிப்பின் பண்புகள் மற்றும் தனித்துவம் என்பன கைத்தொழில் தொழில் நுட்ப நிறுவகத்தில் சோதிக்கப்பட்டுள்ளது

பால் துறையில் அக மட்டத்தில் செயற்படும் சிறிய இடைநிலை வியாபார முயற்சியாக உள்ள வரையறுக்கப்பட்ட டுடைை ஊநநளந தனியார் நிறுவனத்தின் மூலம் இத் தயாரிப்பு உருவாக்கப்பட்டுள்ளது. அக மட்டத்தில் செயற்படும் சிறிய இடைநிலை வியாபார முயற்சியின் புரட்சிகரமான ஒரு தயாரிப்பாக இத் தயாரிப்பு கருதப்படுகிறது.


"Lili" மற்றும் "ARPICO" வர்த்தக நாமத்தின் கீழ் உள்ள தயாரிப்புகளாவன வரையறுக்கப்பட்ட கொமாரிகா தனியார் நிறுவகத்தினால் சந்தைப்படுத்தப்படுகின்றன. தொழில்நுட்ப மானியம் TG/2016/Tech-D/06 இன் கீழ் இத் தயாரிப்பு விருத்தி செய்யப்பட்டு ஆதரிக்கப்பதுவதுடன், "உள்ளூர் மற்றும் இயற்கை" என்ற குறிச்சொல்லுடன் சந்தைப்படுத்தப்படுகிறது'.





2021 இல் வழங்கப்பட்ட மானியங்களில் இருந்து பெற்றுக்கொண்ட பெறுபேறுகள் கறுவாப்பட்டை மீதான சிறப்புத் திட்டம்

- இலங்கை கறுவாப்பட்டை மற்றும் காட்டு வகைகளின
- இரசாயன விரல் அச்சிடுதலை உறுதிப்படுத்துதல்
- கறுவாப்பட்டையின் மரபணுவை வரிசைப்படுத்தல் - Zeylanicum -உலகில் 1வதாகும
- முழுமையான குளோரோபிளாஸ்ட் மரபணுக்களை வரிசைப்படுத்தல்




- சுற்றுலாத் தொழிலில் ஈடுபடுத்துவதற்கு கருவாப்பட்டையின் பயன்பாட்டினை அடையாளம் காணுதல்



- கருவாப்பட்டை அடிப்படையிலான உற்பத்தியின் முன்மாதிரி.



- இலங்கை கருவாப்பட்டையின் நீரிழிவு எதிர்ப்பு பண்புகளை மதிப்பீடு செய்தல்


BIOCHEMISTRY, BIOPHYSICS AND MOLECULAR BIOLOGY

In vitro anti-diabetic effects and phytochemical profiling of novel varieties of *Cinnamomum zeylanicum* (L.) extracts

Research article · Biochemistry · Food Science and Technology · Plant Science · Pharmacology

W.A. Niroshani M. Wariyapperuma[1], Saganka Kannangara[2], Yasanandana S. Wijayasinghe[3], Sri Subramanium[4], Bimali Jayawardena[1]

Published November 2, 2020

- கறுவாப்பட்டை இலை எண்ணெய் சாற்றைப் பயன்படுத்தி இயற்கை ஆக்ஸிஜனேற்றம் ஒருங்கிணைந்த கையுறைகளை உற்பத்தி செய்தல

OP 12-03: Method of incorporation of natural antioxidant from cinnamon leaf oil as an antioxidant into surgical and examination gloves

S Abira[1], RD Gunaratne[2], PA Paranagama[3], KRD de Silva[1]

[1]Interdisciplinary Center for Innovations in Biotechnology & Neurosciences, Faculty of Medical Sciences, University of Sri Jayewardenepura, Sri Lanka

[2]Department of Biosystems Technology, Faculty of Technology, University of Sri Jayewardenepura, Sri Lanka

[3]Department of Chemistry, Faculty of Science, University of Kelaniya, Sri Lanka

கீழ் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் தனி வரைவு நூல்கள் தயாரிக்கப்பட்டன

- தரம் மற்றும் பாதுகாப்பு தரநிலைகள்
- பணிச்சூழலியல் பொருளாதாரம்
- உணவு பாதுகாப்பு மற்றும் தரம்
- கறுவாப்பட்டையின் பெறுமானச் சங்கிலி நடவடிக்கைக்கான தொழில் முனைவோர் வழிகாட்டி
- பெறுமான சங்கிலிக்கான சந்தைப்படுத்தல் உத்தி
- கண்டறியக்கூடிய தன்மை



ஏனைய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பெறுபேறுகள

இது தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவனத்தினால் (NIFS) முன்னெடுக்கப்பட்ட ஒரு கருத்திட்டமாகும்.இதற்கமைவுற உயிரியக்கமானது உருவாக்கப்பட்டு, கரிம வேளாண்மையில் பயன்படுத்த உயிர் உரம் மற்றும் உயிர் கட்டுப்பாட்டு தடுப்பூசிகளை உற்பத்தி செய்ய தொடங்குதலாகும்.


50L Bioreactor installed at the NIFS laboratory

இது பேராதனைப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்டகருத்திட்டமாகும். முகமூடிகள் வடிகட்டிப் பொருட்களின் வடிகட்டுதல் திறனை அளவிடுவதற்கு குறைந்த செலவில் துகள் வடிகட்டி பகுப்பாய்வு உருவாக்கப்பட்டுள்ளது.

மானிய இல. : RG/2016/BT/03

முதன்மை ஆராயச்சியாளர : கலாநிதி ஏ அருள்காந்தன
விலங்கு வைத்திய மற்றும் மிருக விஞ்ஞான பீடம
பேராதனைப் பல்கலைக்கழகம்.




"Preparation for the PCR based assay for diagnosis of a disease in ornamental fish"

கருத்திட்டத்தின் தலைப்பு : இலங்கையில் நன்னீர் அலங்கார மீன்களில் மைக்கோ நுண்ணுயிர் நோய் பற்றிய ஆய்வுகள

இவ்வாய்வின் முக்கிய குறிக்கோள், இலங்கையில் நன்னீர் அலங்கார மீன்களில் (தங்கமீன், கொய்கிராப்ஸ், கப்பி, மொல்லி, பிளாடி வகை மீன்கள்) எற்படுகின்ற மைக்கோ நுண்ணுயிர் இனங்களை அடையாளப்படுத்தி மூலக்கூறு நோய்நிர்ணய நுட்பமொன்றினை உருவாக்குவதாகும். மைக்கோ நுண்ணுயிர் இனங்கள் விசேடமாக எம். போச்சுரியம் என்ற வகையானது இலங்கையில் நன்னீர் அலங்கார மீன்களில் பரந்தளவில் காணப்படுவதை இவ்வாய்வு வெளிப்படுத்தியது. மீன்களில் மைக்கோ நுண்ணுயிரகளைக் கண்டு பிடிப்பதற்கு துரிதமான ஆய்வுகூட நோய்நிர்ணய கருவியொன்றாக இவ்வாய்வினைப் பயன்படுத்தக்கூடிதாகவிருக்கும் என உள்ளகப் பதிகருவி இடைவெளி பீசிஆர் உறுதிப்படுத்தியது. இலங்கையில் அலங்கார மீன்கள் துறையினை தரமுயர்ததும் பொருட்டு அலங்கார மீனகளின் ஆரோக்கியத்தினை உறுதிப்படுத்துவதற்கான தேசிய சேவையொன்றாக இவ்வாய்வில் உறுதிப்படுத்தப்பட்ட நோய்நிர்ணய நுட்பங்கள், அரசாங்கம், தனியார் துறை, பண்ணையாளர்கள், நீர்வாழ் உயிரினச் சாலைகளின் உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் போன்றோரின் பயன்பாட்டுக்காக நீர்வாழ் உயிரின நோய்நிர்ணய ஆராய்ச்சி நிலையம், பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகிய வற்றில் கிடைக்கப்பெறுகின்றது.

மானிய இல. : RG/2016/BT/04

முதன்மை ஆராயச்சியாளர : பேராசிரியர் ரணில் தசானாயக்க
இரசாயனவியல் திணைக்களம்
விஞ்ஞான பீடம்
கொழும்பு பல்கலைக்கழகம



P. pastoris GS115 colonies transformed with linearized pPICZ A-Gal1-EGFP


கருத்திட்டத்தின் தலைப்பு : பிச்சியா மாப்பசை ஈஸ்ட் மாதிரி முறைமையில் சுயே இடையீட்டு வழியின் மரபியல்மாற்ற மீளுருவாக்கம்

அதிக செலவு மற்றும் அதிக நேரம் எடுத்துக் கொள்ளல் காரணமாக பண்பாட்டு வளர்ப்பில் பரிசோதிப்பதற்கு கடினமாக காணப்படுகின்ற RNA இடையீட்டில் இலக்கின் அழிவில் dsRNA வடிவமைக்கப்பட்ட கணனி மூலம் தூண்டுதல் எவ்வளவு செயல்திறன்வாய்ந்தது என்பதை உறுதிப்படுத்தப்படுத்துவதற்கு இவ்வாய்வில் உருவாக்கப்பட்ட மரபியல் மாற்றம்செய்யப்பட்ட பிச்சியா மாப்பசை திரிபினை என்பதற்கு பயன்படுத்தலாம்.

EGFP அடையாளமிடப்பட்ட ஈஸ்ட் வெளியீட்டு நெறியம் மற்றும் RNAi வெளியீட்டு மரபியல் மாற்றம்செய்யப்பட்ட பிச்சியா மாப்பொருள் பசை என்பன அவை முழுமையாக உறுதிப்படுத்தப்பட்டவுடன் இலங்கையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறைக்காக கிடைக்கப்பெறச் செய்யப்படும்.

மானிய இல. : RG/2017/EB/01

முதன்மை ஆராயச்சியாளர : பேராசிரியர் சந்திம டி. தங்கல்ல
விலங்கியல் மற்றும் சுற்றாடல் விஞ்ஞானங்கள் துறை
விஞ்ஞான பீடம்
கொழும்புப் பல்கலைக்கழகம்



Dorsal view of Neocollyris (Stenocollyris) vedda Male

கருத்திட்டத்தின் தலைப்பு: இலங்கையின் புலி வண்டுகளின் (கொழியெபப்பெடேரா, சிசின்டெலிடி பல்வகைமை, பரம்பல் மற்றும் வாழிட வகைகள்


மரங்களில் வாழுகின்ற புலி வண்டுகள் இலங்கையின் வேட்டையாடும் பீடைகளில் குறைவாக ஆய்வுசெய்யப்படும் வகைகளாக காணப்படுகின்றன. கடந்த கால வெளியீடுகள் நாட்டில் 30 வகையான உயிரினங்கள் இருப்பதாக பதிவுசெய்துள்ளன. அவற்றில் 23 இனங்கள் அழிவடையும் நிலையிலுள்ளன. எவ்வாறாயினும், இவ் வெளியீடுகள் 100 ஆண்டுகளுக்கும் மேற்பட்டவையும் மிகவும் காலம் பிந்தியவையும் ஆகும் எனவே, ஒரு பிரதேசத்திற்கு உரித்தான இவ்வகை வண்டு இனங்கள் பற்றிய தற்கால ஆய்வுகள் அவசியமாயின. அனைத்து காலநிலை வலயங்கள் மற்றும் மாகாணங்கள் அத்துடன் 20 மாவட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கி நாட்டினுள் 85 அமைவிடங்கள் ஆய்வுசெய்யப்பட்டதுடன், பல்வேறு வகையான வாழிட வகைகளும் கணக்கெடுப்பு செய்யப்பட்டன. மரம் வாழ் புலி வண்டு இனங்கள், அவை உருவாகின்ற அமைவிடங்கள், அவற்றின் அமைவிடங்களின் சுற்றாடல் சார்ந்த அளவுருக்கள், உருவமைப்பு மற்றும் உரு அளவுகள் என்பன அமைக்கப்பட்டு இலங்கையின் புலி வண்டு இனங்களுக்கான தானியக்கம் செய்யப்பட்ட அடையாளப்படுத்தும் முறைமை ஒன்றினை உருவாக்குவதற்காக பயன்படுத்தப்பட்டன.

மானிய இல. : RG/2017/EB/05

முதன்மை ஆராய்ச்சியாளர் : பேராசிரியர் எம்.பீ.எஸ்.கும்புரேகம
விலங்கியல் திணைக்களம்
விஞ்ஞான பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம

கருத்திட்டத்தின் தலைப்பு : நுவரெலியா மாவட்டத்தில் நில வாழ் நத்தை பீடைகளின் பரம்பல், அவற்றின் பருவகால அதிகரிக்கும்தன்மை மற்றும் விவசாயக் காணிகளில் பயிர்களுக்கான சேதத்தின் அளவு

நில வாழ் நத்தைகளின் மொத்தமாக பதின்நான்கு வகையான இனங்கள் விவசாயக் காணிகளில் இனங்காணப்பட்டன. 64மூ சதவீதமானவை அயற் பண்புடைய பீடை இனங்களும் 36மூ சதவீதமானவை இடம்சார் இனங்களுமாக காணப்பட்டன. அயற் பண்புடைய நத்தை இனங்கள் விவசாயக் காணிகளில் பரந்தளவில் காணப்பட்டதுடன் சுற்றாடல் காரணிகளுக்கான பரந்த வகையான சகிப்புத்தன்மையினை அவை காண்பித்தன. உயரம், மழை வீழ்ச்சி, வளிமண்டல அழுத்தம் என்பன அயற் பண்புடைய இனங்களுக்கான முக்கிய ஆளுகைக் காரணிகளாகக் காணப்பட்ட அதேவேளை அனைத்து அளவீடு செய்யப்பட்ட சுற்றாடல் ரீதியான காரணிகளும் ஆண்டு முழுவதுமான பரம்பலையும் இடம்சார் இனங்களையும் பாதித்தன. இயற்கை வாழிடங்களுக்கான ஏதேனும் மாற்றம் ஏற்படுத்தல் இடம்சார் இனங்களை மோசமாக பாதித்த அதேவேளை அயற் பண்பு இனங்கள் அத்தகைய சுற்றாடல்களை சாதகமாக ஆக்கிக் கொள்கின்றன. நுவரெலியா மாவட்டத்தில் அயற் பண்புடைய பீடைகள் மற்றும் இடம்சார் நத்தை இனங்களின் பரம்பல் மற்றும் ஏராளமான தன்மைகள் பற்றிய தகவல்கள் என்பன நிலத் தோற்றம் அமைத்தல் திட்டமிடல் மற்றும் வாழிட மாற்றியமைத்தல் என்பன தொடர்புபட்ட முகாமைத்துவ திட்டங்களை வகுப்பதற்கு உதவக் கூடியன.



நுவரெலியா மாவட்டத்தில் விவசாயக் காணிகளில் நில வாழ் நத்தை இனங்களின் பரம்பல்
அ. அயற் பண்புடைய நத்தை பரம்பல்
ஆ. அயற் பண்புடைய இலையட்டை பரம்பல்
இ. இடம்சார் இனங்களின் பரம்பல்


மானிய இல. : RG/2016/BS/01

முதன்மை ஆராய்ச்சியாளர் : பேராசியரியர் ஆர் எம் ஜி ராஜபக்ஷ
இரசாயனவியல் துறை
விஞ்ஞான பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம


கருத்திட்டத்தின் தலைப்பு : மீள்மின்னேற்றம்செய்யத்தக்க மின்கலங்கள் மற்றும் மிகை மின்தேக்கிகளுக்கு பயன்படுத்தக்கூடிய அயனி திரவம் - அடிப்படையிலான களிம பல்படியம் மின்அயனிகளின் இணைப்பாக்கம் மற்றும் பண்பாக்கம்

சூரிய கலங்கள் இரவிலும் கூட செயற்படுவதை இயலச்செய்கின்ற அகச்சிவப்பு கதிர்வீச்சுடன் மாத்திரம் செயற்படக்கூடிய நிற உணர்திறன்பெற்ற சூரிய கலங்களை உருவாக்குவதற்காக மூடப்படாத அகச்சிவப்பு கதிர்வீச்சினைப் பயன்படுத்துகின்ற ஒட்டுமொத்தமாக நூதனமான எண்ணக்கருவின் அடிப்படையிலமைந்ததாகும். இக்கருத்திட்டத்தின் ஊடாக மூன்று வேறுபட்ட ஒளித்து மேல்மாற்று முறைமைகள் உருவாக்கப்பட்டன.

முறைமை 1: இடைமாறு உலோக அயனி கலப்புசெய்யப்பட்ட TiO_2 - இம் மேல்மாற்று வகையானது நிற உணர்திறன்பெற்ற சூரிய மின்கல பிரயோகங்களுக்கு உகந்ததல்ல. எனினும், இம்மேல்மாற்று வினையூக்கிகள், ஐதரசன் வாயுவினை உருவாக்குவதற்கு சூரிய சக்தியினை ஐதரசன் எரிபொருளாக்குவதில் சிறந்ததாகக் காணப்படுகின்றது. ஆகையினால், இவ்வினையூக்கிகளை அளவிட்டு பயனடைவதற்கான மேலதிக ஆராய்ச்சியானது தூய சக்தி பிறப்பாக்கத்திற்காக ஐதரசனை உருவாக்குவதை நோக்கி முன்னெடுக்கப்படவேண்டும்.




System 1



System 3

முறைமை 2: லதனைற்று அயனி கலப்புசெய்யப்பட்ட TiO_2 -இது ஒரு நூதமான கண்டுபிடிப்பாகும். இவ்வாய்வில் முதற்டவையாக அகச்சிவப்பு ஒளியூட்டத்தின் கீழ் மாத்திரம் செயற்படுவதற்கு சூரிய மின்கலமொன்று உருவாக்கப்பட்டது. இரவிலும் கூடச் செயற்படக்கூடிய சூரிய மின்கலத்தை உருவாக்கவதற்கான எமது முன்மொழிவு புராணக்கதையல்ல அது யதார்த்தம் என்பதே இதன் அர்த்தமாகும். மேல்மாற்றுசெய்யப்பட்ட அகச்சிவப்பு கதிர்வீச்சுடன் செயற்படுவதற்கு சூரிய மினகலங்கள் உருவாக்கப்படலாம் என்ற எண்ணக்கரு இவ் ஆய்வின் ஊடாக நிரூபனமாகியது.

முறைமை 3: இயற்கை நிறம் அடிப்படையிலான நிற உணர்திறன்பெற்ற சூரிய மின்கலங்கள் - இயற்கை நிறங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட நிற உணர்திறன்பெற்ற சூரிய மின்கலங்கள் அதிகம் மேம்பட்ட சுயஆயுற்காலத்தைக் கொண்டன என்றும் இவ்வியற்கை நிறத்திற்கு அதிகூடிய வினைத்தறினை பதிவுசெய்தது என்றும் இவ்வாய்வு காண்பித்தது. இவ்வாராய்ச்சியினை பயனுள்ளதாக முன்னேற்றுவது முக்கியமானதாகும்.



System 2

மானிய இல. : RG/2017/AG/04

முதன்மை ஆராயச்சியாளர : டப்.எம்.பீ.பீ. வீரசிங்ஹ
மிருக வைத்திய ஆராய்ச்சி நிருவகம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

கருத்திட்டத்தின் தலைப்பு : காலநிலை மாற்றப் பின்னணியில் பாலுட்பத்தியின் நிலைபெறு தன்மையினை தீவிரப்படுத்துவதற்காக புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தீவனங்களின் ஆய்வுகூடத்தில் உருவாக்கப்பட்ட மற்றும் இயற்கையாக உருவாக்கப்பட்டவற்றை பரிசோதித்தல்

இலங்கை தற்போது பால் தேவையின் சுமார் 60 சதவீமானவற்றை இறக்குமதிசெய்கின்றது. பாற்பசுக்களின் மோசமான போசனை நாட்டின் பால் அபிவிருத்திக்கான பிரதான தடைகளில் ஒன்றாக இனங்காணப்பட்டுள்ளது. கிடைக்கப் பெறுகின்ற சக்கைதீவன வகைகள் குறைந்தளவான போசனைத் தரம் கொண்டவையாகும். மேலும் அவற்றின் போசனை தரம் பற்றிய தகவல்கள் விஷேடமாக சமிபாடடையும் அளவுருக்கள் மிகக் குறைவானவை அல்லது கிடைக்கப்பெறுவதில்லை, இதன் காரணமாக பால் பசுக்களின் தீவனப் பொருட்களை முறையான சமநிலைப்படுத்தலை அடைந்துகொள்வது கடினமானதும், நாட்டில் பால் மாடுகளின் அனேகமானவற்றின் பால் உற்பத்திக்கான வாய்ப்புகளை அடையமுடியாதவையாகவும் ஏற்படுத்தியுள்ளது. இக் கருத்திட்டமானது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தீவன வகைகள் (தீவன இறுங்குச்சோளம், கரும்புப் புல், ஆணைப்புல் கலப்பு ஊழ3 மற்றும் ஊழ4 புல்லினங்கள் என்பன) நாட்டின் பசுக்களின் பால் உற்பத்தியினை அதிகரிப்பதற்கு செயல்திறன்வாய்ந்த விதத்தில் பயன்படுத்தக்கூடியது என்பதை எடுத்துக்காட்டியது. மூன்று தீவன வகைகள் மற்றும் அவற்றின் ஒன்றிணைப்புகளில் இருந்து உருவாக்கப்பட்ட இரைபேணிகளின் போசனை மற்றும் பௌதீகப் பண்புகள் என்பனவும் மதிப்பீடு செய்யப்பட்டன. பண்ணைப் பயன்பாட்டிற்கான தரம் வாய்ந்த தீவனங்களை உற்பத்தி செய்வதற்கும் அதேபோன்று வர்த்தகரீதியான தீவன உற்பத்திக்கும் பயன்படுத்தக் கூடியனவாகவிருக்கும். ஆணைப்புல் இனங்களை விட இறுங்குச்சோள உற்பத்திகள் குறைந்தளவான மெதேன் போன்ற நார்ச்சத்துக் குறைந்த உயர் சக்திமிக்க தீவனங்கள் என்பதை கண்டறியப்பட்டவை எடுத்துக் காட்டின சிறந்த தீவனம் வழங்குவதற்கு இம் முக்கிய தகவல் பயன்படுத்தக்கூடியதாகவிருக்கும் என்பதுடன் இதனூடாக பால் பசுக்களின் உற்பத்தி செயலாற்றுகையினை மேம்படுத்துகின்ற அதேவேளை அசைபோடும் விலங்குகளிலிருந்து கிடைக்கும் மெதேன் உற்பத்தி குறைவடையச் செய்யப்படும். தேசிய பால் மந்தைகளினால் வெளியேற்றப்படுகின்ற மெதேனைக் குறைப்பதன் மீதான கொள்கை திட்டமிடலுக்கு இத்தகவல்கள் பயனுள்ளதாகும்.

மானிய இல. : TG/2017/Tech-D/03

முதன்மை ஆராயச்சியாளர் : பேராசிரியர் என் எம் எம் ஜி எஸ் பி நவரத்னே
ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்

கருத்திட்டத்தின் தலைப்பு : சேர்வை மாவிலிருந்து தயாரிக்கப்படும் அரிசி தொடர்புபட்ட பதமாக்கப்பட்ட உணவு உற்பத்திகளின் சிறு துளை நொறுங்கு கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு புளிக்கவைத்தல் கூடத்தினை உருவாக்குதல்.

பதப்படுத்தும் செயற்பாட்டின் போது பொதுவாக உருவாக்கப்படுகின்ற பதப்படுத்தப்பட்டு வெதுப்பிக்கப்படுகின்ற உணவுப் பண்டங்களில் நுண்துளை இழையமைப்பானது முக்கிய பங்கபற்றுகின்றது. கோதுமை மாவில் குளுடன் புரதமானது பிசைந்த திணிவினுள் வாயுக்களை தானாக பிடித்துவைக்கின்றது. அரிசிமா குளுடனைக் கொண்டிராமையினால், பதமாக்கப்பட்ட வாயுவினை பிடித்துவைப்பதற்கு அது குறைந்தளவான இயலுமையினையே கொண்டுள்ளது. எனவே, அரிசியுடன் தொடர்புபட்ட வெதுப்பிக்கப்பட்ட உணவுப் பண்டங்களில் நன்கு உருவான சிறு துளை நொறுங்கு கட்டமைப்பினை உருவாக்குவது மிகவும் கடினமாகக் காணப்படுகின்றது. இவ்வாய்வின் நோக்கம், அரிசி தொடர்புபட்ட சேர்வை மாவினைப் பயன்படுத்தி சிறந்த சிறு துளை கட்டமைப்புடனும் சிறந்த இழையமைப்பு இயல்புகளுடனும் கூடிய போசனைமிக்க பதமாக்கப்பட்ட வெதுப்பிக்கப்பட்ட உற்பத்திகளை உருவாக்குவதும் உணவுகக் கைத்தொழிலில் சிறந்த நொறுங்கு இயல்புகளை பெற்றுக்கொள்வதற்கு பயன்படுத்தக்கூடிய தொழில்நுடபத்தையும் பொறிமுறைகளையும் அறிமுகப்படுத்துவதுமாகும். இவ்வுற்பத்தி உருவாக்கமானது அரிசி தொடர்புபட்ட பல வகையான ஆரோக்கியமான உற்பத்திகள் நுகர்வோருக்கு கிடைக்கும் விதத்தில் அரிசியின் நுகர்வின் வாயிலாக பன்முகப்படுத்தவதற்கும் அரசிக்கான கேள்வியினை அதிகரிப்பதற்கும், விசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கும் கோதுமையின் இறக்குமதியனைக் குறைத்து வெளிநாட்டுச் செலாவணியை மீதப்படுத்துவதற்கும் முக்கியமாகும்.



உள்ளகப் பதப்படுத்தல் கூடம்



வர்த்தகரீதியான அளவிலான பதப்படுத்தல் கூடம்




விசுகோத்து

மானிய இல. : TD/2016/Tech-D/02

முதன்மை ஆராயச்சியாளர் : பேராசிரியர் டி.ஜி.ஜி.பி கருணாரத்ன
இரசாயனவியல் மற்றும் செயன்முறைப்படுத்தல் பொறியியல் துறை
பொறியியல் பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

கருத்திட்டத்தின் தலைப்பு : இலங்கை டொலமைட் சுன்னாம்பிலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளின் கூட்டுச் சேர்க்கையும் வர்த்தகமயப்படுத்தலும

இக் கருத்திட்டமானது கல்சியம் மற்றும் மெக்னீசியம் அடிப்படையிலான பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை கூட்டுச்சேர்ப்பதற்கு நூதனமான, சிக்கனமான மற்றும் கைத்தொழில் ரீதியாக சாத்தியமான நுட்பங்களை இனங்கண்டுள்ளது. நெனோ பங்கேற்ற கல்சியம் காபனேற்று (NPCC) நெனோ மெக்னீசியம் ஹைட்ரோசைட் (NMH) , நெனோ (MgO)இ சுபர் ஹைட்ரோபோபிக் பங்கேற்ற கல்சியம் காபனேற்று (SAPCC)இ சுபர் காபனேற்று பங்கேற்ற கல்சியம் காபனேற்று முலாம் இடப்பட்ட துணி அத்துடன் NPCC/இயற்கை இறப்பர் சேர்வை கூட்டுச்சேர்த்தல் செயன்முறை போன்ற சாத்தியமான உற்பத்திகள் உருவாக்கப்பட்டன. இவை பாரியளவில் கைத்தொழில் பிரயோகங்களைக் கொண்டவை. பங்கேற்ற கல்சியம் காபனேற்று அடிப்படையிலமைந்த நெனோ துணிக்கைகள் கடதாசி, புடவை, இறப்பர், பிலாஸ்திக் போன்ற கைத்தொழில்களில் பரந்தளவில் பயன்படுத்தப்படுகின்றன.



(a). Behavior of water in a non-treated fabric and (b). behavior of water in a hydrophobic polyester fabric developed using Super Hydrophobic PCC (a',b') inner structures of the fabric

அழகுசாதன பொருட்கள், புகவிடாபொருட்கள், பற்பசை, வர்ணப்பூச்சு, உணவுக் கைத்தொழில்கள் போன்றவற்றில் பரந்தளவில் பயன்படுத்தப்படுகின்ற அதேவேளை நெனோ மெக்னீசியம் ஹைட்ரோசைட் என்பது பிரதானமாக பல்படியம் மற்றும் பிளாத்திக் உற்பத்திகளில் தீ எதிர்ப்பு நிரப்பிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.இதில், இலக்கு அயன் பிரித்தெடுப்பிலிருந்து செயன்முறை தொடங்கி இறுதி நெனோ துணிக்கைகள் கூட்டுச்சேர்த்தல் வரை இயக்கப்படுவதுடன் நெனோ பொருட்களை உற்பத்தி செய்வதற்கு அவற்றை மேலும் கூட்டுச் சேர்த்தல் ஆய்வு செய்யப்பட்டு உகப்பாக்கம் செய்யப்பட்டது. சுழல்கின்ற தட்டு விணையூக்கியானது நெனோ துணிக்கைகளை கூட்டுச் சேர்க்கும் செயன்முறையினை எளிதாக்குவதற்கும் செயன்முறையின் உயர்பட்ட கட்டுப்பாட்டினைப் பெருவதற்கும் வடிவமைக்கப்பட்டது. இறுதியாக முன்னோடி குறித்தொகுதியொன்று கூட்டுச் செயமுறையினை மேற்கொள்வதற்காக தயார்படுத்தப்பட்டது.


விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்தின் சிறப்பினை அங்கீகரித்தல்

இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக செழுமைக்கான விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கங்களை மேம்படுத்துவதில் நாட்டின் முதன்மையான உந்து சக்தியாக உள்ள தேசிய விஞ்ஞான மன்றமானது, விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்தில் தத்தமது துறைகளில் சிறந்த பங்களிப்பை வழங்கிய இலங்கை விஞ்ஞானிகள்.்.பொறியாளர்களை அங்கீகரித்து, பாராட்டி, ஊக்குவிப்பதற்காக தேசிய விஞ்ஞான மன்ற விருது வழங்கும் விழாவை வருடாந்தம் ஏற்பாடு செய்கிறது. அதன்படி, உலக விஞ்ஞான தின கொண்டாட்டத்தின் ஒரு பகுதி என்ற வகையில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் 2021 ஆம் ஆண்டிற்கான விருது வழங்கல் விழாவானது, நவம்பர் மாதம் 16 ஆம் திகதி பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெற்றது. பின்வரும் பிரிவுகளின் கீழ் மொத்தம் 20 விருதுகள் வழங்கப்பட்டன.

- தேசிய விஞ்ஞான மன்றத்தின் தொழில்நுட்ப விருதுகள்
- ஆராய்ச்சி பட்டங்களின் மேற்பார்வைக்கான ஆதரவுத் திட்டம் (SUSRED)

ஆராய்ச்சி பட்டங்களின் மேற்பார்வைக்கான ஆதரவுத் திட்டத்தின் மூலம் (ளுருளுசுநுனு),மிகவும் சிறந்த மற்றும் ஆற்றல்மிக்க ஆராய்ச்சி கலாச்சாரத்துடன் கூடிய அதிக எண்ணிக்கையிலான பயிற்சி பெற்ற .்.தகுதிவாய்ந்த ஆராய்ச்சி பணியாளர்களின் துணையுடன் தேசிய ஆராய்ச்சி அமைப்பானது வலுப்படுத்தப்படுகிறது. இந்த ஆண்டு 37 ஆராய்ச்சியாளர்களைக் கொண்ட 19 மேற்பார்வைக் குழுக்கள் 14 பிஎச்டிகள் ரூ 5 எம்.். பில் பட்டங்களைத் பெற்றுக் கொண்டமைக்காக விருதுகளைப் பெற்றன. தொழில்நுட்ப விருதுகளின் கீழ் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஆர் ஜி என் மீகமவுக்கு பாராட்டுச் சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்டது.





உரு 18: வேறுப்பட்ட நிறுவனங்களில் ளுருளுசுநுனு விருது

அதி விலை கூடிய பகுப்பாய்வு மற்றும் ஆராய்ச்சி உபகரணங் களின் தரவுத்தளம

தேசிய விஞ்ஞான மன்றமானது, அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் தற்போதுள்ள உயர்தர பகுப்பாய்வு மற்றும் ஆராய்ச்சி உபகரணங்களைப் பற்றிய தகவல்களைத் தொகுக்கும் நோக்கத்துடன் ஒரு நாடளாவிய ஆய்வைத் தொடங்கியுள்ளது. இந்த முன்முயற்சியானது, தற்போது நாட்டில் கிடைக்கும் உபகரணங்கள் பற்றிய விரிவான விபரங்களினை கொண்ட ஒரு தரவுத்தளத்தை உருவாக்குதல் ஆகும் என்பதுடன் இதன் நோக்கு, அரிசி மற்றும் அபிவிருத்தி மேம்பாட்டிற்கு இந்த உபகரணங்களினை பயனுள்ள முறையில் பயன்படுத்தலும் மற்றும் அதன் மூலம் முன்னேற்றத்திற்கு முக்கியமான. வள சேமிப்பினை மேம்படுத்தலும் ஆகும்.

நாடளாவிய ரீதியிலான கணக்கெடுப்பானது செப்டம்பர் 2020 இல் தொடங்கப்பட்டதுடன் தரவுத்தளமானது பிப்ரவரி மாதம் 2021 இல் உருவாக்கப்பட்டது. செப்டம்பர் 2021 க்குள் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களில் இருந்து சுமார் 650 உள்ளீடுகள் தரவுத்தளத்தில் உள்ளிடப்பட்டன.

உயர்-தொழில்நுட்ப கருவிகள்.்.சேவைகளை அடையாளம் காண்பதன் மூலம் தேசிய.்.சர்வதேச தரநிலைகளுக்கு பல்கலைக்கழகம்.்.நிறுவன ஆய்வகங்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு இந்தச் செயல்பாடு மறுசீரமைக்கப்பட்டு விரிவாக்கப்பட்டது.

முன்மொழியப்பட்ட தேசிய கருவி தரவுத்தளமானது ஊழனநஐபவைநச கட்டமைப்பைப் பயன்படுத்தி நிகழ்நிலை தளமாக உருவாக்கப்படுகிறது மற்றும் தரவை மீள்நோக்க முன் பதிவு தேவையில்லை. தரவுத்தளத்திலிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்கள் பயனர்களுக்கும் முடிவெடுப்பவர்களுக்கும் பயனளிக்கும்

டிஜிட்டல் தரவுத்தளங்கள் மூலம் வளங்களைப்


புலம்பெயர்ந்த வளவாளர்களின் பங்கேற்புடன், திறன் மேம்பாடு மற்றும் அறிவுப் பரிமாற்றம் (அட்டவணைகள் 5 ரூ 6) என்பவற்றினை மேம்படுத்த தொடர் அறிவுப் பரிமாற்ற வலைப்பதிவுகள் ஏற்பாடு செய்யப்பட்டன. இது அறிவின் அளவினை மேம்படுத்துவதற்கு உதவுவதுடன் அதன் மூலம் தேசிய அளவில் உயர் முன்னுரிமை வகிக்கும் பிரச்சனைகளினை நிவர்த்தி செய்ய கூடியதாக இருப்பதுடன் இதன் மூலம் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் சிறந்த நடைமுறைகளை பின்பற்ற பாதை வகுக்கும்.

அட்டவணை 05: டிஜிட்டல் தரவுத்தளத்தின் ஊடாக அறிவுப்பரிமாற்ற வலை பதிவுகள்

நிகழ்வுகளும் குறிக்கோள்களும்	குறிக்கோள்கள்	பங்கு பெறுனர்களின் எண்ணிக்கை
இலங்கையைப் பாதிக்கும் "உப்புத்தன்மையின் வெவ்வேறு அம்சங்கள்" மற்றும் தீர்வுகள்" என்ற தலைப்பில் வலைப்பதிவு	இலங்கை ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொடர்புடைய பங்குதாரர்களினை சமீபத்திய தொழில்நுட்பங்கள் மற்றும் உப்புத்தன்மை பிரச்சனையை குறைப்பதற்கான சிறந்த நடைமுறைகள். பற்றி அறிய செய்தல்	120
"உயர்ந்த தாக்கம் உடைய இதழ்களுக்கு கட்டுரைகளை எழுதுதல்" ஆராய்ச்சியாளர்களுக்கான வழிகாட்டி" என்ற தலைப்பில் வலைப்பதிவு	சஞ்சிகைகளில் ஆக்கங்களினை எழுதுவதில் ஆராய்ச்சியாளர்களின் செயற்றிறன் நிர்மாணம	765
டிஜிட்டல் தளம் வழங்கும் சேவைகள் பற்றி உயர் விழிப்புணர்வு	ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பெறுபேறுகளினை பெற்றுக்கொள்ளல்தொடர்பில் இலங்கை ஆராய்சியாளர்களினையும் மற்றும் புலம் பெயர்ந்தவர்களினையும் ஒப்பிடல்	65
'எக்ஸ்-பிரஸ் பெர்ல் கார்கோ' கப்பல் விபத்து : விளைவுகள், தாக்கங்கள் மற்றும் "தீர்வுகள் பற்றிய நிகழ்நிலை கலந்துரையாடல்	சமீபத்திய தொழில்நுட்பங்கள் மற்றும் கடல் சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைப்பதற்கான நடைமுறைகள். தொடர்பில் இலங்கை ஆராய்ச்சியாளர்கள்மற்றும் சம்பந்தப்பட்ட ஏனையோரினை அறிந்திருக்க செய்தல	15
'இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்தவர்கள் கல்வி மற்றும் இலங்கையில் ர்நுஐ களின் ஆராய்ச்சி செயல்திறன் மேம்படுத்த எவ்வாறு பங்களிக்க முடியும்	ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பெறுபேறுகளினை பெற்றுக்கொள்ளல் தொடர்பில் இலங்கை ஆராய்ச்சியாளர்களினையும் மற்றும் புலம் பெயர்ந்தவர்களினையும் ஒப்பிடல்	365
ஒழுக்கவியலில் ஆராய்ச்சி பற்றிய வலைப்பதிவு	புதிய அறிவுப் பரிமாற்றம்	237
இடைத்துறை ஆராய்ச்சி கருத்திட்டம் என்ற வகையில் ஒரு "ானு ஆராய்ச்சி பிரேரணையினை எவ்வாறு தயாரிப்பது, பேராசிரியர் தந்துரே விக்ரமசிங்க	போட்டியில் மானியங்களினை வெல்வதற்கு ஏற்ற வகையில் பிரேரணைகளினை சமர்ப்பிப்பதற்கு இளம் ஆராய்ச்சியாளர்களின் செயற்றிறன் மேம்பாடு	422
'புதைபடிவ எரிபொருட்களில் இருந்து புதுப்பிக்கத்தக்கவை வரையில் நடைமுறை மற்றும் முழுமையான அணுகுமுறை"	இலங்கை ஆய்வாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கு சமீபத்திய ஆராய்ச்சி போக்குகள் புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களினை பயன்படுத்துவதற்கான உத்திகள் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்,	180
Karunaratne, Rolls Royce PLC, UK* வலைப்பதிவானது எந்திரி நிபுணி கருணாரத்னவினால் முன்னெடுக்கப்பட்டது.	விஞ்ஞான தொழில் நுட்ப புத்தாக்க துறையில் உலகளாவிய வாய்ப்புகள் தொடர்பில் பாடசாலை மாணவர்கள் மற்றும் இளங்கலை மாணவர்களை ஊக்குவித்தல்	265

அட்டவணை 06: செயற்றிறன் நிர்மாணத்தினை இலக்காக கொண்டு முன்னெடுக்கப்பட்ட வலைப்பதிவு தாக்கத்திற்குரிய சில காரணிகள்

தலைப்பு	தாக்க காரணி	எண்ணிக்கை
தாக்கம் உடைய இதழ்களுக்கு கட்டுரைகளை எழுதுதல் "ஆராய்ச்சியாளர்களுக்கான வழிகாட்டி" என்ற தலைப்பில் வலைப்பதிவு	தயாரிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகளின் எண்ணிக்கை	12
	பத்திரிகைகளுக்கு சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளின் எண்ணிக்கை	10
	சக மதிப்பாய்வு இதழ்களில் வெளியிடப்பட்ட கட்டுரைகளின் எண்ணிக்கை	5
	அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட கட்டுரைகளின் எண்ணிக்கை	1
சர்வதேச ரீதியில் மானியங்களினை பெறுவதற்கு ஏற்ற வகையில் பிரேரணைகளினை SLAYS உடன் இணைந்து எழுதுதல். 425 பேர் பங்கு பற்றினர்	சர்வதேச முகவராண்மைகளினை இலக்காக கொண்டு தயாரிக்கப்பட்ட /தயாரிக்கப்படுகின்ற பிரேரணைகளின் எண்ணிக்கை	2
	சர்வதேச முகவராண்மைகளுக்கு சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகளின் எண்ணிக்கை	1
	மேலதிக வழிகாட்டல் நிமித்தம் வள ஆளணியினரை தொடர்பு கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை	1
'ஒரு இடைநிலை ஆராய்ச்சி கருத்திட்டத்திற்காக ஒரு பிஎச்டி ஆராய்ச்சி பிரேரணையை எவ்வாறு தயாரிப்பது'	ஒரு முன்மொழிவை தயார் செய்வதற்குரிய பின்னணியினை தேடும் மாணவர்களின் எண்ணிக்கை	07
	முன்மொழிவு தயாரிப்பில் வெவ்வேறு நிலைகளில் இருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை	05
	முன்மொழிவினை தயாரித்து முடித்த மாணவர்களின் எண்ணிக்கை ∴ உயர் கல்வி நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது	26
	முன்மொழிவுகளினை தயார் செய்து முடித்த மாணவர்களின் எண்ணிக்கை.∴உயர் கல்வி நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது	05



ஒரு இடைநிலை ஆராய்ச்சி திட்டத்திற்கான PHD ஆராய்ச்சி முன்மொழிவை தயாரிப்பதுஎவ்வாறு பற்றி பேராசிரியர் தந்துரே விக்கிரமசிங்கவினால் ஆற்றப்பட்ட நிகழ நிலை அடிப்படையிலான உரை



ஐக்கிய இராஜ்ஜியத்தில் உள்ள StorTera, மற்றும் இலங்கையில் StorLion, ஆகிய நிறுவனங்களுடன், ஸ்மார்ட் ஆற்றல் சேமிப்பு பயன்பாடுநிறுவனங்களுடன் , இலங்கை கனிம வளங்களுக்கு மதிப்பினை கூட்டி மிகத்திறன் மிகு சக்தி சேமிப்பின் மூலப்பொருளாக பாவித்தல் தொடர்பில் உள்ள சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கான கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன.



ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் உலகளாவிய மட்டத்தில் நிலவும் தொழில்நுட்ப ரீதியிலான வாய்ப்புகளினை கைப்பற்றுவதற்கு இலங்கையில் Ivy Tech நிறுவனத்தின் கிளை ஒன்றினை தாபித்தல் தொடர்பில் உள்ள சாத்தியக்கூறுகள் பற்றி வரை, Ivy Tech Ltd, நிறுவனத்துடன் கலந்துரையாடல்கள் இடம்பெறல் நிறுவகத்தின் தோற்றுனர் மற்றும் முகாமையாளரான எந்திரி நிபுன கருணாரத்ன அவர்களின் வழிகாட்டலில் இதுவும் இலங்கையினை 2IR இல் இருந்து 4IR என்ற நிலைக்கு உயர்வதற்கு பாதை வகுக்கும

இலங்கையின் வெளிவிவகார அமைச்சுடன் இணைந்து கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டஇந்த சந்திப்பில் பிரேசிலின் ஏபிசி நிறுவனத்தினரை சாத்தியமான ஒத்துழைப்புகளினை எதிபார்த்து கரும்பு பங்குதாரர்களுடன் அமைச்சில் சந்தித்தல



புத்தாக்க திறனை மேம்படுத்த பயனுள்ள கூட்டாண்மைகளை உருவாக்குதல

பல்கலைக்கழக - தொழில்துறை ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கும் புத்தாக திறன்களை அதிகரிப்பதற்கும் தேசிய விஞ்ஞான மன்றமானது (NSF) தேசிய ஏற்றுமதியாளர் சங்கத்துடன் (NCE) கைகோர்த்தது. புதிய தயாரிப்புக்களினை விருத்தி செய்வதில் உள்ள தொழில்துறை சிக்கல்கள் மற்றும் தொழில்நுட்ப தேவைகளை அடையாளம் காண NCE-NSF வசதி உதவுகின்றது. வரையறுக்கப்பட்ட Textrip Lanka நிறுவகம், E-Silk Route மற்றும் D Samson Industries ஆகியவை பேராதனைப் பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் அவுஸ்திரேலியாவின் டீக்கின் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஆய்வாளர்களுடன் இது தொடர்பில் கலந்துரையாடல்களை மேற்கொண்டன. Deakin பல்கலைக்கழகம் மற்றும் Textrip Lanka தனியார் நிறுவகம் ஆகியவற்றுடன் வெளிநாட்டுக்கு புலம் பெயர்ந்த விஞ்ஞானிகளுக்கு இடையிலான பங்குடைமையானது, உலக சந்தையில் கணிசமான சந்தைத் தேவையைக் கொண்ட smart wearable / stretching bands இன் தரத்தை மேம்படுத்த உதவியது.



D Deakin பல்கலைக்கழகம் ரூ Textrip Lanka பிறுவகம் ஆகியவற்றினை சார்ந்த பேராசிரியர் பத்திரன அவர்களுடன் நிகைநிலை சந்திப்பு

“சாதாரண வகையீட்டுச் சமன்பாடு மாரிகளுக்கான கணிப்புசார் உத்திகள்” அதனைத் தொடர்ந்து “தொற்றுகின்ற நோய்கள் பற்றிய தரவு செயன்முறைப்படுத்தலில் சவால்களையும் எதிர்கால வாய்ப்புகளையும் ஆய்வுசெய்தல் - இலங்கைப் பின்னணிக்காக தீர்மான ஆதரவு முறைமையொன்றிற்கான முன்னோக்கிய பாதை” பற்றிய எண்ணக்கருசார்நத அறிக்கை மீதான இணையவழிக் கருத்தரங்கானது தொற்றுநோயியல் பிரிவு, சுகாதாரத் தகவல் பிரிவு, மருத்துவ புள்ளிவிபரவியல் பிரிவு, சுகாதார மேம்பாட்டுப் பணியகம் ஆகியவற்றிலுள்ள ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சுகாதார அமைச்சின் தொடர்புடைய ஆராய்ச்சியாளர்கள் போன்றோரின் கூட்டிணைப்பு பங்குடமையினை தாபிப்பதற்கு உதவியது. இவ்விணைப்புகள் வெளியீடுகளில் உயர்வான தாக்கத்திற்கும் மேலும் ஆராய்ச்சிகளுக்கும் வழிவகுத்தது.

- டெங்கு பரவலுக்கான வயது- சார்ந்த மாதிரி: களத் தரவுகளுக்கான பகுப்பாய்வும் ஒப்பீடும்” the Journal of Applied Mathematics and Computations (2020) - Springer (SCI, Web of Science, SCOPUS indexed - Impact Factor 4.091) *https://www.sciencedirect.com/science/ article/ abs/ pii/ S009630032030494X?fbclid= IwAR17 WaqB_Hmu4-mh-iZtKqbDS30IkonQsXN4IucC9_ hs_ Dms2jIr1X7hOwE* என்ற சஞ்சிகையில் வெளியிடப்பட்டது.

- இடம்-காலம்சார்ந்த மாதிரியெடுத்தல் ஊடாக கொவிட்-19 வைரஸிற்கு எதிராக தொடர்பு கட்டுப்படுத்தல் மற்றும் பரிசோதனை பிரசாரங்கள் பற்றிய மீள் மதிப்பீடு”, Journal of Nonlinear Dynamics (2021) - Springer (SCI, SCOPUS indexed - Impact Factor 5.022) *https://doi.org/10.1007/s11071-021-07111-w-* என்ற சஞ்சிகையில் வெளியிடப்பட்டது.

IVY TECH’ என்பது நான்காவது கைத்தொழிற்புரட்சியினை (4IR) மெய்ப்பிப்பதற்கு தொழில்நுட்பங்களை இயலச் செய்வதன் மூலம் எல்லைகளைத் தாண்டி கவனம் செலுத்துகின்ற ஐக்கிய இராச்சியத்தில் அமைந்துள்ள பல்துறை ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க கம்பனியொன்றாகும். இலங்கையில் கிளையினை அமைப்பதற்கு IVY TECH’ ஆர்வங்காட்டியுள்ளதுடன் பரஸ்பர மீள்வலுவூட்டல் மற்றும் வெகுமதியளித்தல் நலன்களுக்காக தேசிய விஞ்ஞான மன்றத்துடன் உபாயரீதியான பங்குடமை உருவாக்கப்படும். இப் பங்குடமையானது நிறுவன மட்டத்தில் இடைத்தொடர்பினை உருவாக்குவது மட்டுமன்றி நாடு என்ற ரீதியில் நான்காம் கைத்தொழில் புரட்சிக்கு வழிவகுக்கின்ற ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தினை ஊக்குவித்து ஒன்று திரட்டுவதனால் இது திருப்புமுனையொன்றாக அமையும். ஐக்கிய இராச்சியத்தின் ரோல்ஸ் ரோய்ஸ் பீஎல்சி நிறுவனத்தில் டிஜிடல் தொழில்நுட்ப முகாமையாளராகவும் பணியாற்றும் வெளிநாட்டு வாழ் தொழிலசார் நிபுணரான ஏந்திரி நிபுனி கருணாரத்ன, ஐக்கிய இராச்சியத்தின் ‘IVY TECH’ நிறுவனத்தை தாபிப்பதில் முன்னோடியாகச் செயற்பட்டார். பங்குடமையினை வலுப்படுத்தவும் இலங்கையில் விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்கத் துறையின் முன்னேற்றத்திற்கான சாத்தியப்பட்டடினை பயன்படுத்திக் கொள்வதற்கும் ஜுன் 22 அன்று எந்திரி. நிபுனி கருணாரத்ன மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் அணு ஆராய்ச்சி நிலையத்தின் கலாநிதி செஹான் லோவெ ஆகியோருடன் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் மெய்நிகர் கூட்டமொன்று ஏற்பாடுசெய்யப்பட்டது.




ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை பரிமாற்றிக் கொள்ளல்

பரஸ்பரம் வெகுமதியளித்து மீளவலுவூட்டும் விதத்தில் தொழில்நுட்ப ஒத்துழைப்பையும் ஆராய்ச்சி கூட்டிணைப்பினையும் வழங்கி ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்துடன் உபாயரீதியாக பங்குடமையினை தேசிய விஞ்ஞான மன்றம் ஏற்படுத்திக்கெதண்டது. தேசிய விஞ்ஞான மன்றத்தில் வைத்து இரு நிறுவனங்களுக்குமிடையில் நவம்பர் 24 அன்று இது தொடர்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்தமானது டிஜிடல் தலையீடுகள் ஊடாக விவசாயம், கடற்றொலில் மற்றும் குடிசைக் கைத்தொழில் போன்ற துறைகளுக்கு விசேட கவனம்செலுத்தி நாட்டின் சமூகப் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்குடன் இரு நிறுவனங்ளுக்குமிடையிலான கூட்டுமுயற்சியனை அதிகரிக்கும்.

உள்நாட்டு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினை வசதிப்படுத்துவதற்கு சர்வதேச நிதியளித்தல்

வாய்ப்புக்களினை கண்டறிதல் மரபணு பொறியியல் மற்றும் உயிரியல் தொழில்நுட்பத்திற்கான சர்வதேச நிலையம்

- ஒற்றோ பலாஸ்சி மரபணு பொறியியல் மற்றும் உயிரியல் தொழில்நுட்பத்திற்கான சர்வதேச நிலையத்தின் கற்கை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இரு ஆராய்ச்சியாளர்களுக்கு குறுகிய கால (3-8 மாதங்கள்) கலாநிதிப் பட்டத்திற்கு பிந்திய கற்கைநெறிகள் வழங்கப்பட்டன. இக் கற்கை நெறிகளின் பெறுமதி ஐ.அ.டொ. 10,000 ஆகும்.
- நாட்டின் மிகவும் முன்னுரிமை வாய்ந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் தேவைகளை நிறைவேற்றுகின்ற ICGEB-CRP நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மரபணு பொறியியல் மற்றும் உயிரியல் தொழில்நுட்பத்திற்கான சர்வதேச நிலையத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஐந்து முன்மொழிவுகளில் ஒரு விண்ணப்பம் மரபனு பொறியியல் மற்றும் உயிரியல் தொழில்நுட்பத்திற்கான சர்வதேச நிலையத்தின் முதல் கட்ட மதிப்பீட்டிற்காக தெரிவு செய்யப்பட்டதுடன் இரண்டாம் கட்ட மதிப்பீடு முன்னெடுக்கப்படுகின்றது. தேசிய விஞ்ஞான மன்றமானது மரபனு பொறியியல் மற்றும் உயிரியல் தொழில்நுட்பத்திற்கான சர்வதேச நிலையத்துடன் இணைந்து ICGEB-CRP நிகழ்ச்சித்திட்டம் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்கின்ற இணையவழி கருத்தரங்கினை ஏற்பாடு செய்ததுடன் 190 உள்நாட்டு ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்றனர். ஆராய்ச்சியாளர்கள் இது மத்தியில் ஆர்வத்தை அதிகரித்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 அழைப்புக்காக ஏறத்தாழ மூன்று மடங்கு அதிகரித்த எண்ணிக்கையான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன.



வரைபடம் 19: உள்நாட்டு ஆராய்ச்சியாளர்களினால் ஐஊபுநுடீ மானியங்களைப் பெறுவதில் அதிகரித்த ஆர்வம்.

- சிறுபிள்ளைகள் மத்தியில் விஞ்ஞானத்தை பிரபல்யப்படுத்துவதற்கு அமெரிக்கத் தூதரகத்திடமிருந்து ரூபா 200,000 பெறுமதியான கொடை கிடைக்கப்பெற்றது.

இலங்கையின் விஞ்ஞானம் மற்றும், தொழில்நுட்ப மற்றும் தகவல் தோற்றஅமைப்பு பற்றி உலகளாவிய ரீதியில் எடுத்துக்காட்டுவதனை மேம்படுத்துதல்.

- பின்வரும் வகைகளின் கீழ் ISC விருது வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு இலங்கை ஆராய்ச்சியாளர்களின் 10 பெயர்குறிக்கப்பட்டனர்
    - ஆரம்ப தொழில்சார் விஞ்ஞானி விருதுகள்ளசனைசனேதா
    - நிலைபெறுதன்மைக்கான விஞ்ஞான விருதுகள
    - கொள்கைக்கான விஞ்ஞான விருதுகள்
- "விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப தொழிற்படை அபிவிருத்தி" என்ற புசுஊ தொனிப்பொருளின் கீழ் தேசிய விஞ்ஞான மற்றும் அபிவிருத்தி அளவீடு பற்றிய வெற்றியடைந்த ஆர்வ வெளிப்படுத்தல் 2022 இல் தொடங்கப்படவுள்ள ஆர்வ வெளிப்படுத்தல் சேகரிப்புக்காக தயார்படுத்தப்பட்டது.
- தேசிய விஞ்ஞான மன்றம் பின்வரும் வெளிநாட்டு விஞ்ஞான, தொழில்நுட்ப தகவல் நிகழ்வுகளில் பங்கேற்றது."

- உலகளாவிய ஆராய்ச்சி மன்றத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய இணையவழிக் கருத்தரங்கு
- யப்பான் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முகவராண்மையின் "JST Connect" பற்றிய இரண்டு இணையவழிக் கருத்தரங்குகள்.

- சுகாதார அவசர நிலைமைகளுக்கு சமுதாயத்தினை மையப்படுத்திய அணுகுமுறைகள் : முன்னேற்றம், இடைவெளிகள் மற்றும் ஆராய்ச்சி முன்னுரிமைகள்" மீதான உலக சுகாதார அமைப்பின் தேவைக்கேற்றவாறான ஆலோசனையில் "சமுதாயம் அடிப்படையிலமைந்த மீட்டெடுத்தல்" பற்றிய குழுக் கலந்துரையாடல்.

- சகுரா விஞ்ஞான நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலங்கையைச் சேர்ந்த இளம் ஆராய்ச்சியாளர்களுக்கு இயலளவு விருத்திசெய்யும் வாய்ப்புகளை வலுப்படுத்தும் குறிக்கோளுடன் யப்பான் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முகவராண்மையுடன் இணைந்து சகுரா விஞ்ஞான கழகத்தின் இலங்கை பழைய மாணவர் அமைப்பின் இரண்டாவது பழைய மாணவர் கூட்டம்



சகுரா விஞ்ஞான நிகழ்ச்சித் திட்ட பழைய மாணவர் கூட்டம்

- வருடாந்த இணையவழி உலகளாவிய ஆராய்ச்சி மன்ற கூட்டம் மற்றும் உலகளாவிய போக்குகள் மற்றும் வலையமைப்புகளை ஏற்படுத்தல் என்பவற்றுக்கு இணையாக இருப்பதற்கு உலகளாவிய ஆராய்ச்சி மன்ற பாலின பணியாற்றுக் குழுவின் மாதாந்த இணைய வழிக் கூட்டம்.
- விரிவுரையாளரான (சுயாதீன) திருமதி நயனா பீ. அமரவிக்ரம, "கொவிட் 19 காலப்பகுதியிலும் அதன் பின்னரும் எதிர்காலத்தை திசைப்படுத்தல் : ஆசியாவில் சமூக விஞ்ஞானங்களின் வகிபாகம்" என்ற ஆசிய சமூக விஞ்ஞான ஆராய்ச்சி சபையின் அமைப்பினால் (யுயுளுளுசுநுஊ) ஏற்பாடுசெய்யப்பட்டு ஒக்டோபர் 26 - 28 வரை இடம்பெற்ற 24 ஆவது ஆண்டுக்கு இருமுறை இடம்பெறும் பொது மாநாட்டில் டிஜிடல் தொழில்நுட்பம் மற்றும் குறைந்தளவு தேர்ச்சிபெற்ற தொழிற்படை மீது கொவிட் 19 இன் தாக்கம்" என்ற தலைப்பில் நாடு பற்றிய கட்டுரையினைச் சமர்ப்பித்தார்.

விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப தகவல்களினை பிரபலப்படுத்துதல்


21 ஆம் நூற்றாண்டின் முக்கிய உந்து சக்தியான "அறிவு", உலகம் முழுவதும் உலகப் பொருளாதாரத்தை உந்தித் தள்ளுகிறது. சட்டத்தால் கட்டளையிடப்பட்டபடி, தேசிய விஞ்ஞானம் மன்றமானது சமூக விஞ்ஞானம் உட்பட, அனைத்து விஞ்ஞானவியல் துறைகளையும் உள்ளடக்கியதாக முன்னெடுக்கப்படும் புதிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பிலான முடிவுகளையும் அத்துடன் விஞ்ஞானவியல் சார்ந்த தகவல்களினையும் பரப்புதலில் ஈடுபட்டுள்ளது.

இலங்கை தேசிய விஞ்ஞான மன்ற சஞ்சிகை (JNSF)

இலங்கையின் தேசிய விஞ்ஞான மன்றத்தின் சஞ்சிகையானது (JNSF) மார்ச், ஜூன், செப்டம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் இதழின் நான்கு இதழ்களை வெளியிடுகிறது. தற்போது, ஊடயசளையவந யுயெடலவஎைள ளுஉநைஎெந ஊவையவழைஎ ஐனெநஒ நுஒியனெநன (SCIE) இல் குறிப்பிடப்பட்ட ஒரே இலங்கை இதழ் இதுவாகும். தேசிய விஞ்ஞானம் மன்ற சஞ்சிகையானது 2021 ஆம் ஆண்டில் ஊடயசளையவந யுயெடலவஎைள ளுஉநைஎெந ஊவையவழைஎ ஐனெநஒ நுஒியனெநன (SCIE) இல் குறியீட்டு நிலையினை பேணுகிறது. இது தவிர, தேசிய விஞ்ஞானம் மன்ற சஞ்சிகையானது இரசாயன மற்றும் உயிரியல் சுருக்கங்கள், டீஐழுளுஐளு மீளாய்வுகள், விலங்கியல் பதிவுகள், SCOPUS, TEEAL, Ulrich's, AGRICOLA மற்றும் EBSCOhost ஆகியவற்றிலும் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டில், தொகுதி 49 இன் நான்கு இதழ்கள் 52 சக மதிப்பாய்வு செய்யப்பட்ட கட்டுரைகளுடன் வெளியிடப்பட்டன, இது 2020 உடன் ஒப்பிடும்போது 20மூ அதிகமாகும். முழுத் தொகுதியும் உள்நாட்டிலும் உலக அளவிலும் நடத்தப்பட்ட விஞ்ஞானவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் அனைத்து அம்சங்களிலும் ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகளைப் தந்தது. வெளியிடப்பட்ட அனைத்து கட்டுரைகளும் திறந்த அணுகலில் பெறக்கூடியதாக இருக்கும்.


இலங்கையின் தேசிய விஞ்ஞான மன்ற சஞ்சிகையின் தாக்கக் காரணியானது (IF) முந்தைய ஆண்டின் 0.378 இலிருந்து 0.515 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது (பகுப்பாய்வு 2021 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பெறப்பட்டது). இது கட்டுரைகளின் அதிகரித்த தெரிவுநிலை அதிகரிப்பு மற்றும் சிறந்த தரம் என்பனவற்றிக்கு அறிகுறியாக அமைகிறது.




உரு 20: 2010-2020 இல் இருந்து துளேகு தாக்கக் காரணிகள் அதிகரித்துள்ளன

2021 ஆம் ஆண்டில் 514 கையழுத்து பிரதிகள் பெறப்பட்டன (உரு 21).

கையெழுத்து பிரதிகளின் மீளாய்வு செயன்முறைகள் உரு 22. இல் காட்டப்பட்டுள்ளது




உரு 21: தேசிய விஞ்ஞான மன்ற சஞ்சிகையின் கையெழுத்துப் பிரதிகள் செயன்முறையாக்கம்




உரு 22: தேசிய விஞ்ஞான மன்ற சஞ்சிகையின் பதிப்பாசிரியர் செயன்முறையின் பாய்ச்சல் அட்டவணையும் முன்னேற்றமும்


7 வெளிநாட்டு மதிப்பாய்வாளர்கள் மற்றும் 65 உள்ளூர் மதிப்பாய்வாளர்கள் மதிப்பாய்வு செயல்முறைக்கு பங்களித்தனர். உள்ளூர் சமர்ப்பிப்புகளின் சதவீதம் முந்தைய ஆண்டின் 42மூ உடன் ஒப்பிடுகையில் 48மூ ஆக அதிகரித்துள்ளது. இலங்கை ஆராய்ச்சியாளர்கள் வெளிநாட்டு ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து இலங்கை தேசிய விஞ்ஞான மன்ற சஞ்சிகையினை தங்கள் ஆராய்ச்சியை வெளியிடுவதற்கான தளமாக பயன்படுத்திக் கொள்வதும் இலங்கை தேசிய விஞ்ஞான மன்ற சஞ்சிகையின் குறிப்பிடத்தக்க சாதனையாகும்.



உரு 23: எழுத்தாளர்களின் மூலத்தினை அடிப்படையாகக் கொண்ட சமர்ப்பிப்புக்கள் (2017 - 2021)



உரு 24: துறையினை அடிப்படையாகக் கொண்டு செயன்முறையாக்கம் செய்யப்பட்ட கையெழுத்துப் பிரதிகள




உரு 25 : 2021 ஆம் ஆண்டில் இலங்கை தேசிய விஞ்ஞான மன்ற சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரைகளில் உள்ளடக்கப்பட்ட துறைகள்


2021 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பெரும்பாலான கட்டுரைகளாவன பௌதீகவியல் விஞ்ஞானம் தொடர்பான துறைகளை உள்ளடக்கியதாக இருந்த அதே வேளையில், உயிரியல் விஞ்ஞான துறையின் பிரதிநிதித்துவம் குறைவாக இருந்தது (உரு 25).

மொத்தம் 149 உள்ளூர் எழுத்தாளர்கள் (72மூ) மற்றும் 57 வெளிநாட்டு எழுத்தாளர்கள் (28மூ) 2021 ஆம் ஆண்டில் தமது ஆராய்ச்சி கண்டுபிடிப்புக்களினை இலங்கை தேசிய விஞ்ஞானம் மன்ற சஞ்சிகையில் வெளியிடுவதன் மூலம் சர்வதேச விஞ்ஞானம் சமூகத்திற்கு தங்கள் ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை தெரிவிக்க முடிந்தது. 2020 ஆம் ஆண்டில் 34மூ மாக இருந்த வெளிநாட்டு எழுத்தாளர்களின் பங்களிப்பானது, 2021 இல் 28மூ, மாக குறைந்துள்ளது. அதுபோன்று 2020 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வெளிநாட்டு கட்டுரைகளின் எண்ணிக்கை 13, எனினும் 2021 ஆம் ஆண்டில் அது 11 கட்டுரைகளாக குறைந்துள்ளது.

12 நாடுகளைப் வெளிநாட்டு எழுத்தாளர்கள் பிரதிநிதித்துவப்படுத்தினர் என்பதுடன் இவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஆசிய பிராந்தியத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார். (மொத்த தொகையில் 15மூ). ஆசிரியர் இணைப்புகளைக் கருத்தில் கொண்டு நோக்கின் இலங்கை தேசிய விஞ்ஞான மன்ற சஞ்சிகையில் ஆக்கங்களினை வெளியிட்டவர்கள் வெவ்வேறு வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் ∴ நிறுவனங்களினை சார்ந்தவர்கள் ஆவார்.




உரு 26: JNSF இன் தொகுதி 49 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர்கள் மற்றும் நாடுகளின் மூலம்



உரு 27: JNSF இன் தொகுதி 49 க்கு பங்களித்த பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள்


பல்வேறு துறைகளினை அடிப்படையாக கொண்டு வெளியிடப்பட்ட ஐம்பத்திரண்டு ஆய்வுக் கட்டுரைகளில் 56மு மானவை உள்ளூர் ஆராய்ச்சியாளர்களிடமிருந்தும் 21மு மானவை வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களிடமிருந்தும் பெறப்பட்டவை ஆகும். வெளியிடப்பட்ட கூட்டு ஆவணங்களின் எண்ணிக்கை 2020 ஆம் ஆண்டில் 5மு மாகும். இது 2021 ஆம் ஆண்டில் 23மு ஆக கணிசமான அளவு அதிகரித்துள்ளது.




உரு 28: இலங்கை தேசிய விஞ்ஞான மன்ற சஞ்சிகையின் 49 ஆவது தொகுதியில் பிரசுரிக்கப்பட்ட ஆக்கங்களின் மூலம்

இலங்கை சமூக விஞ்ஞான சஞ்சிகை (SLJSS)


இலங்கை சமூக விஞ்ஞான சஞ்சிகையானது (SLJSS) தொகுதி 44, 15 ஆய்வுக் கட்டுரைகள், 02 ஆய்வுக் கட்டுரைகள், 01 கடிதம் மற்றும் 01 அழைக்கப்பட்ட புத்தக மதிப்பாய்வுடன் 2021 ஜூன் மற்றும் டிசம்பர் மாதங்களில் இரண்டு இதழ்களாக வெளியிடப்பட்டது. வெளியிடப்பட்ட கட்டுரைகளில் 28மு மானவை சமூகவியல் துறையினை சார்ந்தவையாகும்.




உரு 29: SLJSS அற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆக்கங்கள் (2012-2021)




உரு 30 : SLJSS இற்கு மூல அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்ட ஆக்கங்கள



உரு 31 : SLJSS இனது பதிப்பாசிரியர் செயன்முறையின் பாய்ச்சல் அட்டவணை




உரு 32 : SLJSS இன் 44 தொகுதி இதழில் பிரசுரிக்கப்பட்ட ஆக்கங்களின் மூலம்




உரு 33 : வெளிநாடு நிறுவனங்களின் மூலம் ளுடுதுளுளு இனது 44 தொகுதிக்கான பங்களிப்பு

67% மான வெளியீடுகள் இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுடன் இணைந்த அறிஞர்களால் நடத்தப்பட்ட ஆராய்ச்சியிலிருந்து உருவானவை (உரு 34).



உரு 34 : SLJSS இனது தொகுதி 44 இற்கு அக நிறுவனங்களின் மூலம் செய்யப்பட்ட பங்களிப்பு




உரு 35 : SLJSS இன் தொகுதி 44 இற்கு விடய துறை அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்ட ஆக்கங்கள்

உயர் தாக்க இதழ்களில் வெளியீட்டினை ஆராய்ச்சியாளர்கள் செய்வதற்கு இரண்டு மானியத் திட்டங்கள் அவர்களினை ஆதரிக்கின்றன. இதனை விட , வெளியீடு கட்டணத்திற்கான ஆதரவுத் திட்டம் (SSPF) மற்றும் விஞ்ஞான கூட்டங்கள் மற்றும் நிகழ்வுகளுக்கான ஆதரவுத் திட்டம் (SSSME) என்பனவும் செயல்பாட்டில் இருந்தன.உயர் பிரசுரக் கட்டணங்களின் காரணமாக, அதிக தாக்கம் கொண்ட அறிவார்ந்த இதழ்களில் ஆராய்ச்சியாளர்கள் வெளியீடுகளினை வெளியிடுவது கட்டுப்படுத்தப்படுகின்றது . 1.3, 2.54 ரூ 4.01 (இணைப்பு 06) என்ற தாக்கக் காரணியுடன் அறிவியல் மேற்கோள் சுட்டெண் விரிவுபடுத்தப்பட்ட மற்றும் சமூக அறிவியல் மேற்கோள் சுட்டெண் ஆகியவற்றில் குறியிடப்பட்ட புகழ்பெற்ற பத்திரிகைகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மூன்று இலங்கை விஞ்ஞானிகளுக்கு ளுளூகு இன் கீழ் வெளியீட்டுக் கட்டணங்கள் தொடர்பில் தேசிய விஞ்ஞான மன்றம் ஆதரவளித்தது.இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தின் 77வது ஆண்டு அமர்வுகளாவன (தொனிப்பொருள் - " வளமான எதிர்காலத்திற்கு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம்") ளுளுளுஆநு இனால் ஆதரிக்கப்பட்டது, இதன்போது, 135 ஆராய்ச்சி பணிகள் தொடர்பான அறிவுத தகவல்களாவன, வாய்வழி மற்றும் சுவரொட்டி விளக்கக்காட்சிகளாக பகிரப்பட்டது.. பரப்பப்பட்டது.

நிகழ் நிலை அடிப்படையில் இலங்கை இதழ்கள் (SLJOL)

இலங்கையின் முதன்மை இதழ்கள் திரட்டி தளமானது , ஸ்ரீரீலங்கா நிகழ்நிலை இதழ்கள் (SLJOL) (*https://www. sljol.info/*) ஆகும் என்பதுடன் இது நிகழ்நிலை இதழ்கள் கருத்திட்டத்தின் (JOL) உறுப்பினர் ஆகும் அத்துடன் இக்கருத்திட்டமானது,ஐக்கிய இராஜ்யத்தின் விஞ்ஞான வெளியீடுகள் கிடைக்கப்படுவதற்கு சர்வதேச வலையமைப்பினால் தாபிக்கப்பட்டதொன்றாகும். 2008 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய இராஜியத்தினை சார்ந்த Ubiquity Press உடன் இணைந்து தேசிய விஞ்ஞான மன்றத்தினால் செயற்படுத்தப்படும் SLJOL இன் நோக்கானது, இலங்கையை தளமாகக் கொண்ட கல்வியாளர்களால் வெளியிடப்பட்ட அறிவார்ந்த ஆராய்ச்சி வெளியீடுகளினை உலகளாவிய பார்வை மற்றும் அணுகலுக்கு உட்படுத்தலாகும். இணையதளமானது தற்போது உள்நாட்டில் வெளியிடப்பட்ட, சக மதிப்பாய்வு செய்யப்பட்ட 111 அறிவார்ந்த இதழ்களை வழங்குகிறது.







உரு 36 : SLJOLஇல் உள்ளடக்கப்பட்ட விடயங்கள்

கோவிட் -19 தொற்று நோயானது இக்காலகட்டத்தில் தீவிரமாக பரவுவதால் அதனை எதிர்கொள்ளும் வகையில், திறந்த அணுகல் இதழ் வெளியீட்டுத் தளத்தை வைத்திருப்பதன் மதிப்பும் அவசியமும் உள்ளூர் வெளியீட்டாளர்கள், பதிப்பாசிரியர்கள் மற்றும் எழுத்தாளர்கள் (ஆராய்ச்சியாளர்கள்) ஆகியோரினால் மிக உயர்ந்த அளவில் உணரப்பட்டது. எனவே, SLJOL இல் இணைவதற்கு 26 உள்ளூர் திறந்த அணுகல் இதழ்களிடமிருந்து அதிக கோரிக்கை முன்வைக்கப்பட்டு இருந்தது. இதனைத் தொடர்ந்து SLJOL இனில் இணைவதற்கு தேவையான தரநிலைகள் மற்றும் கடுமையான மதிப்பீட்டு அளவுகோல்களாவன பூர்த்தி செய்யப்பட்ட பின், 2021 ஆம் ஆண்டில் SLJOL இல் 17 இதழ்கள் புதிதாக சேர்க்கப்பட்டன.

2021 டிசம்பர் 31 க்கு உள்ளவாறாக, நோக்கின் SLJOL இல் உள்ள 111 இலங்கை அறிவார்ந்த சஞ்சிகைகளில் உள்ள 15,653 ஆய்வுக் கட்டுரைகளின் மூலம் 1776 சிக்கல்கள் தொடர்பில் தீர்வுகள் தரப்பட்டுள்ளன. உள்ளடக்கப்பட்டுள்ளன. அனைத்து கட்டுரைகளும் மீள் நோக்க கூடியதாக இருப்பதுடன் அவற்றினை குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இலவசமாக பயன்படுத்தலாம். 2021 ஆம் ஆண்டில் 2167 ஆய்வுக் கட்டுரைகளாவன SLJOL இல் 245 இதழ்களில் வெளியிடப்பட்டன. உரு 37 (அ) மற்றும் 37 (ஆ) என்பன SLJOL இன் வளர்ச்சியை சித்தரிக்கின்றன.






உரு37: SLJOL இன் வளர்ச்சி

2021 ஆம் ஆண்டில் கூகுள் பகுப்பாய்வில் தரப்பட்ட புள்ளிவிவரங்களின்படி, 210 நாடுகளில் இருந்து 303,596 நோக்குனர்கள் இருந்தனர் என்பதுடன் 147,467 முழு உரை கட்டுரைகள் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன *(அட்டவணை 07).*


அட்டவணை 07: ளுடுதுழுடு இன் பாவனையாளர்கள் (முதல் முப்பத்தாறு நாடுகள்)

நாடு	பாவனையாளர்கள்	நாடு	பாவனையாளர்கள்	நாடு	பாவனையாளர்கள்
இலங்கை	111542	பங்கலாதேசம்	2130	சவுதி அரேபியா	1124
இந்தியா	31637	பிரான்ஸ்	2043	எகிப்து	1119
ஐக்கிய அரசு	21131	ஜேர்மனி	1970	தென்கொரியா	1117
சீனா	15016	சிங்கப்பூர்	1785	தென் ஆபிரிக்கா	1033
பிளிப்பைன்	10152	துருக்கி	1783	மேக்ஸிகோ	975
ஐக்கிய இராச்சியம்	6289	ஜப்பான்	1737	வியட்னாம்	955
இந்தோனேசியா	5305	பிரேசில்	1641	இத்தாலி	941
அவுஸ்திரேலியா	4355	தாய்லாந்து	1585	ஹொங்கொங்	863
நைஜீரியா	4207	நேபாலம்	1541	தாய்வான்	803
பாகிஸ்தான்	3797	அயர்லாந்து	1157	கென்யா	736
மலேசியா	3628	எத்தியோப்பியா	1154	ஸ்பெயின்	725
கனடா	2717	நெதர்லாந்து	1145	ஐக்கிய அரபு நாடுகள்	654

படம் 38 ரூ *39* இல் காட்டப்பட்டுள்ளபடி, தொற்று நோய் காலப்பகுதியின் போது, ளுடுதுழுடு இன் பயன்பாடு மற்றும் முழு உரை பதிவிறக்கம் கணிசமாக அதிகரித்துள்ளது



உரு 38: கூகுள் பகுப்பாய்வில் தரப்பட்டுள்ள SLJOL நோக்குனர்கள் (2015-2021)



உரு 39 : கூகுள் பகுப்பாய்விற்கு அமைவுற SLJOL இல் இருந்து தரவிறக்கம் ய்யப்பட்ட முழு பதிப்புரை (2015-2021)


நிகழ்நிலை ஊடான இலங்கை இதழ்களின் ஒரு முக்கியமான பொறுப்பானது, அதன் இதழ்கள் எவ்வளவு வெற்றிகரமானவை என்பதையும், அந்த இதழ்களினை பாதுகாக்க அல்லது வலுப்படுத்த சில தடுப்பு நடவடிக்கைகள் தேவையா என்பதையும் அவ்வப்போது மதிப்பீடு செய்வதாகும். இப்பணியானது அட்டவணை 08 இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் மூலம் முன்னெடுக்கப்பட்டது.

அட்டவணை 08: இதழ்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதத்தில் 2021 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

01	நிகழ்நிலை செயல்முறை மற்றும் கட்டுரைகளை வெளியிடுவதன் மூலம் 21 இதழ்களுக்கு ஆதரவு வழங்கப்பட்டது
02	77% இதழ்கள் "புழடன" (Gold Open Access Journal) என்ற வகையின் கீழ் அடக்கப்பட்டுள்ளன. Attribution 4.0 license)
03	தொடர்புடைய அட்டைப் படங்கள் மற்றும் ட்விட்டர்களுடன் 260 இணைய அறிவிப்புகள்
04	270 தொல்லை வீழ்த்தல் அமர்வுகள்
05	பதிப்பாசிரியர்களுக்கு 99 விளக்கங்கள் மற்றும் விழிப்புணர்வு அமர்வுகள்
06	பாவனையாளர்களில் 329 பேரினை பதிப்பாசிரியர்கள், பிரிவு பதிப்பாசிரியர்கள், எழுத்தாளர்கள், மீள் நோக்குனர்கள், பிரதி பதிப்பாசிரியர்கள் என இணைக்கப்பட்டனர்.
07	ORCID ID. 62% எடிட்டர்கள் கொண்டுள்ளனர்.
08	189 இதழ்களின் இணைய புதுப்பிப்புகள் 09
09	"ஆராய்ச்சி ஒருமைப்பாடு" வகையானது 04 இதழின் முகப்புப் பக்கங்களில் சேர்க்கப்பட்டது, இது உவையவழைெ தரவுத்-தளத்தின் அளவுகோல்களை பூர்த்தி செய்கிறது.
10	232 இதழ் வெளியீடுகளுக்கு *crossref.org* இலிருந்து டிஜிட்டல் பொருள் அடையாளங்காட்டிகள் (DOIs) வழங்கப்பட்டன.
11	07 பத்திரிகை ஆசிரியர்களுக்கு இதழ் வெளியீட்டு நடைமுறைகள் மற்றும் தரநிலைகள் (JPSS) கட்டமைப்பு பற்றி தெரிவிக்கப்பட்டது.
12	"பதிப்பாசிரியர்கள் செயல்முறைகள்" குறித்த பயிற்சித் திட்டத்தை நிகல்நிலை ஊடாக நடத்துவதற்கு வசதி செய்யப்பட்டது, ஆன்லைன் பாடநெறி - பகுதி 1 ஆனது ஐக்கிய இராஜியத்தினை சார்ந்தINASP, UK நடத்தப்பட்டது (5 அக்டோபர் - 8 நவம்பர்)
13	"இதழ் முகாமைத்துவ முறைமை" பற்றிய 02 நிகழ் நிலை அடிப்படையிலான பயிற்சித் திட்டமானது இதழ் ஆசிரியர்களுக்க-ாக ஐக்கிய இராஜியத்தினை சார்ந்த Ubiquity Press இனால் 02 29 ஏப்ரல் மற்றும் 24 ஆகிய திகதிகளில் நடத்தப்பட்டது
14	செயற்படாத 07 இதழ்கள் மீண்டும் இணைக்கப்பட்டன


தேசிய டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட கருத்திட்டம்

2021 ஆம் ஆண்டு கால கட்டத்தில் தேசிய டிஜிட்டல்மயப்படுத்தப்பட்ட கருத்திட்டமானது அதனது 111 வது கட்டத்தில் (கட்டம் III) வெற்றிகரமாக முன்னேறி வருகின்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட நூலகங்களில் உள்ள உள்ளூர் இலக்கிய சேகரிப்புகளை டிஜிட்டல் மயமாக்குதல், ஒவ்வொரு நூலகத்திற்கும் DSpace மென்பொருளில் நிறுவன களஞ்சியங்களை (IRs) நிறுவுதல் மற்றும் IR களில் டிஜிட்டல் ஆவணங்களை பதிவேற்றுதல் ஆகியவை ஒவ்வொரு கட்டத்தின் முக்கிய செயல்பாடுகளாகும். கிட்டத்தட்ட, 2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் 80,000 ஆவணங்கள் நிகழ் நிலை மூலமான அணுகலுக்குக் கிடைத்தன. NDP யின் ஆரம்ப நிலையில் (2011) இருந்தே அதனது பாய்ச்சல் அட்டவணை மற்றும் முன்னேற்றம் என்பன வரைபடம் 02 இல் கொடுக்கப்பட்டுள்ளது.



வரைபடம் 02 : பாய்ச்சல் அட்டவணை (தேசிய டிஜிட்டல்மயப்படுத்தப்பட்ட கருத்திட்டம் தாபிக்கப்பட்டதிலிருந்து அதன் வளர்ச்சி (2011)


எட்டு மின் களஞ்சியங்கள் மூலம் நிகழ்நிலை அணுகல் வழங்கப்பட்ட கட்டுரைகளின் மொத்த எண்ணிக்கையை உரு 40 சித்தரிக்கிறது.




NSF – தேசிய விஞ்ஞான மன்றம்
IESL - எந்திரவியலாளர்கள் நிறுவனம்
DA - விவசாயத் திணைக்களம்
SUSL - இலங்கை சபரகமுவா பல்கலைக்கழகம்
PGIM - மருத்துவத்திற்கான பட்டப்பின் படிப்பு நிறுவகம்
WUSL – இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்
NIFS - தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகம்
ID - நீர்ப்பாசனத் திணைக்களம்

உரு 40 : 2021 ஆம் ஆண்டில் நிகழ்நிலை மூலம் அணுகலுக்கு பெறக்கூடியதாக உள்ள முழு ஆக்கங்கள் / ஆவணங்கள்

தேசிய டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் முக்கிய நோக்கங்களில் ஒன்று, பயன்பாடுகளுக்கான தெரிவுநிலை மற்றும் நிகழ்நிலை மூலமான அணுகலை அதிகரிப்பதாகும். இது நோக்குனர்களின் எண்ணிக்கை மற்றும் பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கையால் அளவிடப்படுகிறது. 2019 ரூ 2020 உடன் ஒப்பிடும்போது 2021 இல் களஞ்சியங்களின் பயன்பாட்டில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்படுகிறது. மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் 2.24 மில்லியனுக்கும் அதிகமான மீளாய்வுகள் மற்றும் 430,000 க்கும் மேற்பட்ட முழு உரை ஆவணங்கள் பதிவிறக்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.



உரு 41 : தேடல்களின் அடிப்படையில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் சேமிப்பகமானது மின் தேக்கங்களினை




உரு 42 : பதிவிறக்கங்களின் அடிப்படையில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் சேமிப்பகமானது மின் தேக்கங்களினை

2021 ஆம் ஆண்டில் தேசிய டிஜிட்டல்மயப்படுத்தப்பட்ட கருத்திட்டமானது, சுற்றுச்சூழல் அமைச்சு மற்றும் ஜனாதிபதி செயலகம் என இரண்டு அமைப்புகளுக்கு விரிவுபடுத்தப்பட்டது. அமைச்சின் வெளியீடுகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கு கிட்டத்தட்ட 15,000 பக்கங்கள் இருக்க வேண்டும். இந்த இரண்டு திட்டங்களும் 2022-ம் ஆண்டுக்குள் நடைமுறையாக்கம் செய்யப்படும்.

விஞ்ஞான தகவல்களின் தேசிய தரவுத்தளத்தினை விருத்தி செய்தலும் பேணலும்

2021 ஆம் ஆண்டில், தேசிய விஞ்ஞான மன்றமானது ,இலங்கை விஞ்ஞானவியல் சுட்டெண் (SLSI), SLSTICAT மற்றும், இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்க (SLAAS) தரவுத்தளங்களில் 8,534 பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் அதன் விஞ்ஞானவியல் தகவல் தரவுத்தளங்களை மேலும் வலுப்படுத்த முடிந்தது. 2021 ஆம் ஆண்டில், தேசிய விஞ்ஞான மன்றமானது ,இலங்கை விஞ்ஞானவியல் சுட்டெண் (SLSI), ளுடுளுவுஐஊயுவு மற்றும், இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்க (SLAAS) தரவுத்தளங்களில் 8,534 பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் அதன் விஞ்ஞானவியல் தகவல் தரவுத்தளங்களை மேலும் வலுப்படுத்த முடிந்தது.



உரு 43 : விஞ்ஞான தகவல் தரவு தளத்தின்வளர்ச்சி (2017- 2021)

இலங்கை ஆராய்ச்சியாளர்கள் தங்கள் கண்டுபிடிப்புகளை உலகளவில் பரப்புவதில் எதிர்கொள்ளும் பெரும் சவாலை முறியடிக்கும் வகையில், 208,586 கல்விசார் துறைகளின் முழு அளவிலான ஆவணங்களை உலகளவில் பகிர்ந்து கொள்ள முடிந்ததமை தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு கிடைத்த ஒரு பெரிய சாதனையாகும். இந்த ஆண்டில், 21,526 புதிய ஆவணங்கள் ரூ பதிவுகள் சேர்க்கப்பட்டன மற்றும் 41,592 பதிவுகள் டிஜிட்டல் களஞ்சியங்கள் மற்றும் தரவுத்தளங்களில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. கூகுள் பகுப்பாய்வில் மற்றும் பிறவற்றில் கொடுக்கப்பட்ட புள்ளிவிவரங்களின்படி, 2021 ஆம் ஆண்டில், அனைத்து தரவுத்தளங்களினையும் நோக்கியவர்களின் எண்ணிக்கை 2,503,596 என பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் 577,467 முழு உரை கட்டுரைகள் உலகளவில் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ளன.

விஞ்ஞான தொழில் நுட்ப புத்தாக சுட்டிகளுக்கும்மற்றும் தரவுகளுக்கும் ஒரு அடிப்படையினை வழங்கள்

தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அளவை

மார்ச் 2019 முதல் மார்ச் 2020 வரை நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் அடிப்படையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆய்வு 2018 பற்றிய புள்ளிவிவரக் கையேடு வெளியிடப்பட்டது. 2018 ஆம் நிதியாண்டில் நாட்டின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் செயல்திறனை புள்ளிவிவர கையேடு பிரதிபலிக்கிறது. பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பினால் (OECD) வகுக்கப்பட்டுள்ள சர்வதேச தரங்களின் அடிப்படையில் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. கணக்கெடுப்பின் நோக்கம் பின்வரும் நான்கு பிரிவுகளை உள்ளடக்கியதாக அமைகிறது:

- உயர் கல்வி துறை
- அரச ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம்
- வர்த்தக வியாபார முயற்சிகள் துறை
- தனியார் இலாப நோக்கற்ற அமைப்பாண்மை துறை

முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், 2018 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பை மேம்படுத்த பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் விளைவாக, வணிக நிறுவனத் துறையின் துலங்கலானது கணிசமாக அதிகரிக்கப்பட்டது. இது உயர் பிரதிநிதித்துவம் மற்றும் தரவுத் தரத்தை மேம்படுத்துவதாக அமைகிறது. இந்த விடயத்தில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்துடன் ஏற்படுத்தப்பட்ட கூட்டாண்மையானது குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருந்தது.

2018 ஆம் ஆண்டிற்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி புள்ளி விவரங்களாவன, தேசிய விஞ்ஞான மன்றமானது, தேசிய மைய புள்ளியாக உள்ள யுனெஸ்கோ புள்ளி விபரவியல் நிறுவகத்துடன் (UIS) பகிர்ந்து கொள்ளப்பட்டது.

2018 ஆம் ஆண்டின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கணக்கெடுப்பின் சிறப்பம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

- 2018 ஆம் ஆண்டில் இலங்கையின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான மொத்த உள்நாட்டுச் செலவு (GERD) ரூபாய் 18,343.92 மில்லியன் என்பதுடன் இது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.13மூ ஆக இருந்தது என்பதாகும். இத்தொகை 2017 ஆம் ஆண்டில் 17,003.34 மில்லியன் ஆகும்.


- ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான அதிக செலவினமானது வணிக நிறுவனங்களால் (39.77%) செலவிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து அரசாங்க ஆராய்ச்சி நிறுவனங்களால் (35.42%) மேற்கொள்ளப்பட்டது. உயர்கல்வி மற்றும் தனியார் இலாப நோக்கற்ற நிறுவனத் துறைகளுக்கு இது தொடர்பான விகிதாச்சாரம் முறையே 23.46% மற்றும் 1.35% ஆகும்.




விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப முகாமைத்துவ தகவல் முறைமை (STMIS)

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் அமைப்பானது (STMIS) கணினிமயமாக்கப்பட்ட தகவல் அமைப்பாகும் என்பதுடன் இது 2004 ஆம் ஆண்டில் இருந்து தேசிய விஞ்ஞான மன்றத்தினால் விருத்தி செய்யப்பட்டு பேணப்படுகிறது விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் அமைப்பு தரவுத்தளமானது (STMIS) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான நிறுவனங்கள், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான ஆளணியினர், நிறுவனங்களில் உள்ள மேம்பட்ட விஞ்ஞானவியல் உபகரணங்கள், நடந்து கொண்டிருக்கும் ஆராய்ச்சி நடவடிக்கைகள், நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட மற்றும் மாற்றப்படும் தொழில்நுட்பங்கள், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான நிறுவனங்களால் பொதுமக்களுக்காக வழங்கப்படும் சேவைகள் மற்றும் பயிற்சி திட்டங்கள் மற்றும் தனிப்பட்ட விஞ்ஞானிகளால் செய்யப்படும் ஆராய்ச்சி வெளியீடுகள் பற்றிய விபரங்களினை தருகிறது.


நிபுணத்துவம், தகுதிகள், வயது, பாலினம் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் உறுப்பினர்களின் எண்ணிக்கையை சித்தரிக்க, கைகெழபசயிாைஉள போன்ற மேலதிக சிறப்பியல்புகளுடன் தரவுத்தளமானது செறிவூட்டப்பட்டுள்ளது. தற்போது விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப முகாமைத்துவ தகவல் முறைமையில் 6981 பேர் பதிவு செய்துள்ளனர். இதில் 263 பேர் 2021 ஆம் ஆண்டில் புதிதாக பதிவு செய்தவர்கள் ஆவார்கள்.




உரு 44 : விஞ்ஞான தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் முறைமை தரவுத் தளத்தில் பதிவு செய்தவர்கள்



உரு 45 : விஞ்ஞான தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் முறைமை தரவுத் தளத்தில் பால் அடிப்படையில் பதிவு செய்தவர்கள்



உரு 45 : விஞ்ஞான தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் முறைமை தரவுத் தளத்தில் வயதடிப்படையில் பதிவு செய்தவர்கள்




உரு 47 : மொத்த பதிவாளர்களில் பல்கலைக்கழகத்தின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டவர்களின் % விகிதம்

விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப முகாமைத்துவ தகவல் முறைமையினை (STMIS) தகவல்களினை வழங்கும் ஒரு மையமாக மாற்றும் நோக்கத்துடன், அநேகமான தகவல்கள் அதாவது, நிறுவனத்தின் அடிப்படை விவரங்கள், தொடர்பு கொள்வதற்கான விவரங்கள், நிறுவனங்களினால் வழங்கப்படும் சேவைகள் மற்றும் பயிற்சி திட்டங்கள் பற்றிய விபரங்கள், நிறுவனங்களினால் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் அவர்களிடம் உள்ள குறிப்பிட்ட உபகரணங்கள் பற்றிய விபரங்கள் போன்றன 105 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களிடம் சேகரிக்கப்பட்டு விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப முகாமைத்துவ தகவல் முறைமை (STMIS) தரவுத்தளத்தில் பதியப்பட்டது

விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப முகாமைத்துவ தகவல் முறை யானது (STMIS), திறன் விருத்தி, தொழிற்கல்வி. ஆராய்ச்சி மற்றும் புத்தாக இராஜாங்க அமைச்சின் வலைத்தளத்துடன் 2021 ஆம் ஆண்டில் இணைக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகள் பற்றிய தெரிவுநிலையை மேம்படுத்த மற்றும் பிற நிறுவனங்களின் வலைத்தளத்துடன் இணைக்கப்படும்.

பாவனை

விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப முகாமைத்துவ தகவல் முறைமை (STMIS) தரவுத்தளமானது விஞ்ஞான கற்கைகள் மற்றும் நிகழ்வுகள் ,மானிய அழைப்புக்கள் போன்ற விடயங்களுடன் பதிவு செய்தவர்களின் நலனுக்காக தொழில் வாய்ப்புகள் போன்ற பிற தகவல்களை வழங்கவும். பரப்புவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. இந்த வசதியின் முறையான அறிமுகமானது, தேசிய மற்றும் சர்வதேச அளவில் கிடைக்கும் வாய்ப்புகள் பற்றிய தகவல்களினை விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப முகாமைத்துவ தகவல் முறைமையில் (STMIS) பதிவு செய்பவர்கள் பெற்றுக்கொண்டு பயனடைய வழி வகுக்கிறது.



உரு 48: விஞ்ஞான தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் தரவுத் தளத்தின் ஊடாக சுற்றுக்கு விடப்பட்டவைகள் பற்றிய தகவல்கள்

கணிசமான அதிகரிப்பைக் குறிக்கும் வகையில், 2021 ஆம் ஆண்டில் மொத்தம் 112 சுற்றுக்கள் செய்யப்பட்டன, இது தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு ரூபாய் 75,000.00. வருமானமாத்தை தந்தது இந்தச் சேவையானது, பொருத்தமான நம்பகமான தகவல்களினை பெறுவதற்கான ஒரு நுழைவாயில் என்ற வகையில் நாட்டில் உள்ள விஞ்ஞான தொழில்நுட்ப சமூகத்தினரிடையே பிரபலமடைந்து வருகிறது.


விஞ்ஞான மற்றும் தொழில் நுட்ப முகாமைத்துவ தகவல் முறைமை (STMIS) தரவுத்தளத்தில் பராமரிக்கப்படும் தரவைப் பயன்படுத்தி வெவ்வேறு பங்குதாரர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் 2021 இல் பதினொரு தனிப்பயனாக்கப்பட்ட விரிவான அறிக்கைகள் உருவாக்கப்பட்டன. இந்த அறிக்கைகள் சம்பந்தப்பட்ட துறைகளினை சார்ந்த 1000 நிபுணர்களினால் மீள்நோக்கப்பட்டது.

விஞ்ஞானத்தினை பிரபலப்படுத்துதல்

மக்களின் விஞ்ஞானவியல் கல்வியறிவை மேம்படுத்த வலையமைப்புக்களினை வலுப்படுத்துதல்

விஞ்ஞானவியல் சங்க வலையமைப்புக்கள்

- பாடசாலை விஞ்ஞானவியல் சங்க வலையமைப்பானது (SSSN) 2005 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது, இது விஞ்ஞானவியல் மற்றும் தொழில்நுட்பத்தின் பல்வேறு துறைகளில் சமீபத்திய விருத்திகள் பற்றிய அறிவைப் பாடசாலை மாணவர்கள் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்பதனையும் அவர்கள் அதனை தமது நாளாந்த வாழ்வில் பிரயோகப்படுத்துதல் வேண்டும் என்பதனையும் நோக்காக கொண்டுள்ளது. இந்த வலையமைப்பு அனைத்து பாடசாலை வகைகளையும் உள்ளடக்கியது (1AB, 1C, வகை 2, வகை 3 மற்றும் தனியார்). 2021 ஆம் ஆண்டின் இறுதியில், பதிவு செய்யப்பட்ட பாடசாலை விஞ்ஞானவியல் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை 1056 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது, இது ஆண்டு அடிப்படையில் தொடர்ச்சியான அதிகரிப்பைக் குறிக்கிறது. அதன்படி, தேசிய விஞ்ஞான மன்றத்தின் சேவைகள் இப்போது 575 ,1AB பள்ளிகள் மற்றும் 481 பிற பள்ளி வகைகளுக்கு சென்றடைந்துள்ளன.



உரு 49: 2012 இலிருந்து 2021வரையில் பதிவு செய்யப்பட்ட பாடசாலை விஞ்ஞானவியல் சங்கங்களின் எண்ணிக்கை

- பல்கலைக்கழக விஞ்ஞான சங்க வலையமைப்பு திட்டமானது, (USSN) விஞ்ஞான பட்டம் பயிலும் பட்டதாரிகளுக்கு ஒரு தளத்தை உருவாக்குதல் மற்றும் தேசிய நடவடிக்கைகளில் அவர்களின் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் 2014 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இது விஞ்ஞான தொடர்பை மேம்படுத்துதல், பட்டம் பயிலும் பட்டதாரிகளின் எழுத்துத் திறனை மேம்படுத்துதல் மற்றும் இலங்கையில் உள்ள குடிமக்களின் நல்வாழ்வுக்காக விஞ்ஞானத்தினை பிரபலப்படுத்த அவர்களின் அறிவைப் பயன்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டது. 2021 ஆம் ஆண்டின் இறுதிக்குள் மொத்தம் 85 பல்கலைக்கழக விஞ்ஞான சங்கங்கள் தேசிய விஞ்ஞான மன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

- இளைஞர் விஞ்ஞான சங்கத்தினை (லுளுளுடீ) நிறுவும் பணியானது முன்னெடுக்கப்படுகின்றது

மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டில் அறிவியல் பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு தேசிய விஞ்ஞான மன்றம் நிதி உதவி மற்றும் வளவாளர்களை மூன்று பாடசாலைகளுக்கு வழங்கியது.

1. கொத்மலையில் உள்ள டெல்டா கமுனுபுர மகா வித்யாலத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட “Sci-Eye” கல்வி ஆராய்ச்சி கருத்தரங்கு 2021.

2. வத்தளையில் உள்ள லைசியம் இன்டர்நேஷனல் பாடசாலையின் ஆராய்ச்சி கருத்தரங்கு மற்றும் விஞ்ஞானவியல் தினம்

3. ரோயல் கல்லூரியின் ”பரிசோதனைகள் 21” பாடசாலைகளுக்கு இடையேயான விஞ்ஞானவியல் சிந்தனை மற்றும் ஆராய்ச்சி போட்டி .ஆராய்ச்சி யோசனைகள் மற்றும் திட்ட முன்மொழிவுகளை மதிப்பிடுவதன் மூலம் விஞ்ஞான சங்கம் ஆதரிக்கப்படல்.

இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலையினை சார்ந்த மாணவர்களுக்கான போட்டி


9-13 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான விஞ்ஞான ஆராய்ச்சி திட்டப் போட்டியின் (ளுசீஊ) கீழ் தேசிய விஞ்ஞான மன்றமானது 215 ஆராய்ச்சி திட்ட முன்மொழிவுகளைப் பரீசீலனை நிமித்தம் பெற்றது. ளுசீஊ இன் இறுதி மதிப்பீடு இரண்டு படிகளில் நடத்தப்பட்டது: படி ஐ: பல் ஊடக விளக்கக்காட்சிகளின் அடிப்படையில் 20 அறிவியல் திட்டங்களைத் தேர்ந்தெடுப்பது மற்றும் படி ஐஐ: படி ஐ இல் தேர்ந்தெடுக்கப்பட்ட 20 சுவரொட்டி விளக்கக்காட்சிகளின் அடிப்படையில் சிறந்த பத்து திட்டங்களினை தேர்வு செய்வது வெற்றியாளர்களின் பெயர்கள் அட்டவணை 09 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 09 : ளுசீஊ இன் வெற்றியாளர்கள

இலக்கம்	பெயர்	பாடசாலை	கருத்திட்ட தலைப்பு
1	A Y P வீரகூன்	தர்மராஜா கல்லூரி கண்டி	Investigation of pest control effect of Wathupalu (*Mikania micrantha*) leaf water extract
2	U G பகஷி லக்ஷிக அபயகூன்	டெல்ட கெமுனுபுற மஹா வித்தியாலயம் புசல்லாவ	Propagation of Dracaena sanderiana cuttings under different conditions
3	J A லினுரி ஹிமன்ச W நதுணி நவோதயா ரோனத்மி சண்தேவம அலவட்ட	சிறிமாவோ பண்டாரநாயக வித்தியாலயம் கொழும்பு 7	Development of a ready to serve drink using juice of fresh Cocos nucifera sprouts
4	W R M U A K விக்ரமசிங்க G D கனதேகெதர T M P R V தென்னகூன்	மகாமாய மகளிர் கல்லூரி கண்டி	Isolation of polythene degrading microorganism
5	தருஷி ஏகநாயக ஸ்வேதா அபேவர்ண	ஹில் வூட் கல்லூரி கண்டி	Study on incidental bycatch of sea in coastal and offshore fishery in Kalpitiya Peninsula, Sri Lanka
6	R K சந்துணி நேத்மினிராமநாயக M பரமித விஜயவர்த்தன	ரத்னாவளி பெண்கள் பாடசாலை கம்பஹா	Evaluation of local plant species for the development of potential larvicidal agents against the *Aedes aegypti L.* (*Diptera: Culicidae*) mosquito larvae.
7	நிலுமிண்டா தர்மவர்தன சந்தீப ராஜகருணா கவிரு டி சில்வா	ட்ரினிட்டி கல்லூரி கண்டி	Population dynamics of Barking Deer (*Muntiacus muntjak malabaricus*) at Udawattekele Reserve Forest, Kandy, Sri Lanka
8	ரிவிறு டில்வான் குணசேனா	பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரி மொரட்டுவ	Applicability of using selected household organic waste as a substrate for small scale cultivation and their potential to developing in commercial scale
9	P கோவர்த்தன் M ரதுகேஷ் T மனோஜ்கரன்	பட்டிருப்பு ஆ.ஆ. வித்தியாலயம் கலவஞ்சிக்குடி	Preliminary study of effective fluoride adsorption by aluminium oxide modified clay
10	சபா ரிசான் சதிகா சஹீமா சீமா பைசல்	முஸ்லிம் மகளிர் பாடசாலை கின்ஸ்டன் பூங்கா, கொழும்பு 4	Knowledge, attitudes and practices and factors associated with knowledge regarding dementia among parents of ordinary level school children in a selected school in Colombo

SRPC 2020/202 , ன் வெற்றியாளர்களான கம்பஹா ரத்னாவலி பாலிகா வித்தியாலயத்தினை சார்ந்த திருவதி சதுனி ராமநாயக்க மற்றும் திருவதி பரமிதா விஜேவர்தன ஆகியோர் வாய்மொழி விளக்கங்களுடன் பேராதெனிய பல்கலைக்கழக கலைப் பீடத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட "iPURSE 2021" இல் பங்கேற்க அங்கீகரிக்கப்பட்டனர் இந்த நிகழ்வு நவம்பர் மாதம் 11ஆம் திகதி, 2021 அன்று நடைபெற்றது.

විද්‍යා තරඟ පැවැත්වීමේ වාර්ෂික වැඩසටහන යටතේ "දේශය යළි ගොඩනැගීමට විද්‍යාව යොදා ගනිමු" යන තේමාව යටතේ විද්‍යා තරඟ අටක් පවත්වන ලදී. සියලුම ජයග්‍රාහකයින් සඳහා මුදල් ත්‍යාග සහ සහතිකපත් ප්‍රදානය කෙරිණි. විද්‍යාව ප්‍රවර්ධනය කරන ගුරුවරුන් සහ හොඳම ක්‍රියාකාරී පාසල් විද්‍යා සංගම් ද මෙහිදී ඇගයීමට ලක් විය.



உரு 50: 2021 இல் பள்ளி மாணவர்களால் பல்வேறு போட்டிகளில் பங்கேற்பு

"Digital Story Telling" போட்டியின் முதல் 20 போட்டியாளர்கள், விஞ்ஞானவியல் எழுத்தறிவுக்கான உலக அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட "International Contest of Creative Popular Science Video Works" பங்கேற்குமாறு அறிவுறுத்தப்பட்டனர். போட்டியானது "சமூகத்தின் நிலையான வளர்ச்சி" என்ற கருப்பொருளில் கவனம் செலுத்தியது. இந்த போட்டியில் முதல் பரிசுக்கு உரித்துடையவர்களாக 05 பேர்களும், இரண்டாம் பரிசுக்கு உரித்துடையவர்களாக 10 பேர்களும் , மூன்றாம் பரிசுக்கு உரித்துடையவர்களாக 50 பேர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அட்டவணை 10: ஐவெநசயெவழையெட ஊழவெநளவ ழக ஊசநயவளைந "ழிரடயச ளுஉநைஎந ஏனைநழ றுழசமள இன் வெற்றியாளர்கள்

வெற்றியாளர்களின் பெயர்கள்	காணொளியின் தலைப்பு	இடம்
கிசாரா கெத்மின் பரமுனுகமகே பஹண்டி உதானன பரமுனுகமகே	நிலையான சக்தி மூலங்களின் மூலம் கோள்களினை பாதுகாத்தல்	முதல் பரிசு
எம் ஹசிந்து ஜயஷான் டி சில்வா	வாழ்க்கைக்கான பொது விஞ்ஞான கல்வியறிவை ஊக்குவித்தல்	முதல் பரிசு
பி எ தெவ்மலி பியதாச	காலநிலை மாற்றம் மற்றும் கார்பன் உமிழ்வு	இரண்டாவது பரிசு
தெனகமகே சனுக டுல்வான்	ஆக்கப்பூர்வமான சிந்தனையாளர்கள் ஒரு சிறந்த உலகத்தை உருவாக்குகிறார்கள்	இரண்டாவது பரிசு
திதுலி தியனாதினி	மின்னலை ஆற்றலாகப் பயன்படுத்தலாமா	மூன்றாவது பரிசு
துனிதி விஜேகுணவர்தன	ஆழமான கடல், ஆழமான விண்வெளி மற்றும் ஆழமானதரை	மூன்றாவது பரிசு
கும்சாரா வீரசிங்க	Science Behind Bridges	மூன்றாவது பரிசு
தெவ்னிதா பியதாச	ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கை	மூன்றாவது பரிசு
எம் ஜயந்த டி சில்வா	விவசாயம் மற்றும் உணவு பாதுகாப்பு	மூன்றாவது பரிசு

'Kid Naturalist' என்பது மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் 2020 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு புதிய போட்டியாகும்.இது முதன்மை நிலை (தரம் 1-5) முதல் சுற்றுச்சூழலை உந்துதலுடன் ஆராய்வதற்கு மாணவர்களினை ஊக்குவிக்கும் ஒரு திட்டமாகும். இத்திட்டமானது பாடசாலையானது மூடப்படுவதற்கு நிர்பந்திக்கப்படும் போது மாணவர்கள் தங்கள் நேரத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதை உறுதி செய்வதாகும் மூடல்கள். வெற்றி பெற்றவர்களுக்கு உலக விஞ்ஞானவியல் தின விழாவில் பரிசு வழங்கப்பட்டது

உலக விஞ்ஞான தின கொண்டாட்டங்கள்

அமைதி மற்றும் அபிவிருத்திக்கான உலக விஞ்ஞான தினமானது ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதியாகும் என யுனெஸ்கோவால் அறிவிக்கப்பட்டது. சமூகத்தில் விஞ்ஞானத்தின் குறிப்பிடத்தக்க பங்கை இந்த கொண்டாட்டம் எடுத்துக்காட்டுவதுடன் வளர்ந்து வரும் விஞ்ஞான ரீதியிலான பிரச்சினைகள் குறித்த கலந்துரையாடல்களில் பொதுமக்களை பரவலாக ஈடுபடுத்த வேண்டியதன் அவசியத்தையும் எடுத்துக்காட்டுகிறது. இது நமது அன்றாட வாழ்வில் விஞ்ஞானத்தின் முக்கியத்துவத்தையும் பொருத்தத்தையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

தேசிய விஞ்ஞான மன்றமானது, உலக விஞ்ஞானம் தினத்தை நவம்பர் மாதம் 16 ஆம் திகதியன்று ஒரு கலப்பு நிகழ்வாக பண்டாரநாயக ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கொண்டாடியது. இந்நிகழ்வில் திறன் விருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் கௌரவ இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சீதா அரம்பேபொல அவர்கள் பிரதம அதிதியாக கலந்துக்கொண்டார். "தேசத்தை மீண்டும் கட்டியெழுப்ப விஞ்ஞானத்தினை பயன்படுத்துவோம்" என்பது இந்த ஆண்டின் கருப்பொருள். ஆகும்." நிகழ்வின் சிறப்புரையானது இரு புகழ் பெற்ற விஞ்ஞானிகளால் ஆற்றப்பட்டது. "தேசத்தின் அபிவிருத்திக்கு விஞ்ஞான ஆராய்ச்சி ஏன் முக்கிமாகின்றது" என்ற என்ற தலைப்பின் கீழ் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் நுண்ணுயிரியல் திணைக்களத்தின் டெங்கு ஆய்வு மையத்தின் நுண்ணுயிரியல் பேராசிரியரும் பணிப்பாளருமான பேராசிரியர் நீலிகா மாளவிகே அவர்களாலும் மற்றும் கண்டுபிடிப்பாளர் மற்றும் மூத்த ஆராய்ச்சி விஞ்ஞானி மற்றும் ஹைப்ரிட் டெக்னாலஜிஸ் நிறுவகத்தின் சிரேட்ட நிறைவேற்று அதிகாரி.. சிலின்டெக் நிறுவகத்தில் நானோ தொழில்நுட்ப பயன்பாடுகள் தொடர்பில் ஆலோசகருமான திரு மஞ்சு குணவர்த்தன அவர்களால் "தேசத்தை மீண்டும் கட்டியெழுப்ப புதுமை கலாச்சாரத்தை உருவாக்குதல்" என்ற தலைப்பின் கீழ் ஆற்றப்பட்டது.



விஞ்ஞானத்தினை பிரபலப்படுத்தல் தொடர்பில் வெளியீடுகள


உயிரியல் பாதுகாப்பு, கோவிட் 19, தடயங்களற்ற மாசுபாடு மற்றும் மரபுசாரா சுற்றுச்சூழல் அபாயங்கள் என்ற கருப்பொருளின் கீழ் "விதுரவா"விஞ்ஞானவியல் இதழ் வெளியிடப்பட்டது.





பொதுமக்களை இலக்காகக் கொண்டு விஞ்ஞானத்தினை பிரபலப்படுத்தும் மானியத் திட்டத்தின் கீழ் எட்டு புத்தகங்கள் அச்சிடப்பட்டன.

1) "SPSS சை,த"- திரு .நலிந்த வீரசிங்க மற்றும் எச் .எச் . ஹர்ஷனி GjJD
2) "ආරක්ෂිත ආහාර සැකසීම" - Nguhrpupau; cghyp rku[Pt
3) "ෆින්ලන්තය අපේ ඇසින්" - Nguhrpupau; RNdj;uh fUzhuj;d
4) "இலங்கையில் அரிசி உற்பத்தி பற்றிய கொள்கைகள், செயன்முறைகள் மற்றும் தடைகள் " - Dr. நந்தன சேனாநாயக
5) "நாளாந்த வாழ்கையில் இரசாயனம;" - பேராசிரியர் ஒ.எ. இலப்பெருமா
6) "இலங்கையில் விஞ்ஞான திட்டமிடுகை மற்றும் ஆராய்ச்சி பற்றிய மீளாய்வு 1812-2000- " திரு. அசோகா டி சில்வா
7) "இலங்கையில் மகளிரின் ஆடைகள் " – Dr. அயேஷா விக்ரமசிங்க
8) "ளுயனெகடல வகைபிரிப்பு, இலங்கை மணல் ஈக்களின் சித்திர விளக்கங்கள" - Dr. கணபதி கஜபதி
9) "பண்டைய இலங்கையில் சுதேச அறிவு, மரபுகள், கலாச்சாரம் மற்றும் வாழ்க்கை முறை நடைமுறைகள்" -திரு. அசோகா டி சில்வா










துணை செயல்பாடுகள் மற்றும் நிலைத்தன்மை

முந்தைய ஆண்டுகளைப் போலவே, ஊழியர்களின் முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பத் திறனுடன் கொள்கைகள், செயல்முறைகள் மற்றும் நடைமுறைகளை மேம்படுத்துதல் என்பன தேசிய விஞ்ஞான மன்றத்தின் தொடர்ச்சியான முயற்சியாகும். பணிச்சூழலை மேம்படுத்துதல் மற்றும் மகிழ்ச்சியான மற்றும் திருப்தியான பணியாளர்களை உருவாக்குதல் ஆகியவை தேசிய விஞ்ஞான மன்றத்தினால் தம் அவதானிப்பில் எடுத்துக் கொள்ளப்பட்ட மற்றொரு முக்கியமான விஷயமாகும்.

நிர்வாக ரீதியிலான ஆதரவு


பொது நிர்வாகம், மனித வள மேம்பாடு, சொத்து மேலாண்மை மற்றும் தளவாடத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் ஆகியவைத தேசிய விஞ்ஞான மன்றத்தின் நிர்வாகப் பிரிவின் முக்கிய செயல்பாடுகளாகும். மதிப்பாய்வின் கீழ் உள்ள ஆண்டில், தேசிய விஞ்ஞான மன்றத்தின் முக்கிய செயல்பாடுகளை மேற்கொள்வதற்கு தேசிய விஞ்ஞான மன்றத்தின் மற்ற பிரிவுகளுக்கு நிர்வாகப் பிரிவு தொடர்ந்து ஆதரவளித்து வந்தது.




உரு 51: நுகர்வு வசதிகள் பற்றிய செலவினம் (2017-2021)

நிதி ஆதரவு

அரசாங்க திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையில் உள்ள நிதி விதிமுறைகளுக்குள் செயல் திட்டத்தில் திட்டமிடப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து வேலைகளையும் செயல்படுத்த நிதிப் பிரிவு அனைத்து நிதி நடவடிக்கைகளையும் நிர்வகிக்கிறது. மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டில், புதுப்பித்த வழிமுறைகள் மற்றும் கருவிகளைப் பயன்படுத்தி பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.



உரு 52: முன்னுரிமை பரப்பெல்லையின் கீழ் நிதியியல் செயலாற்றுகைகள்



உரு 53 : மொத்த ஒதுக்கீடான ரூ. 67.897 மில்லியனில் முன்னுரிமை பரப்பெள்ளைக்கு செய்த செலவினம் மூ ஆக.

தகவல் தொழில்நுட்ப ஆதரவு

நிறுவனத்திற்குள் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில் நுட்ப உள்கட்டமைப்பு வசதிகளை பராமரிப்பதற்கும் மற்றும் இறுதிபயனர்களுக்கு தகவல் தொழில்நுட்ப ரீதியில் ஆதரவினை வழங்கலும் தகவல் தொழில் நுட்ப பிரிவின் பொறுப்பாகும். 2021 ஆம் ஆண்டில் நிகழ்நிலை அடிப்படையில் சந்திப்புகள் மற்றும் கூட்டங்களை ஏற்பாடு செய்து "வீட்டில் இருந்து கடமையாற்றல்" எனும் கலாச்சாரத்தை சிறந்த முறையில் முன்னெடுக்க தனது சேவையினை வழங்கியதில் தகவல் தொழில்நுட்பப் பிரிவு குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளது.

செயல்முறைகள் மற்றும் நடைமுறைகளை மேம்படுத்துதல்

கடந்த ஆண்டு டிசம்பரில் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட செயல்திட்டத்தின்படி ஆண்டு முழுவதும் அனைத்து வேலைகளும் நடத்தப்பட்டன. வெவ்வேறு கட்டாய நடவடிக்கைகளின் கீழ் செய்யப்பட்ட முன்னேற்றத்தின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீட்டிற்குள் மூலதன வரவுசெலவுத் திட்டத்தை மறு ஒதுக்கீடு செய்ய மத்திய ஆண்டின் நடு பகுதியில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. தேசிய விஞ்ஞான மன்றத்தின் நிதி மற்றும் பௌதீகவியல் ரீதியான முன்னேற்றம் , தேசிய விஞ்ஞான மன்றத்தின் மேலாண்மை தொடர்பில் விபரங்களாவன மற்றும் பிற தொடர்புடைய அதிகாரிகளுக்கு மாதாந்திர, காலாண்டு மற்றும் நடுப்பகுதியில் தெரிவிக்கப்பட்டது.

நல்லாட்சிக்கான பொது நிறுவன வழிகாட்டுதல்களின்படி, பிரிவுகளின் தலைவர்களின் (ர்ழனு) கூட்டங்கள், நிர்வாக செயல்பாடுகளை மேற்கொள்வது தொடர்பாக முடிவெடுப்பதை எளிதாக்கும் ஒரு வழக்கமான தளத்தை வழங்கியது.இது சரியான நேரத்தில் பரிந்துரைகளை முகாமைத்துவ சபை வழங்க பாதை வகுத்தது.

வருடத்தில் வழமையான சபை கூட்டங்கள் 12 இடம்பெற்றன.

ஊழியர்களின் தொழில்நுட்பத் திறனை மேம்படுத்துதல்

பயிற்சியின் நோக்கமானது, நிறுவனத்தின் குறிக்கோள்கள் தொடர்பில் நிறுவனத்தின் எதிர்பார்ப்புக்களினை பூர்த்தி செய்வதற்குத் தேவையான திறன்கள், அறிவு மற்றும் மனப்பான்மைகளுடன் ஊழியர்களினை தயார் செய்தலாகும். ஊழியர்களின் யதார்த்தமான அபிலாஷைகளைக் கருத்தில் கொண்டு, நிறுவனத்தின் நோக்கங்கள் தொடர்பாக நிறுவன ∴ பிரிவுத் தேவைகளின் மதிப்பீடுகளினை கருத்தில் கொண்ட பிறகு பயிற்சி மேற்கொள்ளப்படுகிறது. பயிற்சி மற்றும் விருத்தி என்பது தேசிய விஞ்ஞான மன்றத்தில் ஒவ்வொரு பணியாளரதும், வகையைப் பொருட்படுத்தாமல் முன்னேடுக்கப்படும் ஒரு தொடர்ச்சியான செயல்முறையாகும்.

அனைத்து ஊழியர்களுக்கும், அதாவது முகாமைத்துவம், நிர்வாக மற்றும் பிற துணை ஊழியர்களுக்கும், அவர்களின் வேலை தொடர்பான அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை வழங்குவதில் உள்ள மதிப்பு மற்றும் முக்கியத்துவத்தை தேசிய விஞ்ஞானம மன்றம் அங்கீகரிக்கிறது. ஊழியர்களின் வினைத்திறனை அதிகரிப்பதன் மூலம் அவர்களால் அவர்ககின் பிரிவுக்கு வழங்கப்படும் பங்களிப்பு அதிகரிப்பதுடன் அதன் மூலம் தேசிய விஞ்ஞான மன்றதின் நோக்குகள் தொடர்பில் அவர்களது தனிப்பட்ட செயல்திறன் அளவும் அதிகரிக்கும். மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை திறம்பட பயன்படுத்துவதன் மூலமும், மக்களின் பயிற்சி மற்றும் மேம்பாட்டில் முதலீடு செய்வதன் மூலமும், பணியாளர்களின் முழு திறனையும் பயன்படுத்திக் கொள்ள தேசிய விஞ்ஞானம மன்றம் எதிர்பார்க்கும் அதே நேரத்தில் அவர்களின் தனிப்பட்ட வளர்ச்சி மற்றும் வேலை திருப்திக்கான தேவைகளை பூர்த்தி செய்கிறது.

அதன்படி, தேசிய விஞ்ஞானம் மன்றத்தின் பணியாளர் விருத்தி குழுவானது (SDC), பிரிவுகள் மற்றும் பிரிவுகளின் தலைவர்களால் அடையாளம் காணப்பட்ட பயிற்சித் தேவைகளின் அடிப்படையில் நிறுவனத்திற்கான வருடாந்திர பயிற்சித் திட்டத்தைத் தயாரித்தது. பணியாளர்களின் பயிற்சிக் கொள்கையில் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களுக்கு இணங்க, பணியாளர் மேம்பாட்டிற்கான வருடாந்திர ஒதுக்கீட்டிற்குள், ஆண்டு முழுவதும் ஊழியர்களுக்கு தேவை அடிப்படையிலான பயிற்சி வாய்ப்புகளை வழங்க தேசிய விஞ்ஞானம் மன்றத்தின் பணியாளர் விருத்தி குழுவினால் (SDC), ஒவ்வொரு முயற்சியும் செய்யப்பட்டது. கோவிட் தொற்றுநோயால் பல பயிற்சி வாய்ப்புகள் தடைபட்டாலும், ஊழியர்கள் தேவைகளை பூர்த்தி செய்யும் நிகழ்நிலை ஊடான திட்டங்களைப் பின்பற்றினர்.

வழங்கப்பட்ட பயிற்சி விவரங்கள் இணைப்பு 07 இல் கொடுக்கப்பட்டுள்ளது.


கணக்காய்வு முகாமைத்துவ குழு அறிக்கை

PED/55 சுற்றறிக்கையின் வழிகாட்டுதலின்படி, 27 பிப்ரவரி 2020 அன்று நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் (AMC) பணியாற்றுவதற்காக தேசிய விஞ்ஞான மன்றத்தின் நிர்வாகக் குழுவானது, திறைசேரி பிரதிநிதி உட்பட மூன்று உறுப்பினர்களை சபை உறுப்பினர்களாக நியமித்தது. இந்த உறுப்பினர்கள் 2021 இல் தொடர்ந்து பணியாற்றினார்கள். எவ்வாறாயினும், தேசிய விஞ்ஞான மன்றத்தின் திறைசேரி பிரதிநிதியான திரு R M D K G N ரணதுங்கவிற்குப் பதிலாக திருமதி ருஸ்னியா அப்தீன் பரிந்துரைக்கப்பட்டார். பொறியியலாளர் (பேராசிரியர்) எஸ் பி எஸ் அபயகோன் அக்டோபர் 2021 முதல் இராஜினாமா செய்ததினை தொடர்ந்து அப்பதவிக்கு பேராசிரியர் நிமல் நவரத்ன நியமிக்கப்பட்டார். தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பிரதிநிதி மற்றும் அமைச்சின் தலைமை உள்ளக கணக்காய்வாளர் ஆகியோர் கணக்காய்வு முகாமைத்துவ குழு நடவடிக்கைகளின் பார்வையாளர்களாக பணியாற்ற அழைக்கப்பட்டனர்.

கணக்காய்வு முகாமைத்துவ குழு திட்டமானது காலாண்டு அடிப்படையில் சந்திப்பதாக இருந்தது. இருப்பினும், நாட்டின் கோவிட் தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக, 2021 ஆம் ஆண்டு, அக்டோபர் 29 ஆம் திகதியும் மற்றும் ஜனவரி 12இ 2022 என இரு திகதிகளில் இரண்டு கூட்டங்கள் மட்டுமே நடைபெற்றன. திருமதி ருஸ்னியா ஆப்தீன் அவர்கள் கணக்காய்வு முகாமைத்துவ குழுவின் இரண்டு கூட்டங்களிலும் தலைவராக பணியாற்றினார். கணக்காய்வு முகாமைத்துவ குழுவானது தனது பரிந்துரைகளை முகாமைத்துவ சபைக்கு முன்வைத்ததுடன் கூட்டத்தின் குறிப்புக்களினையும் முன்வைத்தது.தேசிய விஞ்ஞான மன்றம் சிறந்த முறையில் பணியாற்றுவதற்கு தேவையான பரிந்துரைகளினை பிரிவின் தலைவர்களுக்கு கணக்காய்வு முகாமைத்துவ குழுவினால் முன்வைக்கப்பட்டது. எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த முன்னேற்ற அறிக்கைகள் அடுத்தடுத்த கணக்காய்வு முகாமைத்துவ குழுவின் கூட்டங்களில் தெரிவிக்கப்பட்டன.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ செயற்குழுவானது முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்யும் போது பின்வருவனவற்றிற்கு சிறப்பு கவனம் செலுத்தியது.

- தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் வினவல்கள்களினை பின்தொடர்தல் மற்றும் மீண்டும் மீண்டும் ஒரே மாதிரியான வினவல்களைத் தவிர்த்தல்.
- ஆண்டு முழுவதும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் நியதி சட்ட முறையிலான தேவைகளைப் பின்தொடர்தல்.
- தேசிய விஞ்ஞான மன்றத்தின் செயல்பாடுகளை மதிப்பாய்வு செய்தல் மற்றும் திருத்துதல் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த பரிந்துரைகளை வழங்கல்.
- உள்ளக கணக்காய்வு அவதானிப்புகள் மற்றும் வெளியக கணக்காய்வு அறிக்கைகள், நிர்வாகக் கடிதங்கள் மற்றும் தீர்வு நடவடிக்கைகளினை எடுக்க சபைக்கு உதவுதலும் பரிந்துரைகளை மதிப்பாய்வு செய்தலும்.
- உள் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு மதிப்பாய்வு செய்து வழிகாட்டுதல்களை வழங்குதல்.



உரு 53: பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வு விசாரணைகளின் எண்ணிக்கை (2017-2021)

அச்சிடுகை ஆதரவு

நாட்டில் தொற்றுநோய் பரவி இருந்த போதிலும், அச்சிடுகை பிரிவானது விஞ்ஞானவியல் பிரிவுகளின் அச்சிடும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் இருக்கும் வளங்களினை பயன்படுத்தி தொடர்ந்தும் தன் கடமையில் ஈடுபட்டு வந்தது. அதன்படி, பங்குதாரர்களினை ஈர்க்கும் வகையில் தரமான வெளியீடுகளுடன் பின்வரும் பணிகள் முடிக்கப்பட்டன .விவரங்கள் *அட்டவணை 11* இல் கொடுக்கப்பட்டுள்ளன

அட்டவணை 11: அச்சிடப்பட்ட வகைகள

வெளியீடுகள்	எண்ணிக்கை
இலங்கை சங்க விஞ்ஞான சஞ்சிகை	
யூன் 2020 மற்றும் அச்சுக்கள்	75+20
யூன் 2021 மற்றும் அச்சுக்கள்	75+20
தேசிய விஞ்ஞான மன்ற சஞ்சிகை	
யூன் 2020 மற்றும் அச்சுக்கள்	180 +20
செப்டெம்பர் 2020 மற்றும் அச்சுக்கள	180 +20
விதுறுவ	
ஏப்ரல் - யூன் 2019 (தமிழ்)	750
ஒக்டோபர் - டிசெம்பர் 2019 (தமிழ்)	750
ஏப்ரல் - யூன் 2020 (ஆங்கிலம்)	1600
ஏப்ரல் - யூன் 2020 (சிங்களம்)	2000
ஏனையவை	
புள்ளிவிபரவியல் கையேடு 2018	250
ஆராய்ச்சி விருது சிற்றேடு 2021	85
வருடாந்த அறிக்கை - 2019 (3 மொழிகள்)	02
வருடாந்த அறிக்கை - 2020 (3 மொழிகள்)	02

இதனை விட, 2021 ஆம் ஆண்டில் அச்சிடும் அலகானது,தேசிய விஞ்ஞான மன்றத்தின் தேவைக்கு அமைவுற மேலும் அச்சிடல் பணிகளினை செய்ததுடன் அதனை விட வேறு நிறுவனங்களின் பதினான்கு (14) அச்சு வேலைகளை செய்தது.

தேசிய விஞ்ஞான மன்றத்தை காபன் நடுநிலை மாதிரி நிறுவனமாக மாற்றுவதற்கான முயற்சிகள்

பெறுபேறுகள் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளின் அடைவினை ஒருங்கிணைந்து இயலச்செய்வதனால் நிலைபெறத்தக்க அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சிநிரலுக்கு அமைவாக உரிய அதிகார எல்லைகளில் தேசிய நடவடிக்கைகள் மிகமுக்கியமானதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. நாட்டின் கொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக் கட்டத்தினை கருத்திற்கொள்கையில் இலங்கையின் உத்தேசிக்கப்பட்ட பங்களிப்பானது கணிமானது மாத்திரமின்றி மகவும் முக்கியமானதுமாகும். தெற்காசியாவில் மிகவும் விரைவாக வளரச்சியடைகின்ற பொருளாதாரம் என்ற ரீதியில், இலங்கை, நிர்ணயிக்கப்பட்ட சூழல்சார்ந்த இலக்குகளுடன் இணங்கியொழுகுவதற்கு அதன் பொருளாதாரத்தை உயர்ச்சுவட்டு மூலங்களில் இருந்து வேறுபடுத்த வேண்டியுள்ளது மாத்திரமின்றி, நீண்ட காலவோட்டத்தில் பொருளாதார உறுதிப்பாட்டினையும் அடைய வேண்டும். ஆகையினால், பூச்சிய புகைவெளியேற்ற முறைமைகளை எய்துவதற்கு வழிவகுக்கின்ற மீள்புதுபிக்கத்தக சக்தி ஒருங்கிணைப்பு, நிலைபேறான நுகர்வு மற்றும் உறபத்தி போன்ற தீர்மானமிக்க நடவடிக்கை தேசியளவில் முன்னுரிமையளிக்கப்பட்டதாக விளங்குகின்றது. இருந்தும், அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களின் அரசாங்கத் துறையுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் அராங்கத் துறையில் இந்நோக்கிலான நடைமுறைசார்ந்த நடவடிக்கைகளும் வெற்றிகரமான உதாரணங்களும் பெருமளவில் காணப்படவில்லை. அதற்கமைய, பூச்சிய புகைவெளியேற்ற தொழில்நுட்பங்களையும் உபாயங்களையும் நடைமுறைப்படுத்துவதன் வாயிலாக "தேசிய வழிகாட்டல் கருத்திட்டம்" ஆக பூச்சிய புகைவெளியேற்ற அரசாங்க அலுவலகமொன்றினை தாபிப்பதற்கான தொலைநோக்குடன் தேசிய விஞ்ஞான மன்றம் சில முயற்சிகளை எடுத்தது இதனால் அரசாங்கத் துறை, தனியார் துறை மற்றும் பொதுமக்கள் போன்றோர் தனிப்பட்ட மற்றும் தேசிய தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அளவிடப்படக்கூடிய அவர்களது நோக்கெல்லை பற்றிய வெற்றிகரமான தொடர்பு மையமொன்றைக் கொண்டிக்கலாம்.

இம்முயற்சியின் பொதுவான குறிக்கோள்கள், நிலைபெறத்தக்க அபிவிருத்திக்காக குறிப்பாக 7, 8, 9, 12 மற்றும் 13 ஆம் இலக்குகளுக்காக 2030 நிகழ்ச்சிநிரலை அடைவதற்கு இலங்கையில் மிகவும் முன்னுதாரணமான சூழல்-சிநேகமிக்க நிறுவனமாக தேசிய விஞ்ஞான மன்றத்தை மாறுதலடையச்செய்வதாகும். நீர்ச் சுவடுகளைக் குறைப்பதற்கும் சிறிதாக்குவதற்கும், சூழலியல் சுவடுகளை குறைப்பதற்கும் சிறிதாக்குவதற்கும், உள்ளக வளியின் தரத்தினையும் பணியாற்றும் சூலையும் மேப்படுத்துவதற்கும் காபன் சுவடுகளை குறைத்து சிறிதாக்குவதும் காபன் நடுநிலைமையினை எய்துவதும் குறிப்பான குறிக்கோள்களாக அமைந்திருக்கும்.

முன்மொழியப்பட்ட தலையீடுகள்.'.உபாயங்கள்.'.செயற்பாடுகள் மூன்று மடங்கானவை:

குறுகிய காலக் கருத்திட்டங்கள்: தேசிய விஞ்ஞான மன்றத்தை காகிதம் குறைந்த நிறுவனமொன்றாக்குதல், பிரிவுகளினுள் மீள்கட்டமைப்பு - அச்சுக் கருவிகளுக்கான தனியான பகுதி, ஒவ்வொரு மேசைக்கும் உள்ளக மரக்கன்று, நடைபாதைகளுக்கும் ஒவ்வொரு பிரிவுக்கும் மரக்கன்று, வாயுச் சீராக்கிகளை தொடங்குதல் அணைத்தல், வினைத்தமிறன்மிக்க தினமக் கழிவு முகாமைத்துவ உபாயங்கள் மற்றும் தொழில்நுடபங்களை பிரயோகித்தல், கூட்டுப்பசளை அலகொன்றை நிறுவுதல், வீட்டுத்தோட்டத்தைப் பேணுதல், எல்ஈடீ அடிப்படையிலான உள்ளக மற்றும் புற ஒளியூட்டல் என்பனவாகும்

நடுத்தர காலக் கருத்திட்டங்கள்:மழைநீர் சேகரிப்பு முறைமையொன்றை நிறுவுதல், காறோட்ட முறைமைக்கான துய காற்று உள்ளெடுப்பு, நீர் மீதப்படுத்தல் பொருத்துகள், பயன்பாடற்ற நீரை (பகுதியளவில் முன்-சுத்திகரிப்புச் செய்யப்பட்ட) பயன்படுத்துதல்.

நீண்ட காலக் கருத்திட்டங்கள்: கூரைகள் மீது கதிர் மூலம் சக்கி உருவாக்கக் கருவிகளைப் பொருத்துதல், சக்தி முகாமைத்துவ முறைமையினை மேம்படுத்தல், சூரிய ஒளி நேராகப் படுகின்ற யன்னல்களுக்கு(கிழக்கு/ மேற்கு) மெல்லிய உலோகப்படலம் (யன்னல் படலம்) அமைத்தல், உள்ளக மற்றும் புற போக்குவத்து தேவைகளை முகாமைசெய்வதற்கு காபன் நடுநிலை சக்தி அடிப்படையிலமைந்த மின்சார நடமாட்டத் தெரிவுகள், நீரற்ற சிறுநீர் கழிப்பகங்களின் பிரயோகம் மற்றும் வெற்றிட கழிப்பறைகளை பொருத்ததல், சலவைக் கழிவுநீர் மற்றும் மலசலகூட கழவுநீர் வேறுடுத்தப்பட்ட சேகரிப்ப, சுத்திகரிப்பு மற்றும் பயன்பாடு

பரிந்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களின் நடைமுறைப்படுத்தல் மூலம் எவ்வளவு பயன்பாட்டு சேவைக் குறைப்புகள் சாத்தியமாகும் என்பது மீதான கணிப்புகள் எதிர்பார்க்கப்படும் பெறுபெறுகளாகும். பொதுப்பயன்பாடுகள், பயணம் மற்றும் போக்குவரத்து அலுவலகத்திற்கான நுகர்பொருட்கள்.'.காகிதாகிகள், என்பன மீது கணிசமான செலவினக் குறைப்புகளை நோக்காகக் கொண்ட தலையீடுகள், பசுமையான கட்டடங்களுக்கான .'.பசுமைச்

சான்றிதழுக்கான தேசிய, சர்வதேச நியமங்களுக்கு பிரயோகிக்கும் நிலையில் பெறுபேறுகள் இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தின்மக் கழிவு முகாமைத்துவம் மீதான 5ளூ தர வட்டம்

“தேசிய விஞ்ஞான மன்றத்தை காபன் நடுநிலை மாதிரி நிறுவனமாகக்குதல்” இன் கீழ் மற்றும் 5ளூ தரவட்ட கருத்திட்டம் இன் குறிப்பிடப்பட்ட ஒரு குறுகியகால கருத்திட்டத்திற்கு நிறைவளிப்பதற்கு தின்க் கழிவு முகாமைத்துவத்திற்காக தனியான துணைக் கருத்தி-ட்டம் ஒன்று திட்டமிடப்பட்டது. இத்துணைக் கருத்திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளாவன: கழிவுகளை வேறுபடுத்தல் மீது முன் விழிப்புணர்வு நிகழ்சித்திட்டத்தை ஏற்பாடுசெய்தல், உருவாகுப்படும் கழிவுகளின் தரம் மற்றும் வகை பற்றிய கணக்கெடுப்பு, வேறுபட்ட கழிவு வகைகளை அகற்றுவதந்கான அட்டவணைகள் மற்றும் வழிகாட்டல்களைத் தயாரித்தல், அனுமதியினைப் பெற்று நடைமுறைப்படுத்தல், ஆலோசகரொருவரை நியமித்தல், கூட்டுப்பசளைக்கான இடத்தை தெரிவுசெய்தல், திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மீது அலுவலர் விழிப்புணர்வு உயிரியல் ரீதியாக உக்காத கழிவுகள் மீதான செய்றபாடுகளை நடைமுறைப்படுத்தல், உயரியல்ரீதியாக உக்கும் கழிவுகள் மீதான கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்- கூட்டுப்படுத்தல் என்பனவாகும். உலகவாவிய நோய்த்தொற்று நிலைமையினால் குறிப்பிடளவுக்கு தடைபட்ட இக்கருத்திட்டங்களும் செயற்பாடுகளும் 2022 இல் தொடங்கப்பட்டு முன்னெடுக்கப்படும்.

எதிர்கால திட்டமிடல் அறிக்கை

நிகழ்ச்சித்திட்டம்	வழிமுறைகள்	
	குறுகிய காலம்	நடுத்தர காலம்
1. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் உள்ளார்ந்த ஆற்றலை வலுப்படுத்துவதற்கு அடிப்படை மற்றும் பிரயோக ஆராய்சிக்கு வசதியளித்து ஆதரவளித்தல்	• எதிர்பார்க்கப்பட்ட வெளிவருவிளைவுகளை உறுதிசெய்வதற்கு அனைத்து மானியங்களையும் காலமுறையாக மதிப்பிடுதல் • எதிர்பார்க்கப்பட்ட வெளிவருவிளைவுகளை உறுதிசெய்வதற்கு அனைத்து மானியங்களையும் காலமுறையாக மதிப்பிடுதல் • வர்த்தகமயமாக்கலை உறுதிசெய்து அரச-தனியார் பங்குடமை ஊடக தொழிற்துறையை இலக்காக கொண்ட தொழில்நுட்ப அபிவிருத்தியை ஊக்குவித்தல் • விசேடமாக இக்கட்டான தேசிய நெருக்கடியில் தேசிய முன்னுரிமைத் துறைகள் மீது கருப் பொருள் சார் நத.்.உத் தியோகபூர் வ அங்கீகாரமளிக்கப்பட்ட ஆராய்ச்சியை நடாத்துதல் • ஏற்கனவே நிதியளிக்கப்பட்ட ஆராய்ச்சிகளுக்காக இடைவெளிகளை நிரப்புகின்ற ஆராய்ச்சிகளை இனங்காணல் மற்றும் உற்பத்தி.் செயன்முறை அத்துடன் வர்த்தக பெறுமிக்க பெறுபேறுகளைக் கொண்ட வாய்ப்புகளுடன் கூடிய ஆராய்ச்சியை நிறைவுசெய்தல் • ஆராய்ச்சி மற்றும் தொழில்நுடப் தேவைகளை இனங்காணபதற்கு தொழிற்துறையுடன்.் நிறுவனங்களுடன் பங்குடமை நிகழ்ச்சித்திட்டங்களை தொடங்குதல் மற்றும் தேவைகளை நிறைவுசெய்வதற்கு உபாயங்களைப் பிரயோகித்தல்	• ஆராய்ச்சியில் கண்டறிப்பட்டவற்றை செயல்திறன்வாய்ந்த விதத்தில் பரவச்செய்தல் மற்றும் நடைமுறைப் படுத் தலை வசதிப்படுத்தல் • மனித வள ஆற்றல் உள்ளடங்கலாக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக வசதிகளை மேம்படுத்துவதற்கு மூலவளங்களின் உகப்பாகன பயன்பாடு • தொழில்நுட்ப வசதியினை / வர் தத கமயப் படுத் தலை தொடங்குதல்களை வசதிப்படுத்தல்
